
# மலையகக் கல்வி:

## சில சிந்தனைகளும் ஆலோசனைகளும்





மொழிவரதன்

World Vision

# மலையகக் கல்வி:
## சில சிந்தனைகளும் ஆலோசனைகளும்

**மொழிவரதன்**

*அனுசரனை*

World Vision
**Nuwara Eliya ADP**

நூலின் பெயர் : மலையகக் கல்வி :
சில சிந்தனைகளும் ஆலோசனைகளும்

நூலாசிரியர் : மொழிவரதன்
க. மகாலிங்கம் BA (Cey) Dip in Ed
S.L.P.S Ret ADE

முகவரி : 34/20 மொழிஅகம்
கணபதிபுரம்
கொட்டக்கலை.

தொலைபேசி : 0724803627, 0512244500

பக்கங்கள் : 135 + IX

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : World Vision
Nuwara Eliya ADP

அச்சிட்டோர் : யுனிவர்சல் அச்சகம் - அட்டன்

Title of the Book : "Malayaga Kalvi :
Sila Sinthanaikalum Alosanaikalum"

First Edition : January 2012

Author : Molivaradhan
C. Mahalingam BA (Cey) Dip in Ed
S.L.P.S Ret ADE

Address : 34/20, "Moliyagam"
Kanapathy puram,
Kotagala

Telephone No : 0724803627, 0512244500

No of Pages : 135 + IX

Copyright© : Author

Publishers : World Vision - Nuwara Eliya ADP

Printed By : Universal Printers - Hatton. 051/2222911

# சமர்ப்பணம்

எனது உயர்கல்வி உயர்வடைய

உற்சாகப்படுத்தி எல்லாவழிகளிலும்

உதவிய எனது அன்பு அண்ணன்

கார்த்திகேசனுக்கு இந்நூலை

சமர்ப்பணம் செய்வதில் உளம்

பூரிப்படைகின்றேன்.

மொழிவரதன்

# ஆசிச்செய்தி

மொழிவரதன் எனும் திரு.C. மகாலிங்கம் அவர்களின் "மலையகக் கல்வி : சில சிந்தனைகளும், ஆலோசனைளும்" நூலுக்கான ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்வு கொள்கின்றேன். ஒரு துறை தொடர்பாக சிந்திக்க வேண்டுமானால் அத்துறை சார்ந்த சிறந்த அறிவும், ஆற்றலும் அவசியம். அத்தோடு ஒரு சமூகஞ் சார்ந்த கல்வி அபிவிருத்தியில் ஆலோசனைகளை முன்வைக்க அச்சமூகத்தின்மீது பற்றுறுதியும் அம்மக்கள்சார் அக்கறையும் அவசியம். 1977ம் ஆண்டு ஆசிரியராக கல்விப் புலத்தினுள் புகுந்து ஆசிரியராக, அதிபராக, உதவிக் கல்விப்பணிப்பாளராக கல்விப் பணியில் ஏறக்குறைய 32 வருடகாலம் தொண்டாற்றி ஓய்வு பெற்ற பின்னருங்கூட அதனோடு ஒட்டிய சேவைகளில் தொடர்ந்து ஈடுபடுவதன் காரணமாக இவர் மலையக கல்வி தொடர்பாக சிந்திப்பதற்கு தன்னகத்தே தேவையான அறிவையும் புலமையையும் கொண்டுள்ளதோடு, மலையக மண்ணின் மைந்தரான இவரின் எழுத்துக்கள் எமது சமூகஞ் சார்ந்த அக்கறையை எமக்கு வெளிக்காட்டியுள்ளதை நாம் அறிவோம். ஆகவே மலையக கல்வி பற்றி சிந்திப்பதற்கும் மேலும் அபிவிருத்தி செய்வதற்குமான ஆலோசனைகளை முன்வைப்பதற்கு திரு.C.மகாலிங்கம் அவர்கள் மிகப் பொருத்தமானவர்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளில் மலையக கல்வியில் குறிப்பாக நுவரெலியா பிரதேச பாடசாலைகளின் கல்விப் போக்கு பற்றிய ஒரு நுண்ணிய பார்வையை செலுத்தியுள்ளார். தோட்டப்பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றலுடன் ஆரம்பமான எமது மலையக கல்விப்பயணத்தில் ஒரு குறிப்பிட்ட தூரத்தை பல்வேறு பாரிய தடங்கல்களுடன் வெற்றிகரமாக கடந்து வந்துள்ளோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. திரு.C.மகாலிங்கம் போன்றவர்களின் எண்ணங்களும் ஆக்கபூர்வமான கருத்துக்களும் எமது கல்வி வளர்ச்சிக்கு மேலும் உறுதுணையாக இருக்கும் என நம்புகிறேன். இவரின் எழுத்துப்பணி மேலும் வளர ஆசி வழங்குவதோடு, வாழ்த்துகிறேன்.

**வாழ்த்துவது**
**எஸ். பி. இராஜசேகரம்**
**மேலதிக வலய கல்விப் பணிப்பாளர்**
**வலய கல்விப்பணிமனை**
**நுவரெலிய.**

# அணிந்துரை

மொழிவரதன் எனும் புனைபெயரில் எழுதி வருகின்ற C. மகாலிங்கம் சிறுகதை, கவிதை, குறுநாவல், பத்தி எழுத்து, கட்டுரை எனப்பன்முக ஆற்றலைக்கொண்ட ஒருவர். இதனை அவரது ஆக்கங்கள், நூல்கள் துலாம்பரமாகக் காட்டுகின்றன. இதேவேளை தொழில் ரீதியாக இவரது பின்புலம் இவரை ஒரு கல்வியியலாளராக இனம் காட்டுகின்றது.

ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக, வளவாளராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக தனது அனுபவ முத்திரைகளை பதித்தவர். இவர் நுவரெலியா கோட்டம் 3இல் (ஹோல்புறுக்) கல்விப் பணிப்பாளராக இருந்த வேளையில் ஆரம்பக்கல்வியில் பின்தங்கிய அல்லது (Slow Learners) மெல்லக்கற்போருக்கான ஒரு செயற்றிட்டத்தை அறிமுகப்படுத்தி இருந்தார். இந்த செயற்றிட்டம் World Vision ஆல் ஏற்கப்பட்டு எம்மால் நடைமுறைக்கு இடப்பட்டதுடன், அச்செயற்றிட்டத்தை மேற்பார்வை செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உண்மையில் இச்செயற்றிட்டம் தரம் 2, 3, 4 வகுப்புக்களில் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த உதவியதுடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் உயர்ச்சிக்கும் உதவியது. இதேபோல் C. மகாலிங்கம் எனும் மொழிவரதன் அவர்களது மொழி தொடர்பான ஆர்வம் தமிழ்மொழி அபிவிருத்தி வேலைத்திட்டத்தை (Tamil Language Development Programme) முன்னெடுக்கத் தூண்டியது. இச்செயற்றிட்டத்தை பயன்படுத்திக் கொண்ட பாடசாலைகள் மொழித்திறன் விருத்தியில் முன்னேற்றம் கண்டன.

குறிப்பாக கிளன்லைன் தமிழ் மகா வித்தியாலயம், ஹோல்புறூக் தமிழ் மகா வித்தியாலயம், மராயா தமிழ் மகா வித்தியாலயம் என்பன மிகச்சிறப்பாகவே பயனைக் கண்டன. எனவே World Vision நிறுவனத்தோடு இணைந்து செயற்படுவதிலும், ஆலோசனை வழங்குவதிலும் மகாலிங்கம் சேர் என்றும் பின்நின்றதில்லை. அவரது அனுபவங்களையும், அறிவுத்திறன்களையும் ஏனையோரும் பெற்று பயன்பெற விழைகிறோம். இந்நோக்கில் அவரது கல்விசார் கட்டுரைகளை வெளியிடுவதன் மூலம் World Vision பெருமை கொள்கிறது. குறிப்பாக நுவரெலியா கோட்டம் 3 (ஹோல்புறுக்) தொடர்பாக பல ஆய்வுகளையும், தரவுகளையும், ஆலோசனைகளையும் இக்கட்டுரைகள் உள்ளடக்கி இருப்பதுடன் மாத்திரமல்லாது பொதுவான மலையக அபிவிருத்தி தொடர்பாகவும் பல சிந்தனைகளையும் இந்நூல் கூறி உள்ளதை மறுத்தல் இயலாது.

"மலையகக் கல்வி சில சிந்தனைகளும், ஆலோசனைகளும்" எனும் இந்நூல் மூலம் மொழிவரதன் கூறும் செய்திகள் பல. இதுபோன்ற படைப்புக்கள் மேலும் பல வெளிவர வேண்டும் என வேண்டி வாழ்த்துகிறேன்.

**எஸ். எம். ஜுட்தவராஜா**
**முகாமையாளர்**

**World Vision**
Nuwara Eliya ADP

# எனது உரை

"மலையகம்" 'மலையக கல்வி அபிவிருத்தி' என்ற சொற்பதங்கள் கல்வியியலாளர்களினாலும், அரசியல், சமூக செயற்பாட்டாளர்களாலும் அண்மைக் காலங்களில் மிக அதிகமாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சிந்தனை ஒரு சமூகத்தின் எழுச்சிக்கான வித்து எனக் கூறின் அது மிகை இல்லை.

மலையக வரலாற்று நிகழ்வுகள் இம்மக்கள் கூட்டத்தை கல்வியில் பின்னடையச் செய்துள்ளது எனலாம்.

இந்நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த அதே காலகட்டத்தில் இந்திய வம்சாவளியினருக்கு அச்சுதந்திர சுவாசக்காற்றை சுவாசியாது தடுப்பதற்கு தாழ்ப்பாள் இடப்பட்டது. இம்மக்களின் அரசியல் உரிமையான பிரஜாஉரிமை பறிக்கப்பட்டது. இதன் விளைவாக இம்மக்கள் கூட்டம் பல வருடங்கள் (ஏறத்தாழ 30 வருடங்கள்) கல்வி, பொருளாதார, சமூக, அந்தஸ்த்தில் பின்னடைய நேரிட்டது.

இக்காலகட்டத்திலிருந்து சற்று பின்னோக்கிச் சென்று பார்க்கும்பொழுது சமய அமைப்புக்கள், தனிப்பட்ட சில அமைப்புக்கள், பிரமுகர்கள் இந்திய வம்சாவளியினரது குழந்தைகளின் கல்வி பற்றி சிந்தித்து செயற்பட்டுள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது. அவற்றுள் கிறிஸ்தவ அமைப்புக்கள் (The Christian Mission) அங்கிளிக்கன் மிஸன் (The Anglicans Mission) மெதடிஸ்த அமைப்பு (Methodists mission) புரட்டஸ்தாந்து மிஸன் (Protestant Mission) றோமன் கத்தோலிக்க அமைப்பு (The Roman Catholics Mission) போன்றனவும் இன்னும் சிலவும், பெருந்தோட்டப் பகுதிகளிலும் அதனை அண்டிய நகர்ப்பகுதிகளிலும் பாடசாலைகளை அமைத்துள்ளன. மதப்பிரசாரம் அதன் மற்றொரு நோக்காக இருந்தாலும் இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கான மிக ஆரம்ப எழுத்தறிவு மேற்கொண்டதில் இவர்களுக்கு ஓரிடம் உண்டு எனலாம்.

மேலும் தனிப்பட்ட நபர்கள் மலையக கல்வி மேம்பாட்டுக்காக உழைத்துள்ளனர். கண்டியில் பி. டி. இராஜன் அசோகா விடுதியை 1927 இல் (Asoka Hostel) ஆரம்பித்து பல மலையக மாணவர்களுக்கு தமது கல்வியைப் பெற காரணமாகி உள்ளார். இதுபோல் பதுளையில் அமரர் மொடர்ன் இரட்ணசாமி அவர்கள் பதுளை பசறை இரண்டாம் மைல் கல்லில் பாரதி கல்லூரி அமைய துணைபுரிந்தார். இப்படிப் பலர். பூண்டுலோயாவில் பூண்டுலோயா த.ம.வி கந்தசாமி என்பவராலும் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி 1924 இல் இந்து வாலிபர் சங்கத்தாலும் ஆரம்பிக்கப்பட்டது என்று கூறிச் செல்லலாம்.

தேசிய கலாசார எழுச்சி ஏற்பட்ட பொழுது பௌத்த, இந்து மதக்கலாசார விழிப்புணர்வுடன் பாடசாலைகளை அமைத்தல் வேண்டும் என முறையே அநகாரிக தர்மபால, ஆறுமுக நாவலர் போன்றோர் இலங்கையின் தேசிய ரீதியான கல்வி வளர்ச்சிக்கு தத்தமது பங்களிப்பை செய்துள்ளனர்.

மலையக கல்வியின் பிரதான வளர்ச்சி, அபிவிருத்தி என்பது சுதந்திரத்தின் பின்னரான காலம் எனும்போது 1977 க்கு பின்னரே எனத் துணியலாம். அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தோடு ஜேர்மன் அரசின் (GTZ) உதவியுடனும் நோர்வே அரசின் (SIDA) உதவியுடனும் முன்னெடுக்கப்பட்ட பல வேலைத்திட்டங்கள் கல்வி வளர்ச்சிக்காக அடித்தளமாகின எனலாம்.

402 ஆசிரியர் நியமனத்தோடு இறுதியாக பெருந்தொகையான 3179 வரை பல ஆசிரிய நியமனங்கள் ஆசிரிய வளத்தேவையை பூரணப்படுத்த வழங்கப் பட்டதோடு ஒரு புதிய கல்வியியலாளர் கூட்டம் உருவாக வழி செய்தன.

மத்திய மாகாணத்தில் தமிழ் கல்வி அமைச்சும், ஊவா மாகாணத்தில் தமிழ் கல்வி அமைச்சும் சில வேலைகளை செய்துள்ளன. குறிப்பாக மத்திய மாகாணத்தில் மேலதிக கல்வி பணிப்பாளர்களை வலயங்கள் தோறும் நியமனம் செய்தல், பாடத்திற்கு பொறுப்பான கல்வி பணிப்பாளர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள், கோட்டக்கல்வி பணிப்பாளர்கள் போன்றோர் நியமனம் பெற மாகாண தமிழ் கல்வி அமைச்சு காரணமாக இருந்துள்ளமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

எனவே, மலையகம், மலையகக் கல்வி பற்றி சிந்திக்கும், செயற்படும் குழாமுடன் என்னையும் இணைத்துக் கொள்வதில் யான் பெருமை அடைகின்றேன். யான் அவ்வப்போது வீரகேசரியின் ஞாயிறு "குறிஞ்சிப்பரல்கள்" பகுதிக்கும், தினகரனின் ஞாயிறு பதிப்பின் "மலைக்கதிர்" பகுதிக்கும் எழுதிய மலையக கல்வி தொடர்பான கட்டுரைகள் பல கல்வியியலாளர்களினதும், வெகுஜனங்களினதும் பாராட்டைப் பெற்றன. குறிப்பாக வீரகேசரி வாரவெளியீடு பொறுப்பாசிரியர் வி. தேவராஜா, தினகரன் மலைக்கதிர் பகுதி பொறுப்பசிரியர் அருள் சத்தியநாதன், நண்பரும் சிரேட்ட விரிவுரையாளருமான டி. தனராஜ், கலாநிதி ஏ.எஸ். சந்திரபோஸ், பிரதிகல்வி பணிப்பாளர் ஏ. இராசையா போன்றோர் அன்புடன் என்னைப் பாராட்டி ஊக்குவித்தனர். அவர்களின் ஊக்கம் என்னை எழுதத் தூண்டியது. ஆலோசனைகள் என்னை புடம் போட்டன. இவர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதில் உளம் மகிழ்கிறேன்.

எனது கல்வி தொடர்பான கட்டுரைகளை நூலுருவில் கொணரல் வேண்டும் என்றும், எனது கட்டுரைகள் பலருக்கும் பலன் உடையதாதல் வேண்டும் எனவும் அங்கலாய்ப்பவர் உலகதரிசனத்தின் ஹோல்புறுக் பகுதி பொறுப்பாளர் / முகாமையாளர் எஸ்.எம். ஜுட்தவராஜா அவர்கள் ஆவார். அவரது அனுசரணை இல்லாதிருந்தால் இது நூலாக வெளி வந்திருக்காது. எனவே, World Vision முகாமையாளரும், மலையகக் கல்வியின் வளர்ச்சிக்காக என்றும் உதவ முன்நிற்பவருமான எஸ். எம். ஜுட்தவராஜா அவர்களுக்கும், அந்நிறுவனத்திற்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் ஆசிரிய ஆலோசகர் S. தவராஜா அவர்களின் பங்களிப்புக்கும் நன்றி நவில்கின்றேன்.

இறுதியாக ஒன்று,

"நீங்கள் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் எனப் பலருடன் நல்ல விடயங்களை உரையாடுகிறீர்களே..... கல்வி தொடர்பான இவற்றை ஏன் எழுதக் கூடாது.....? " என எனது மனைவி மஞ்சுளா கேட்பார். அதன் விளைவே எனது முதல் கட்டுரை, பின்னர் தொடர்ந்து எழுதப்பட்ட கட்டுரைகள். தூண்டியாக எனக்கு பின்னால் நின்று என்னை ஊக்குவித்த அவருக்கு நன்றி கூறாமல் என்னுரை பூரணம் அடையாது. அவருக்கும் எனது நன்றிகள்...!

**மொழிவரதன்**

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | மலையக கல்வி வரலாறு | 01 |
| 02. | மலையக கல்வி வரலாறு சில பக்கங்கள் / பதிவுகள் | 07 |
| 03. | மலையகமும் ஆரம்ப கல்வியும் | 10 |
| 04. | நுவரெலியா கல்வி வலயத்தில் ஆரம்ப கல்வியில் அபிவிருத்தி அவசியம் | 15 |
| 05. | பிள்ளைகளின் கல்விக்கு பெற்றோர்களின் அர்ப்பணிப்பு அவசியம் | 19 |
| 06. | மலையக பாடசாலைகளும் புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளும் | 22 |
| 07. | மலையக பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் முறை | 29 |
| 08. | மொழி கற்பித்தலும் மலையகப் பாடசாலைகளும் | 33 |
| 09. | மலையக பாடசாலைகளில் வகுப்பறை முகாமைத்துவம் | 37 |
| 10. | தமிழ்க்கல்வியும் மலையக ஆசிரியர்களும் | 39 |
| 11. | மலையக ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கும் முறை | 44 |
| 12. | வகுப்பறை மாணவர்களின் பயிற்சி பட்டறை | 47 |
| 13. | கவன ஈர்ப்பை பெற வேண்டிய இடைநிலை பாடசாலைகள் | 51 |
| 14. | மலையகமும் வாசிப்பின் முக்கியத்துவமும் | 56 |
| 15. | மலையக பாடசாலையும் தொடர்பாடலும் | 64 |
| 16. | மலையகத்தில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுவதன் மூலம் உயர் கல்வியை வலுவடையச் செய்யலாம். | 68 |
| 17. | 2009 க.பொ.த.சாதாரண தர பெறுபேறுகளும் மலையக பாடசாலை மாணவர்களும் | 71 |

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 18. | மலையக பாடசாலைகளில் பண்புசார் விருத்திமுறை பயன்படுத்தப்படுகின்றதா | 76 |
| 19. | மலையகமும் மத்திய கிழக்கும் | 79 |
| 20. | மலையக பாடசாலைகளும் கடந்த காலங்களில் அரசின் செயற்பாடுகளும் | 84 |
| 21. | மலையக சமூகமும் புதிய சவால்களும் | 89 |
| 22. | மலையகமும் பல்கலைக்கழக பிரவேசமும் | 92 |
| 23. | மலையகத்துக்கென தனியான பல்கலைக் கழகம் சாதகமாகச் சிந்திப்போரே இன்று நமக்குத் தேவை | 96 |
| 24. | மலையக கல்வியில் விழிப்புணர்வு | 100 |
| 25. | ஆமை மீதேறி பயணம் செய்யும் "ஆக்ராஸ்" கல்வி அபிவிருத்தி | 105 |
| 26. | அதிபர் ஆசிரியர்களிடையிலான நல்லுறவே பாடசாலையை அபிவிருத்தி அடையச் செய்யும் | 111 |
| 27. | மலையகக் கல்வி : சிந்தனைக்கும் செயலூக்கத்திற்கும் சில விடயங்கள் | 114 |
| 28. | மலையகத்தில் பிரபல பாடசாலைகள் உருவாக்கப்படல் வேண்டும். | 117 |
| 29. | ஒரு பாய்ச்சலைப் போன்ற விரைவு கல்வி அபிவிருத்தியே நுவரெலியாவுக்குத் தேவை | 119 |
| 30. | மலையகத்தின் எதிர்கால கல்வி எவ்வாறு அமைய வேண்டும்? | 124 |
| 31. | மலையக இளம் சமுதாயத்தினருக்கு சிறந்த தொழிற்றுறை வழிகாட்டல் தேவை | 132 |

# மலையகக் கல்வி வரலாறு

மலையக கல்வி வரலாறு பற்றிப் பலர் காலத்துக்குக் காலம் குறிப்புகளை தந்து சென்றுள்ளனர். கல்விப் புலத்தில் உள்ள அனைவரும் அதனை அறிந்துள்ளனர் எனல் இயலாது. மலையகப் பாடசாலை வரலாற்றினை சரியாக அறியாத பலர் உள்ளனர் என்பது பல அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளர்களுடன் உரையாடிய போது கண்டறியக் கூடியதாக இருந்தது.

தான் கடமை புரியும் துறை சார்ந்த விடயங்களைத் தேடி அறிதல் மூலமே அத்துறை சார்ந்த நிபுணத்துவத்தைப் பெறல் இயலும்.

மலையகம் சார்ந்த கல்வி பற்றி ஆராய்ந்தவர்களுள் ஞானமுத்துவும் ஒருவர். பெருந்தோட்டப் பகுதிகளில் ஆசிரியரா கவும், பின்னர் தொழில் உதவி ஆணையாளராகவும் கடமை புரிந்து ள்ள இவர் தந்துள்ள குறிப்புகள் பலனுள்ளவையாக உள்ளன எனில் மறுப்பதற்கில்லை.

இலங்கை சுதந்திரம் பெற்ற வேளையில் இந்திய வம்சாவளியினரின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டது. இதன் பின்னர் அரசியல் உரிமைகள் அற்றவர்களாக இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் வாழ்க்கையை ஓட்டிய வேளையில் இவர்கள் தம் கல்வி பற்றி கூறத் தேவையில்லை. ஏறத்தாழ முப்பது வருடங்களின் பின்னர் 1977 இல் நுவரெலியா, மஸ்கெலியா தொகுதியில் போட்டியிட்டு மூன்றாவது இடத்திற்கு தெரியப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் இம்மக்களின் கல்வி பற்றி சிந்தித்த ஒரு தொழிற்சங்கவாதியாக நாம் காணுகிறோம். தனது நிதியில் மாத்திரமல்லாது ஆட்சியிலிரு ந்தவர்களுடன் கலந்துரையாடியதன் மூலம் விசேட நிதியையும் பெற்று மலையக பெருந்தோட்டத் துறைப் பாடசாலைகளுக்கு பௌதீக, மனித வளங்களைப் பெற்று கொடுத்ததின் மூலம் தனது முழுமையான பங்களிப்பினை வழங்கினார். அது மாத்திரமல்லாது வெளிநாட்டு நிறுவனங்களான ஜேர்மனிய "GTZ", நோர்வேயின் "Sida' போன்றவற்றின் ஊடாக பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க அரசியல் ரீதியாக அழுத்தம் கொடுத்தார்.

இதன் விளைவாக GTZ மூலம் கொட்டகலைப் பிரதேசத்தில் பல பாடசாலைகள் பௌதீக வளங்களையும், உபகரணங்களையும் பயிற்சிக்கான வாய்ப்புகளையும் பெற்றுக்கொண்டன. மேலும் பத்தனையில் அமைக்கப்பட்ட பெருந்தோட்ட மாணவர்களுக்கான ஸ்ரீ பாத கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களின் வளப்பற்றாக் குறையை குறைக்க உதவி வருகின்றது.

Sida நிறுவனம் மலையகத்தின் பல மாவட்டங்களிலும் தனது கல்வி அபிவிருத்திப் பணியினை முன்னெடுத்தது. அதன் தொடர்ச்சி யாக RIERP செயற்றிட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பின்னணியில் பார்க்கும்பொழுது அரசு என்ற வகையில் பெருந்தோட்ட மக்களின் கல்வி அபிவிருத்திக்காக பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு இலங்கை அரசுக்கு உள்ளது எனலாம்.

வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி உதவியினூடாகப் பல வேலைத்திட்டங்கள் மலையகப் பகுதிகளில் முன்னெடுக்க தனது தார்மீக பங்களிப்பை செய்துள்ளது என்பது இதன் மற்றொரு பக்கம் எனலாம்.

'PSEDP" திட்டத்தின் மூலம் க.பொ.த (சா/த) பெறுபேற்றினை அடிப்படையாகக் கொண்டு ஒரு சேவை முன் பயிற்சியின் பின்னர் மலையக இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க (1985, 1986 காலங்களில்) இலங்கை அரசு முன்வந்தது. தொடர்ந்து காலத்துக்குக் காலம் ஆசிரிய நியமனங்களை வழங்கி இறுதியில் 3179 ஆசிரியர் நியமனங்களையும் வழங்கி திறைசேரியில் நிதியினை (பல கெடுபிடிகளுக்கிடையில்) ஒதுக்கியமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

காலம் கடந்த பின்னர் இன்று பின்னோக்கி (இன்றைய சூழ்நிலையில்) பார்க்கும் பொழுது மலையக கல்வி வளர்ச்சி பற்றிய ஒரு தொடர்ச்சி இருந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது எனலாம். தொடர்ந்து ஏற்பட்ட மலையக அரசியல் விழிப்புணர்ச்சி மலையகக் கல்வி பற்றிய ஆர்வம் பல விடயங்களை சாதிக்க உதவியது.

மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணக் கல்விப்பணிமனைகளில் மேலதிக உதவி கல்விப் பணிப்பாளர்கள் நியமனம், ஆசிரிய ஆலோசகர்கள் நியமனம் போன்றனவும் இந்தப் பின்னணியில் எழுந்தவையே.

விமர்சன ரீதியான பல கருத்துகள், குறைபாடுகள் அவ்வப்போது முன்வைக்கப்பட்டாலும் இவைகள் நிகழ்ந்துள்ளன என்பது ஓர் உண்மையாகும்.

மலையக கல்வி வரலாற்றின் ஆரம்ப காலங்கள் மிக சோகம் நிறைந்தன என்பதில் சந்தேகமில்லை. மிக ஆரம்பத்தில் கங்காணியே மிகப் பிரதானமானவராகத் தோட்டத்தில் காணப்பட்டார். எனவே தோட்டங்களில் கல்வி தொடர்பான ஏற்பாடுகளை செய்வதிலும் அவரது பங்கு பெறப்பட்டது. எனவே மிக ஆரம்பத்தில் இரண்டு வகையான பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டன.

1). கங்காணி பிற உத்தியோகத்தர்களான கிளார்க்கர், கண்டக்டர், கணக்குப்பிள்ளை போன்றவர்களின் பிள்ளைகளுக்கான பள்ளிக்கூடம்.

2). மற்றது ஏனைய சாதாரண பிள்ளைகளுக்கான பள்ளிக்கூடம்.

மேலும் கங்காணி மற்றும் உத்தியோகத்தர் தத்தமது பிள்ளைகளுக்கு மேலதிகமாக ஆங்கிலம் போன்ற பாடங்களையும் கற்பித்தனர்.

இரவுப் பாடாசாலைகளில் காலப்போக்கில் தொழிலாளர்களின் பிள்ளைகள் ஆசிரியர்களானார்கள். இப்பிள்ளைகள் ஔவையாரின் நீதி நூல்களையும், புராணங்களையும் ஒப்புவிக்கும் மாணவர்களாக காணப்பட்டனர். திண்ணைப் பள்ளிகளாக காணப்பட்ட இப்பள்ளிகள் லயங்களில் இயங்கின. இதிகாச, புராணக் கதைகள், சாஸ்திரம், கிரக நட்சத்திரம் பார்க்கும் பழக்கம் காணப்பட்டது. மாணவர்கள் திருவிழாக்காலங்களில் இந்திய விழாக்களைப் போல கோலாட்டம், கும்மி, கரகாட்டம் ஆடும் பழக்கம் காணப்பட்டது.

இந்தியாவிலிருந்து வந்திருந்த இத்துறை சார்ந்தோர் அதே பாரம்பரியத்தை மலையகத்திலும் பழக்கி பின்பற்றினர் எனலாம். 1904 இல் 179 பாடசாலைகள் கூலி லயன்களில் இருந்ததாகவும் 120 கட்டிடங்கள் உத்தியோகத்தர்களினால் வழங்கப்பட்டதாகவும் அரச உதவியால் இயங்கியது 60 (அறுபது) எனவும் கூறப்படுகின்றது. இங்கு குறிப்பாக கூற வேண்டிய ஒன்று இந்திய வம்சாவளியினரான தொழிலாளர்களை 'இந்திய கூலி' என்றழைப்பது வழக்கமாக இருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

மனிதாபிமானம் கொண்ட தோட்ட முதலாளிகள் சிலராலும் கல்வி நலன் பற்றி சிந்திக்கப்பட்டு பங்களிப்பு செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். ஜோர்ஜ் பேர்ட் (George Bird) A.M. பேர்குஷன் (A.M.Fergusion) போன்றோரை உதாரணத்துக்குக் கூறலாம். எனினும் தொழிலாளர்களின் உள்ளங்களை வெல்வதன் மூலம் மத மாற்றம் நிகழ்ந்ததானது மறைக்க முடியாத இதன் மற்றொரு பக்கம் எனில் மறுப்பதற்கில்லை. இப்போக்கு இலங்கையில் அந்நியர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு பொதுவான நெறியாக இருந்தது எனலாம். வடக்கு, கிழக்கு, மேல் மாகாண கரையோரக் கிராமங்களில் இவ்வாறு நிகழ்ந்தமையை வரலாறு கூறுகிறது.

பெருந்தோட்டப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் மிக ஆரம்பத்தில் கோப்பி, தேயிலை பயிர்களுக்கு குழந்தைகளால் ஊறு ஏற்படக்கூடாது என்பதற்காகவே பிள்ளைகளின் காப்பகம் என்ற முறையில் பள்ளிக்கூடம் தோற்றம் பெற்றது என்பது ஓர் உண்மையாகும். இதன் படிப்படியான வளர்ச்சிதான் கிளார்க்கர் ஒருவர் தோட்டத்தில் காலை நேரம் வாத்தியாராகவும், பிற்பகலில் கிளார்க்கராகவும் உருவாக்கப்பட்ட முறையாகும்.

இந்த ஏற்பாட்டில் தோட்டத்துகுழந்தைகள் கட்டாயம் பள்ளி செல்ல வேண்டும் என்று விதிக்கப்பட்டதும் அதற்காக பிள்ளை களை கூட்டிச் செல்ல கங்காணி ஒருவர் நியமிக்கப்பட்டது மாகும். இம்முறை இன்றும் கூட சில பெருந்தோட்டப் பாடசாலைகளில் தொடர்ந்து வருகின்றன.

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு தோட்டத்து உத்தியோக த்தர்களின் பிள்ளைகள், கங்காணிமாரது குழந்தைகளுக்கு மிக ஆரம்ப த்தில் சாதாரண இப்பாடசாலைகளுக்கு சென்றனர்.

எனினும் காலப்போக்கில் தோட்டத்தை அண்மித்த நகரப் பாடசாலைகளில் அவர்கள் தத்தமது பிள்ளைகளை சேர்க்கத் தலைப்பட்டனர். தோட்டத் தொழிலாளரது பிள்ளைகளில் பெரும் பாலானோர் ஆரம்பக்கல்வி பாடசாலைகளான பெருந் தோட்டப் பாடசாலைகளிலேயே பயின்றனர். பெருமளவில் அன்றும் இன்றும் ஆரம்பக் கல்வி பாடசாலைகளே இங்கு காணப்படுகின்றன எனலாம். பிரித்தானிய வெள்ளையர்களின் நோக்கத்தை மற்றொரு வார்த்தையில் கூறுவதானால் பதினொரு, பன்னிரெண்டு வயதை அடையும் வரைக்குமான ஓர் இடைக்கால ஏற்பாடாகவே இப்பெருந்தோட்டப் பாடசாலைகள் காணப்பட்டன. இதன் பின்னர் இவர்கள் பெருந்தோட்டத்தில் வேலைக்காக பெயர் பதியப்பட்டனர்.

பெருந்தோட்டத்துக்குள்ளேயும், அதனை அண்மிய நகரப் பகுதிகளிலும் பாடசாலைகளை ஆரம்பிப்பதில் கிறிஸ்தவ மிஷனரிகளின் செயற்பாடுகள் முக்கியமானதாக இருந்தன.

அங்கிலிக்கன் அமைப்பு (The Anglicans mission), கிறிஸ்தவ அமைப்பு (The Christian Mission) மெதடிஸ்த அமைப்பு (Methodist Mission), புரட்டஸ்தாந்து அமைப்பு (Protestant Mission), றோமன் கத்தோலிக்க அமைப்பு (The Roman Catholic Mission) போன்ற இன்னும் பல மிஷன்கள் மலையக கல்விப் பரப்புக்கும் மாத்திர மல்லாது பொதுவாகவும் தத்தமது பங்களிப்பை செய்துள்ளன.

என்றாலும் காலப்போக்கில் இலங்கையில் உருவான தேசிய எழுச்சியின் விளைவாக பௌத்த, இந்து, இஸ்லாமிய தேசிய வாதிகள் தேசிய மதங்களின் உயர்ச்சிக்காகவும், கலாசார விழுமியங்களுக்காகவும் கிறிஸ்தவ செயற்பாட்டைத் தவிர்த்திட விழைந்தனர்.

1962 ஆம் ஆண்டு பாடசாலைகள் தேசியமயமாக்கலுடன் அதே கிறிஸ்தவ பாடசாலைகள், பௌத்த, இந்து பாடசாலைகளாக பரிணமித்தன. ஒரு சில மாத்திரம் பழைய பாரம்பரிய கலாசார மதப் பின்னணியில் இயங்கி வருகின்றன.

மலையக கல்வி அபிவிருத்தியை பாரக்கும் பொழுது இலங்கை தேசத்தவர்களான தனிநபர்களின் முயற்சியால் பல பாடசாலைகள் உருவாகி வளர்ந்து வந்துள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது.

எமக்குக் கிடைத்த தகவல்களின் படி மலையகப் பிரதேசங் களில் பின்வரும் பாடசாலைகளை கூற இயலும். பூண்டுலோயாவில் பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயம் அமரர் திருவாளர் கந்தசாமி என்பவராலும், பதுளையில் பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரி பதுளை கனிஷ்ட சரஸ்வதி என்பன சைவ பரிபாலன சபையினரின் முயற்சியாலும், கண்டியில் அசோகா கல்லூரி, விடுதி அமரர் பி.டி.இராஜன் அவர்களின் முயற்சியாலும், ஹோல்புறூக்கில் ஹோல்புறூக் தமிழ் மகா வித்தியாலயம் அமரர்களான முத்துசாமி, கந்தையா பிள்ளை மற்றும் பெற்றோர்களாலும், கொட்டகலையில் வூட்டன் த.வி. (இன்றைய கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம்) வூட்டன் தோட்ட உரிமையாளர் அமரர் கணபதி, மோகன்துரை அவர்களினாலும் பின்னர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் பங்களிப்பினாலும் வளர்ச்சி பெற்றன.

பதுளை இரண்டாம் மைல் கல்லில் பாரதி தமிழ் மகா வித்தியாலயம் மொடர்ன் ரட்ணசாமி K.N.K. கந்தசாமி மற்றும் பாரதி இராமசாமி என்பவர்களினாலும் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்றுள்ளது.

இது தவிர இன்னும் பல பாடசாலைகள் மலையகத்தில் பலராலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சில தனியார் நிறுவனங் களும் (டியூட்டரிகள்) கூட பெரிய பங்களிப்பினை மலையகக் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றி உள்ளன. இவ்வாறான விடயங்கள் தேடப்பட வேண்டியதும் ஆய்வு செய்யப்பட வேண்டியதும், பதிவு செய்யப்பட வேண்டியதும் ஆகும்.

எனவே, மலையக கல்வி வரலாற்றில் பல பக்கங்கள் காய்தல் உவத்தலின்றி பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். வெறும் அரச முயற்சியால் மாத்திரமல்லாது தனி நபர்களினாலும் கூட கல்வி மேம்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருக்கின்ற பிரயத்தனங்கள் மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டியதும் தேடப்பட வேண்டியதும் ஆகும். சமூக செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள், புத்தி ஜீவிகள்,

அதிபர்கள், அதிகாரிகள் எனப் பலர் இப் பின்புலத்தில் உள்ள பல பாடசாலைகள் அதிபர்களின் தியாகத்தினாலும், உழைப்பினாலும் தலை நிமிர்ந்துள்ளன. இவைகள் பேசப்பட வேண்டியவை ஆகும். வெளிக் கொணரப்படவேண்டியவை ஆகும். ஆக்கபூர்வமான ஒரு பார்வை இவர்களைப் பற்றி ஆய்வாளர்களுக்கும் கல்வியியலா ளர்களுக்கும் தேவையாகும்.

மலையக கல்வி வரலாறு பற்றிச் சரியாக அறிவதன் மூலமே எமது அடுத்த ஒவ்வொரு காலகட்டத்து கல்விக்கான திட்டங்களை திட்டமிட முடியும். "எழுந்து நடந்திட முயலும்" எமது மலையகக் கல்வி தேசிய நீரோட்டத்துடன் கைகோத்து ஓடிட கடும் உழைப்பே பதிலாக இருக்க முடியும்.

## மலையகக் கல்வி வரலாறு
## சில பக்கங்கள் / பதிவுகள்

1972 ஆம் ஆண்டு காணி சீர்திருத்தத்தின் விளைவாக சில தோட்டங்கள் மூடப்பட்டன. இதன் பிரதிபலிப்பாக தோட்டத் தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்தனர். பதிலாக காணிகள் பக்கத்து கிராம வாசிகளுக்கு வழங்கப்பட்டன.

உழைப்பவனுக்கு நிலம் எனும் கருத்திலேயே காணிச் சீர்த்திருத்தங்கள், தேசிய மய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

ஆனால் இலங்கையில் இச்சீர்த்திருத்தம், பிரித்தானியரின் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக அழைத்து வரப்பட்ட இந்திய வம்சாவளித் தொழிலாளர்களிடமிருந்து மீள அக்காணியைப் பெற்று குறித்த பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின்போது தமது காணியை இழந்த கண்டிய விவசாயிகளுக்கு (KANDYAN PEASANTRY) குடியானவர்களுக்கு மீள வழங்குவதற்கான நோக்கத்தைக் கொண்டிருந்தது. உடரட்ட ஜனதா எனும் மலை நாட்டு சிங்கள மக்களுக்கு வழங்குவதன் மூலம் தனது அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள அமைச்சர் ஹக்டர் கொப்பேகடுவ விழைந்தார்.

மலிவான விலையிலும், சில இடங்களில் பலாத்காரமாகவும் கண்டிய மக்களின் காணிகள் பிரித்தானிய முதலாளிகளால் பெறப்பட்டன. அல்லது பறிக்கப்பட்டன என்பதில் உண்மைகள் இல்லாமல் இல்லை என்பதை பல வரலாற்றாசிரியர்கள் தமது குறிப்புக்களில் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். கண்டிய விவசாயிகள் காட்டு நிலங்களில் சேனைப் பயிர்ச் செய்கை செய்ய உரிமை பெற்றிருந்தனர். இது சட்டப்படியானதாக இருந்திருக்கவில்லை. எனினும் பரம்பரையாக தொடர்ச்சியாக நிலத்தை உபயோகித்ததன் விளைவாக அவ்வுரிமையை கண்டிய விவசாயி / குடியானவன் பெற்றிருந்தான்.

கண்டி பிரதேசம் கோப்பிச் செய்கைக்கு உகந்ததாக இருந்த மையால் பிரித்தானிய முதலாளிகள் அந்நிலங்களைப் பெறுவதில் ஆர்வம் கொண்டிருந்தனர் என்றாலும் நடைமுறையில் சில தடைகளை அவர்கள் எதிர்கொண்டனர்.

இந்நிலையில் 1841 இல் ஆள்பதி ஸ்ருவட் மக்கன்ஸி 9 ஆம் இலக்க முடிக்குரிய காணி சட்டத்தைக் கொணர்ந்ததன் மூலம் கண்டிய குடியானவர்களின் காணிகள் சட்டப்படி கோப்பி முதலாளிகளின் காணிகளாகின. மேலும் 1897 ஆம் ஆண்டு கொணரப்பட்ட முதலாம் இலக்கச் சட்டமான தரிசு நிலச்சட்டம் (Waste Lands Ordinance) முடிக்குரிய காணியை பயன்படுத்துபவர் சட்டப்படி காணி உறுதியுடன் தமது உரிமையை நிரூபிக்காவிட்டால் அந்நிலங்களில் கோப்பி போன்ற பெருந்தோட்டப் பயிரச் செய்கையை செய்ய இடமளித்தது.

அதே வேளை மலையகம் முழுவதற்கும் அதனை பொதுமைப்படுத்தல் இயலாது என்பதனைக் குறிப்பிடல் வேண்டும். உதாரணமாக நுவரெலியா - மஸ்கெலியா போன்ற பகுதிகளில் மிக உயர்ந்த மலைப் பிரதேசங்களில் விவசாயம் இடம் பெற்றிருக்க வழியில்லை. அதேவேளை இவைகள் காடுகளாகவே வனவிலங்களுடன் காணப்பட்டன என்பதும் மனித சஞ்சாரம் இங்கு காணப்பட்டிருக்கவில்லை என்பதற்கும் பல குறிப்புகள் காணப்படுகின்றன. இந்தப் பின்னணியில் காணிச் சீர்திருத்தம் கல்வியில் என்ன தாக்கம் செலுத்தியது என்பது பார்க்கப்பட வேண்டியதாகும். வாழ்வாதாரத்தை மக்கள் இழந்தமையால்

தோட்டங்களை விட்டுச் செல்ல வேண்டி ஏற்பட அங்கு இயங்கி வந்த தமிழ் பாடசாலைகளும் மூடப்பட்டு விட்டன. உதாரணத்திற்கு கீழே வரும் தோட்டங்களைக்குறிப்பிடலாம்.

| | | |
|---|---|---|
| 01. | நாத்தம்புர தோட்டம் | - களுத்துறை |
| 02. | பூட்ஸ் ஸ்டொக் தோட்டம் | - கண்டி |
| 03. | அட்டபாகே | - புஸல்லாவை |
| 04. | புப்புரஸ்ஸ தோட்டம் | - புப்புரஸ்ஸ |
| 05. | கிரிமெட்டிய தோட்டம் | - மெனிக்டிவெல |
| 06. | தாமரபள்ளி தோட்டம் | - தொளஸ்பாகே |
| 07. | குருந்துவத்த தோட்டம் | - பேராதனை |
| 08. | பட்டியாகம தோட்டம் | - தெல்தோட்ட |
| 09. | கிரிடில்லா தோட்டம் | - ரங்கல்ல |
| 10. | யட்டாடெரிய தோட்டம் | - உந்துகொட (Undugoda) |
| 11. | பிரைட்லேண்ட் தோட்டம் | - பொகவந்தலாவை |
| 12. | வாரியப்பொல தோட்டம் | - மாத்தளை |

மேற்குறிப்பிட்ட தோட்டங்களைத் தவிர மேலும் பல தோட்டங் கள் காணி சீர் திருத்தத்தின் விளைவாக மூடப் பட்டிருக்கலாம். மேலும் சமூக ரீதியில் இத் தோட்டங்களில் வாழ்ந்த மக்கள் சிதறடிக்கப் பட்டனர். அவர்களை வேலையின்மை, வறுமை, ஏழ்மை, நோய், பிணி வாட்டின.

மலையக கல்வி வரலாற்றில் இந்த வகையான பல பக்கங்கள் உள்ளன. இவைகள் மூலம் மலையக கல்வியும் காலத்துக்கு காலம் பல பாதிப்புக்களுக்கு உள்ளாகி வந்துள்ளது.

## மலையகமும் ஆரம்பக் கல்வியும்

பெருந்தோட்டங்களைப் பொறுத்தவரையில் ஆரம்பக் கல்வி பாடசாலைகளான தரம் மூன்று பாடசாலைகளே மிக அதிகமாக உள்ளன. காலனித்துவ ஆட்சியின் ஒரு சின்னமாகக் கூட இதனைக் கூறலாம். அண்மைக்கால பெருந்தோட்டப் பாடசாலை அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் சில முனைப்புகள் இதனை மாற்றுவதற்கு முயன்றன என்பதனை மறுப்பதற்கில்லை. இதன் விளைவாக பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட தரம் - 3 (1-5), தரம் - 2 (1-9) வரையிலாவது உயர வழி பிறந்தன. இதன் அடுத்த கட்டமாக சில பாடசாலைகள் தரம் II (க.பொ.த சாதாரணதரம்) வரை சென்றுள்ளன.

இவ்வாறான அபிவிருத்திகள் சில ஆளுமை மிக்க அதிபர்களின் விடா முயற்சியாலேயே இடம்பெற்றுள்ளன. பல உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் துணை நின்றாலும் பாடசாலையை நடத்திச் செல்பவர் அதிபர்தானே. ஆரம்பக்கல்வி என்பது மிக முக்கியமான ஆரம்ப அடித்தளமாகும். ஆரம்பம் பிழைக்கும் எனில் அடுத்ததும் பிழைக்கும்.

ஆரம்பக்கல்வியின் நோக்கம் இலக்கு என்ன? இங்கு எப்படி நோக்கும் (Vision) பணிக்கூற்றும் (Mission) அமைதல் வேண்டும்? அறிவு திறன், மனப்பாங்கை உருவாக்குதல் என்போம். எழுத்து, வாசிப்பு, கேட்டல் திறன் விருத்தி செய்தல் என்போம். தேர்ச்சி மையக்கல்வி பற்றி விளாசி ஆரம்பக்கல்வி பற்றி எடுத்துரைக்கலாம். எழுத்து, வாசிப்பு, கேட்டல் என்பதை மேலும் விரிவாக நோக்கி னால், அந்தந்த வகுப்புகளுக்குரிய எழுத்து, வாசிப்பு, கேட்டல் திறனை மாணவர் பெற்றுவிட்டார்களா? ஆசிரியர், மாணவர், பெற்றோர்கள் இச் சவாலை எதிர்கொள்கின்றனர்.

உறுப்பமைய தெளிவாக விளங்கி பொறி முறையாக எழுதுகின்றார்களா? அரச பாடசாலைகள் அல்லாத பாடசாலை களில் (International Schools, Pre Schools) கல்வி பயில்வோர் மிக அதிக சொற்களை தெரிந்திருக்கின்றனர். அவ்வாறெனில் ஏன் அரச பாடசாலைகளில் இது நிகழவில்லை. சுற்று நிருபத்திற்கு (பாடத்திட்டத்திற்கு) அமைய இங்கு கற்பிக் கப்படுகின்றமையால் இவ்வாறு இங்கு நிகழ்கின்றது.

| வயது | தெரிந்திருக்கும் சொற்களின் தொகை |
|---|---|
| 1 வருடம் | 03 |
| 1 1/2 வருடம் | 22 |
| 2 வருடம் | 272 |
| 2 1/2 வருடம் | 446 |
| 3 வருடம் | 896 |
| 3 1/2 வருடம் | 1222 |
| 4 வருடம் | 1540 |
| 4 1/2 வருடம் | 1870 |
| 5 வருடம் | 2072 |

அதேவேளை ஆரம்பப் பிரிவில் எதனை அடைய நாம் முயல்கிறோம் என்பது தொடர்பாக தெளிவான எண்ணம் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களிடம் இருத்தல் வேண்டும். மாணவர்களை இனங்கண்டு பாடசாலை சூழலை புரிந்து பாடசாலை தேவைக்கு இயைபாக தூரநோக்கும் பணிக்கூற்றும் அமையப் பெறுதல் வேண்டும்.

தேசிய குறிக்கோள் மற்றும், அடிப்படைத் தேர்ச்சிகள் பற்றிய விழிப்புணர்வு, தெளிவு அவர்களுக்கு தேவை. அனுமதிப் பத்திரம் இல்லாத ஓட்டுநர்போல் நம் நாட்டில் ஆசிரியர்கள் வகுப்பறையில் நுழைவது ஒரு 'சாபக்கேடாகும்'. கல்வியியற் கல்லூரிகளைத் தவிர நியமனங்கள் பயிற்சி இல்லாத ஆசிரியர்களை வகுப்பறைக்குள் நுழைக்கிறது அல்லது திணிக்கிறது. பயிற்சி பெற்றவர்களே 'பதம்' ஆகாத வேளையில் பயிற்சியே இல்லாதவர்களை குறைகூற இயலாது.

ஆரம்பக்கல்வியில் ஆரம்பக்கல்விக்குரிய நோக்கங்கள் அல்லது அடைவு மட்டம் எட்டப்பட பல்வேறு வேலைத்திட்டங்களை செயற்படுத்த வேண்டியுள்ளது. ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், செயல் அமர்வுகள், உள்ளக மேற்பார்வை, கோட்ட, வலய, மாகாண மேற்பார்வைகள் மாதிரி பாடசாலை தரிசனம், மாதிரி கற்பித்தல் முறைமைகள், சாதனைகள் புரிந்த அனுபவம் மிக்க ஆசிரியர்களின் கற்பித்தல் உத்திகள் நுட்பங்கள், நவீன கற்பித்தல் சாதனப் பயன்பாடு பற்றிய சாத்தியமான பிரயோக செயற்பாடுகள் (Practical)

போன்றன ஆரம்பக்கல்வியில் மாணவர் அடைவு மட்டத்தினை அதிகரிக்க உதவும்.

பெருந்தோட்டப் பாடசாலைகளில் இவைகள் எல்லாம் நிகழவில்லை என்றால் அது பொருந்தாது. குறிப்பாக மத்திய மாகாணப் பாடசாலைகளில் இந்த எத்தனங்கள் முன்னெடுக்கப் படவே செய்கின்றன. இதனால் மாற்றங்கள் முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்றாலும் மேலும் இதிலுள்ள குறைபாடுகளை எவ்வாறு சீர்செய்யலாம் என்பது பற்றி ஆலோசிக்க வேண்டியுள்ளது.

ஆரம்பக்கல்வியில் குறித்த ஒரு பாடசாலையினை தேசிய ரீதியாக அடையாளப்படுத்தும் ஓர் அளவுகோலே புலமைப் பரிசில் பரீட்சை ஆகும். புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக பல விமர்சனங்கள் இருந்தாலும்கூட ஆரம்பக்கல்வி பாடசாலையின் வெற்றி அல்லது அறுவடை இதிலேயே தங்கி உள்ளது எனலாம். வெட்டுப்புள்ளியை மாணவன் அண்மித்து மேலே சென்றபோதும் அல்லது செல்லாதபோதும் மாணவர்கள் பெற்ற புள்ளிகள் குறித்த பாடசாலையை கணிப்புக்கு உட்படுத்த உதவவே செய்யும்.

மாணவர்களின் தேர்ச்சி மட்டம் கவனத்தினைப் பெறும். புலமைப் பரிசில் பரீட்சையினை பல்வேறு கோணங்களில் பகுப்பாய்வு செய்வது நல்லது. வெற்றிக்கும் அல்லது தோல்விக்கு மான காரணங்களை இனங்காண்பதன் மூலமே பரிகாரத்தைத் தேட இயலும். ஓர் அதிபர் அல்லது ஆசிரியர் காய்தல் உவத்தலின்றி இதனை செய்தல் வேண்டும்.

அண்மைக்கால புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் பற்றிய ஆய்வொன்றினை மேற்கொண்டபோது பல விடயங்கள் வெளிச்சத்திற்கு வந்தன.

**புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் (2005-2008)**

| பாடசாலை X ஆண்டு | விண்ணப் பித்தோர் | தோற்றி யோர் | சித்தி | 100% மேல் | மிகக் குறைவான புள்ளி |
|---|---|---|---|---|---|
| 2005 | 12 | 10 | இல்லை | 109 | 31 |
| 2006 | 12 | 12 | இல்லை | - | 34 |
| 2007 | 05 | 05 | இல்லை | 119 | 84 |
| 2008 | 10 | 10 | இல்லை | 72 | 20 |

மேற்குறித்த பெறுபேறுகள் பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்தன.

கடந்த நான்கு வருடங்களாக இப்பாடசாலையிலிருந்து ஒரு மாணவராவது புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறவில்லை என்பதாகும். பெருந்தொகையான மாணவர்களோ, சமாந்தர வகுப்புக்களோ இப்பாடசாலையில் ஐந்தாம் தரத்தில் காணப்படவில்லை. அதிகூடிய புள்ளிகளாக 109 (2005 இல்) 119 (2007 இல்) 72 (2008 இல்) என்றவாறு காணப்படுகின்றன.

இப்பாடசாலையில் தரம் 1 தொடக்கம் 4 வரையான வகுப்புக்களில் மாணவர் தொகையும் அதிகமாகக் காணப்பட வில்லை. சராசரி 15 மாணவர்களே இருக்கின்றார்கள். ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தரம் 1-5 வரை குறைந்தது நான்கு பேராவது தொடர்ந்து கடமையாற்றி வந்துள்ளனர் என்பது மற்றொரு உண்மையாகும்.

ஆரம்பக்கல்வியில் நாம் எதிர்பார்க்கும் வாசிப்பு, எழுத்து, கேட்டல் போன்ற அடைவு மட்டத்தினை இவர்கள் அடையவில்லை என்பதையே இப்புள்ளிகளும், பெறுபேறுகளும் காட்டுகின்றன. அத்துடன் முறையான வேலைத்திட்டமொன்று புலமைப் பரிசில் பரீட்சைக்கு மேற்கொள்ளப்படவில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

அதிபரின் அல்லது பகுதித் தலைவரின் உள்ளக மேற்பார்வை இல்லை என்பதை இது காட்டுகின்றது. மேற்குறித்த விபரங்கள் நுவரெலியா கோட்டம் 3 இல் குறிப்பிட்ட ஒரு பாடசாலையிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்குறிப்பிட்ட பாடசாலையில் ஆரம்பக்கல்வியின் நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பது தெளிவாகவே புலனாகிறது. இந்தப் பாடசாலையில் இதன் அடுத்த கட்டத்திற்கு (இடைநிலைப் பிரிவிற்கு) எப்படியான மாணவர்கள் வந்தடைவார்கள் என்பது இதன் பின்னர் இப்பாடசாலையிலிருந்து தரம் 10,11 க்கு எவ்வாறான அடைவு மட்டத்தைப் பெற்றவர்கள் செல்வார்கள் என்பதும் கூறத் தேவை இல்லை.

இங்கு ஆரம்பப்பிரிவு கவனிக்கப்படவில்லை என்பதே ஆதங்கமாகும். இதே கோட்டத்தில் மற்றொரு பாடசாலை பின்வருமாறு தனது தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் பெறுபேற்றைக் காட்டி உள்ளது. இக்கோட்டத்தில் இப் பாடசாலையே தொடர்ந்து மிக அதிகமான சித்திபெறும் மாணவர்களை வெளியீடு செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. - 'Y' என்ற பாடசாலை

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் |
|---|---|---|
| 2005 | 28 | 02 |
| 2006 | 54 | 14 |
| 2007 | 52 | 12 |
| 2008 | 36 | 07 |

இப்பாடசாலை ஒரு I C பாடசாலை எனினும் ஆரம்பக்கல்வி கருத்தில் எடுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன. மேலும் குறிப்பாக தரம் 1-5 (ஆரம்பக்கல்வி) வரை உள்ள ஆரம்பக்கல்வி பாடசாலைகளே புலமைப் பரிசிலில் அதிக சிரத்தை எடுக்க வேண்டியவைகளாக ஒருவகையில் உள்ளன எனலாம்.

ஆனால் அது பெருமளவில் நடைபெறுவதில்லை என்பதே உண்மையாகும். அதிபர்கள், ஆசிரியர்கள், கருத்தூன்றி முறைமையான, திட்டமிடப்பட்ட தொடர்ச்சியான செயற்றிட்டத்தை நடைமுறைக்கு உட்படுத்துவது இல்லை என்பதே எனது கருத்தாகும். ஆரம்பக் கல்விக்கு உரிய கேட்டல், வாசிப்பு, எழுத்து எனும் அடிப்படைத் தேர்ச்சிகள் பற்றிய விழிப்புணர்வு தரம் 1,2,3 என பரந்து ஆழ ஊடுருவி திசைமுகப்படுத்தப்படல் வேண்டும்.

பற்பல துணை செயற்றிட்டங்கள், பரிகாரக் கற்பித்தல் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதன் அறுவடையை நாம் புலமைப் பரிசிலில் எப்படியும் எதிர்பார்க்கலாம். எதிர்காலத்தில் புதிய ஆசிரியர்களுக்கான (3179) பயிற்சியின் பின்னர் மலையகத்திலிருந்து நிறையவே எதிர்பார்க்கப்படுகிறது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

## நுவரெலியா கல்வி வலயத்தில்

# ஆரம்பக் கல்வியில் அபிவிருத்தி அவசியம்

நுவரெலியா கல்வி வலயத்தில் ஆரம்பக்கல்வியின் நிலை தொடர்பாக ஒரு சில விடயங்களை வெளிக்கொணர வேண்டிய தேவை உள்ளது. நுவரெலியா கல்வி வலயத்தில் நான்கு கோட்டங்கள் உள்ளன. இவைகளுள் மூன்று நுவரெலியா வலயத்தின் தமிழ் கோட்டங்கள் ஆகும். இவ்வாறான மூன்று கோட்டங்களும் வருடாந்த தொகை மதிப்பீட்டிலிருந்து நூல் விநியோகம் வரை பல விடயங்களிலும் கவனத்திலெடுக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

**கோட்டம் 1 (நுவரெலியா)**

| பாடசாலை வகை | தொகை |
|---|---|
| 1 AB | 03 |
| 1C | 05 |
| தரம் 2- | 09 |
| தரம் 3- | 21 |
| | 38 |

**கோட்டம் II (தலவாக்கலை)**

**இங்கு தரம் 3 (1-5) பாடசாலைகளே மிக அதிகமாக உள்ளன.**

| பாடசாலை வகை | தொகை |
|---|---|
| 1 AB | 03 |
| 1C | 05 |
| தரம் 2- | 08 |
| தரம் 3- | 26 |
| | 42 |

**கோட்டம் (111) (ஹோல்புறூக்)**

**இங்கு தரம் 3 (1-5) அதிகமாக உள்ளமையை குறிப்பிடலாம்.**

| பாடசாலை வகை | தொகை |
|---|---|
| 1 AB | 00 |
| 1C | 04 |
| தரம் 2- | 09 |
| தரம் 3- | 25 |
| | 38 |

இவைகளுள் பெருமளவு பாடசாலைகள் தரம் மூன்று பாடசாலை களாகும். இங்கும் தரம் 3 (1-5) பாடசாலைகள் மிக அதிகமாக உள்ளன.

இந்த விபரங்களின் அடிப்படையில் பார்க்கும்பொழுது ஆரம்பக் கல்வியின் அபிவிருத்தி மிக முக்கியமான ஒன்றாக உள்ளதை அவதானிக்கலாம். ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும், பாடசாலைகளும் மிக அதிகமாக காணப்படுவதன் விளைவாக வலய, கோட்ட மட்ட வேலைத்திட்டங்களில் ஆரம்பக் கல்விக்கான வேலைத்திட்டம் மிகப் பிரதான இடத்தினைப் பெறல் வேண்டும். ஆனால் நடைமுறையில் பெரிய பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி மூன்றாம் நிலையிலேயே வைத்துக் கணிக்கப்படுவது ஒரு குறைபாடாகும்.

இங்கு ஆரம்பக் கல்விக்கான ஆசிரியர் ஆலோசகர்கள் மூன்று கோட்டத்திற்கும் கோட்டத்திற்கு இரண்டாக (இருபது பாடசாலைக்கு ஒரு ஆரம்பக் கல்வி ஆலோசகர் என்ற அடிப்படையில்) ஆறு ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஆலோசகர் தேவைப் படுகின்றனர். இக் கோட்டங்களில் நியமனம் பெற்ற பலர் பல்வேறு காரணங்களினால் மாற்றம் பெற்று சென்றுவிட்டனர். தற்போது எந்த ஒரு கோட்டத்திற்கும் ஆரம்பக் கல்விக்கான ஆசிரியர் ஆலோசகர்கள் இல்லை என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். இதேவேளை ஆரம்பக் கல்விக்கான உதவி கல்வி பணிப்பாளர் ஒருவர் மாத்திரமே உள்ளார். அவரது நிகழ்ச்சி நிரலின்படி அவரால் நுவரெலியா வலயத்தில் 78 பாடசாலைகளையும் மேற்பார்வையிடல் நடைமுறை சாத்தியமற்றது. ஒவ்வொரு பாடசாலைக்கும் நேரடி தரிசனம் செய்து ஆலோசனை, வழி காட்டல் செய்வது இயலாது. ஆனால் செயல் அமர்வுகளினூடாக சில வேலைத்திட்டங்களை அவர் முன்னெடுத்து வருகின்றார். தரவட்டம் (Quality Circle) மூலமாகவும் முன்னெடுக்கலாம். இங்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஆலோசகர் நியமனப் பற்றிப் பார்த்தல் நலம். கடந்த வருடம் விண்ணப்பம் கோரப்பட்டு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. மாகாண கல்வி அமைச்சு இதனைச் செய்தது. இவ் வருடம் பெப்ரவரியில் அனைத்து பாடங் களுக்கும் ஆசிரியர் ஆலோசகர்கள் நியமனம் பெறுவர் என அதிகாரிகளினாலும் மத்திய மாகாண அமைச்சர்களினாலும் கூறப் பட்டாலும் இதுவரை அது வழங்கப்படாத நிலையே காணப்படுகிறது.

கடந்த பல வருடங்களாக ஆரம்பக் கல்வியின் நிலை இவ்வாறே உள்ளது எனக் கூறின் அதில் ஒன்றும் வியப்பில்லை. இது பற்றி காலத்துக்குக் காலம் அமைச்சர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டே வருகின்றது. எனினும் அரச 'சிவப்பு நாடா' சுற்று நிருபம் போன்ற இன்னோரன்ன தடைக்கற்கள், அமைச்சர்கள் நினைத்தாலும் முடிக்க முடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளது.

திடீரென இடைக்காலத்தில் ஏற்படும் ஒரு வெற்றிடத்தை உடன் நிரப்ப முடியாத இந்நிலை காரணமாக ஏற்படும் பாதிப்புகள் பற்பல நுவரெலியா வலயத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வியில் காண முடியும். ஆரம்பக் கல்வி பாடசாலை களான தரம் 3 (தரம் 1-5) பாடசாலைகளில் குறிப்பாக வாசிப்பில் பேசுவதில் எழுதுவதில் மாணவர்கள் இடர்படுவதினைக் காணலாம். முதலாவதாக இவைகளை இனம் காண ஆசிரியர் பல பயிற்சிகளை மாணவர்களுக்கு அளித்தல் வேண்டும். இங்கு ஓர் ஆசிரியர் ஆலோசகரின் துணை தேவைப்படலாம் அல்லது ஆரம்பக் கல்வி உதவிக் கல்வி பணிப்பாளரின் உதவி நிச்சயம் தேவைப்படலாம்.

படிப்படியாக இம்மாணவர் தம் வாசிப்புத் திறனையும் எழுத்துத் திறனையையும் (பொறிமுறையாக எழுதும் திறன்) கேட்டல் திறனையும் அபிவிருத்தி செய்ய ஒரு செயற்றிட்டம் தேவை அதனை செயற்படுத்துகின்றார்களா என மேற்பார்வை செய்து ஆலோசனை வழங்க மேற்பார்வை தேவை தொடர்ச்சியாக இடைவிடாது இச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுவதன் மூலமே ஒரு பலனை காண முடியும். ஆசிரிய ஆலோசகர்கள் இல்லாத நிலையில் கடந்த காலங்களில் சில ஆரம்பக் கல்வி உதவி கல்வி பணிப்பாளர்கள் சிரேஷ்ட ஆசிரியர்களைத் தெரிந்து அவர்களை வளவாளர்களாக உருவாக்கி செயல் அமர்வுகளை செய்தனர். இவ்வாறு பயன்படுத்தப்படுபவர்களுக்கு எதிர்காலத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஆலோசகர் நியமனம் வழங்கப்படும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை என்றே தெரியவருகிறது.

வழமையான பிரமாணங்களுக்கு இயையவே நியமனங்கள் வழங்கப்படலாம். அதாவது போட்டிப் பரீட்சை அதன் பின்னர் புள்ளிகள், நேர்முகப் பரீட்சை அதன் பின்னர் புள்ளிகள் போன்ற பொது நடைமுறையின் கீழ் இவர்களின் விதி நிர்ணயிக்கப்படுகிறது.

வளவாளர்களுக்கான ஒரு சிறு புள்ளி வழங்கப்பட்டாலும் கூட 'நேரடி' யாக இவ்வளவாளர்களுக்கு நியமனம் வழங்கப் படவில்லை.

நுவரெலியா வலயத்தைப் பொறுத்தவரையில் இவ்வாரம்பக் கல்விக்காக நிதி ஒதுக்கீடு தொடர்ந்தும் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் சிலரின் இராஜினாமா இளைப்பாறல் (Retirement) நிரந்தர தமிழ் உயர் அதிகாரிகள் இன்மை போன்ற காரணங்களினால் பாதகமாகவே உள்ளது. தொடர்ந்தும் இந்நிலைமை தொடர்வதனால் ஆசிரியர் ஆலோசகர்கள் (ஆரம்பம்) நியமனத்திலும் நிதி பங்கீட்டிலும் விழிப்பான நடவடிக்கை தேவைப்படுகிறது. ஆரம்பக் கல்விக்கான ஆசிரியர் வழிகாட்டிகளை தேசிய கல்வி நிறுவனத்திலிருந்து உதவிக் கல்வி பணிப்பாளர்கள் தாமே நேரடியாக பெற்று தமது செலவிலேயே கொணர்ந்து கொடுக்கின்ற நிலைமையே காணப்படுகிறது. ஆரம்பக் கல்வி பற்றி எத்தனை குறைபாடுகளை நாம் சுமத்தினாலும் இவைகளை நாம் நிதானத்துடன் அணுகுவதே புத்திசாலித்தனமான தாகும்.

தேசிய கல்வி நிறுவனம் மாகாண கல்வி திணைக்களங்க ளுக்கு நூல்களை அனுப்புவதனால் வலய பாடசாலைகள் பயன்பெறப் போவதில்லை என்பதனை உணரல் வேண்டும். புதிய சீர்திருத்தங்களை தமது பிரதேசங்களில் சரியாக அமுல்படுத்த வேண்டும் என்பதனால் இம்முறையை பின்பற்றி வருகின்றனர். மேலும் பல அதிபர்கள் கொழும்பு தேசிய கல்வி நிறுவனம் சென்று நூல்களை பெற்று வருகின்றனர்.

நுவரெலியா வலயம் இலங்கையின் தேசிய ரீதியான பொது பிரச்சினைகளை மாத்திரம் பெற்றுக் கொள்ளவில்லை. கூடவே நுவரெலியா மாவட்டம் உரிய பல பிரச்சினைகளையும் பெற்றே ஆரம்பக் கல்வியை தொடர்ந்தெடுத்துச் செல்லுகின்றது. இதெல்லாம் உரியவர்களுக்குக் கூறியும் அரச இயந்திரத்தின் துருப்பிடித்த தன்மை காரணமாக செவிடன் காதில் ஊதிய சங்காகி உள்ளது, இதற்கெல்லாம் என்று விடிவுவரும்...?

## பிள்ளைகளின் கல்விக்கு
## பெற்றோர்களின் அர்ப்பணிப்பு அவசியம்

மலையக மாணவர்களின் கல்வித்தர அபிவிருத்தி பற்றி பார்க்கும் போது அவர்களின் கற்றல் நடவடிக்கை தொடர்பாக அதிகளவு கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இது அதிபர், ஆசிரியர், பெற்றோர் ஆகிய அனைத்துத் தரப்பினரதும் கடமையும் பொறுப்புமாகும்.

பாடசாலைகளில் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகள் நிகழும் அதேவேளையில் மாணவர்கள் கற்றலில் ஈடுபடுகிறார்களா? எனத் தேடிப் பார்த்தல் வேண்டும். நல்ல கற்றல் பழக்கம் மாணவர்களிடையே வளர்க்கப்படல் வேண்டும்.

ஆசிரியர்களின் பாடசாலைக் கற்பித்தலை செவி மடுக்கும் மாணவர் அதனை அங்கு கற்பதுடன் அவ்வாறே விட்டு விட்டால் மீள அவை பார்க்கப்படாது போய்விடும். பாடசாலை மாணவர்களின் கற்றல் திறனை வளர்ப்பதற்கு அதிபர், ஆசிரியர்கள் செயற்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

மலையகப் பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்றாலும் கூட அது முழுமையானதில்லை என்றே கூற வேண்டும். இதற்கு பல காரணங்களைக் குறிப்பிடலாம். அறிவைத் தேடும் பழக்கம், நூல்களைத் தேடி கற்கும் பழக்கம், விடய ஞானம் உள்ளோரை செவ்வி காணும் முறை, குழுச் செயற்பாடு போன்றன புதிய கல்வி சீர்திருத்தத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது. எனினும் மலையக சூழலில் நாம் இதனை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பதே நம் முன் உள்ள கேள்வியாகும்.

**கற்றல் கலையை வளர்ப்பதற்கான வழிவகைகள்**

மலையகப் பகுதிகளில் காணப்படும் குடியிருப்புகளில் பெருமளவான குடியிருப்புகள் தொடராகவும் மிகவும் நெருக்கமான அடுக்கடுக்கானவையாகவும் இரைச்சல் மிக்க சூழலில் காணப்படுகின்றன. இச்சூழலில் கற்றல் நடவடிக்கையை மேற்கொள்ளல் ஒரு சவால் எனில் மறுப்பதற்கு இல்லை.

இந்நிலையில் பல பாடசாலைகளின் உயர்தர மாணவர்களை பாடசாலை விடுதிகளில் தங்கி படிப்பதற்கு அதிபர்கள் ஒழுங்குகள் செய்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. அவர்களுக்கான மின்சார வசதி, தளபாட வசதி என்பனவற்றையும் கூட இவர்கள் ஏற்படுத்திக் கொடுக்கின்றனர்.

1960 களில் கோயில்களில் மாணவர்கள் இரவுவேளைகளில் இருந்து படித்து வகுப்புகளில் கலந்து கொண்டு கற்றல் நடவடிக்கையைத் தொடர்ந்தனர். பாடசாலையின் கட்டிடங்களை பாடசாலை முடிந்த பின்னர் உபயோகிக்கும் வழக்கமும் இருந்து வந்துள்ளது. கற்றலுக்கான ஒரு நேர அட்டவணை அவசியம். மாணவர்கள் எதைப்படிப்பது என்பதும் எப்பாடத்திற்கு கூடிய நேரம் ஒதுக்கப்படல் வேண்டும் என்பதும் முக்கியம்.

எந்த நேரத்தில் படிப்பது என்பது பிள்ளையின் மன நிலையின் தன்மைக்கு ஏற்ப தீர்மானிக்கப்படல் வேண்டும். காலை நேரமே நல்லது எனினும் மலையகச் சூழலில் அது பொருத்தமா என்பது வினாவாகும்.

**எவ்வாறு கற்பது?**

எவ்வாறு கற்பது என்பது பற்றிய கற்றல் முறைமையை ஆசிரியர் வழங்குவது நல்லது. ஒரு செய்யுளை மனனம் செய்வது என்பது வெறுமனே மனனம் செய்வது அன்று. அச்செய்யுளை பொருளுக்கேற்ப பிரித்து எழுதிப் பார்ப்பதன் மூலமும் அறையில் அதனை காட்சிப்படுத்துவதன் வாயிலாகவும் பிறர் அச்செய்யுளை சொல்லிக் கேட்பதன் மூலமும் செய்யுளை விளங்கிக் கொள்ள இயலும்.

கற்றலுக்கான ஊக்குவிப்பு (Motivation) முக்கியம். சில பெற்றோர்கள் பிள்ளைகளுடன் இருந்து கற்பதை வாசிப்பதை வேலை செய்து கொண்டிருப்பதைக் காண்கிறோம். இது கற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு உற்சாகத்தை அளிப்பதுடன் தனிமையையும் போக்கும்.

**கற்றல் பழக்கத்தைத் தூண்ட திட்டமிடல் அவசியம்.**

கற்றதை மீட்பது, வீட்டு வேலைகளை செய்து முடிப்பது, (Home Work) வெறும் ஞாபக மூட்டலுக்காக மேலோட்டமாக பார்ப்பது ஊன்றி படிப்பது, திட்டமிட்டப்படி கிரமப்படி தொடர்ச்சி யாக மையப் பாடங்களை தினந்தோறும் தொட்டுச் செல்லும் வண்ணம் படிப்பது, குறிப்புகளை எடுத்து அவைகளின் தலைப்புக் களை மனனம் செய்து தொடர்ந்து ஞாபகமூட்டலை செய்வது எனப் பல வகையாகக் கற்கலாம்.

பெற்றோர்களின் தியாகமும் அர்ப்பணிப்பும் பிள்ளைகளின் கற்றலில் தாக்கத்தை செலுத்தலாம். பிள்ளைகள் கல்வி கற்பதற்கு பெற்றோர்கள் அமைதியான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். காதைப் பிளக்கும் வானொலி, தொலைக்காட்சிச் சத்தம், அயல் வீட்டுச் சண்டை சச்சரவுகள், ஓலங்கள், சத்தங்கள் என்பன மலையக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

## மலையகப் பாடசாலைகளும்
## புலமைப் பரிசில் பரீட்சை
## பெறுபேறுகளும்

கல்வி அபிவிருத்தியின் அளவீடாக பரீட்சைப் பெறுபேறு களும் இருந்து வருகின்றன. என்னதான் பன்முக ரீதியாக ஒரு பாடசாலையின் அல்லது கல்வியின் அபிவிருத்தி தொடர்பாக பேசப்பட்டு வந்தாலும் கூட பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகள் அவைகளையெல்லம் தள்ளிவிட்டு முன்னே சென்று நின்று விடுகின்றன.

ஒரு போட்டிச் சமூக வாழ்வியலில் கல்வியும் போட்டிச் சாதனமாக மாறிவிட்டமை கல்வியின் துர்பாக்கியமாகும். புதிய கல்விச் சிந்தனைகள் என்னதான் சொன்னாலும் பெற்றோர் புலமைப்பரிசில் பரீட்சையில் தத்ததமது பிள்ளைகள் சித்தியடைய வேண்டும் என்றும் அதை ஒரு கௌரவ பிரச்சினையாகவும் எண்ணுகிறார்கள். இந்தப் போக்கிலிருந்து பெற்றோர், ஆசிரியர், அதிபர் ஏன் சமூகமும் விடுபடுவதற்கு பல காலம் செல்லும்.

இந்தப் பொதுப் போக்கிற்கு மலையகமும் உட்பட்டிருப்பது ஒன்றும் வியப்பல்ல. இதனடிப்படையில் அண்மையில் வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.

**பாடசாலை மட்டத்தில் முறையான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை அதிகரிக்க முடியும்.**

இந்த ஆய்வு மிக இறுக்கமானதாக இல்லாவிட்டாலும் கூட புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக 'சில பல' எண்ணங்களை தோற்றுவித்துள்ளது.

ஆய்வுக்கு உட்பட்ட பிரதேசத்தில் பின்வருமாறு பாடசாலை கள் அமைந்துள்ளன.

| பாடசாலை வகை | பாடசாலை தொகை |
|---|---|
| 1 AB | இல்லை |
| 1 C | 04 |
| தரம் 2 | 08 |
| தரம் 3 | 26 |
| மொத்தம் | 38 |

மேலும் இப்பாடசாலைகளில் வகுப்புகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை நோக்கும்போது

| வகுப்புகள் | தொகை |
|---|---|
| தரம் 1-5 | 25 |
| தரம் 1-5 | 01 |
| தரம் 1-9 | 02 |
| தரம் 1-10 | 02 |
| தரம் 1-11 | 04 |
| தரம் 1-13 | 04 |
| மொத்தம் | 38 |

மேற்குறிப்பிட்ட விபரங்களைப் பார்க்கும்பொழுது ஆரம்பக்கல்வி பாடசாலைகளே மிக அதிகமாக உள்ளதைக் காணலாம். புலமைப் பரிசில் பரீட்சையில் மிக அதிகமான மாணவர்கள் சித்தி பெறுவதற்கு இப்பாடசாலைகளின் செயற்பாடுகளே காத்திரமான பங்களிப்பை செய்ய இயலும்.

இப்பிரதேசத்தில் தரம் 1-9 வரையுள்ள தரம் 2 பாடசாலை ஒன்றின் 2005-2008 வரையிலான புலமைப்பரிசில் பெறுபேறுகள் பின்வருமாறு இருந்தன.

| புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் (2005-2008) பாடசாலை (X) | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | விண்ணப்பித்தோர் | தோற்றியோர் | சித்தி | 100% மேல் | மிகக் குறைவான புள்ளி |
| 2005 | 12 | 10 | இல்லை | 109 | 31 |
| 2006 | 12 | 12 | இல்லை | - | 34 |
| 2007 | 05 | 05 | இல்லை | 119 | 84 |
| 2008 | 10 | 10 | இல்லை | 72 | 20 |

மேற்குறித்த புள்ளி விபரங்கள் மூலம் பின்வரும் விடயங்கள் தெரியவருகின்றன.

- கடந்த நான்கு வருடங்களாக இப்பாடசாலையிலிருந்து ஒரு மாணவராவது புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறவில்லை.

- பெருந்தொகையான மாணவர்களோ சமாந்தர வகுப்பு களோ இப்பாடசாலையில் தரம் 5இல் காணப்படவில்லை.

- அதிகூடிய புள்ளிகளாக 109 (2005 இல்) 119 (2007 இல்) 72 (2008 இல்) காணப்படுகின்றன.

- இப்பாடசாலையில் தரம் 1 தொடக்கம் 4 வரையான வகுப்புகளின் மாணவர் தொகையும் அதிகமாக காணப்படவில்லை. சராசரி 15 மாணவர்களே காணப்படுகின்றனர் எனலாம்.

- ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தரம் 1-5 வரை குறைந்தது நான்கு பேராவது தொடர்ந்து கடமையாற்றி வந்துள்ளனர் என்பது மற்றொரு உண்மையாகும்.

- ஆரம்பக் கல்வியில் நாம் எதிர்பார்க்கும் வாசிப்பு, எழுத்து, கேட்டல் போன்ற அடைவு மட்டத்தை இவர்கள் அடையவில்லை என்பதையே இப்புள்ளிகளும் பெறுபேறு களும் காட்டுகின்றன.

- முறையான ஒரு வேலைத்திட்டம் புலமைப்பரிசில் பரீட்சைக்கு மேற்கொள்ளப்படவில்லை என்பதை இது காட்டுகிறது.

- அதிபரின் அல்லது பகுதித் தலைவரின் உள்ளக மேற்பார்வை இல்லை என்பதையே மேற்படி பெறுபேறுகள் தெளிவுப் படுத்துகின்றன.

| பாடசாலை -Y புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் (2005-2008) | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | விண்ணப்பித்தோர் | தோற்றியோர் | சித்தி | அதிகூடிய புள்ளி | குறைந்த புள்ளி |
| 2005 | 18 | 18 | - | 85 | 30 |
| 2006 | 31 | 31 | 03 | 151 | 28 |
| 2007 | 43 | 34 | இல்லை | 127 | 00 |
| 2008 | 40 | 36 | 01 | 113 | 08 |

X என்ற பாடசாலையை விட Y என்ற பாடசாலையில் மாணவர் அதிகமாக தோற்றி உள்ளனர்

- 2006 இல் மூவர் சித்தி பெற்றுள்ளனர். இதில் அதிகூடிய புள்ளியாக 151 ஐ ஒருவர் பெற்றுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

- இதனையடுத்து 2007 இல் ஒருவரும் சித்தி பெறவில்லை. அதிகூடிய புள்ளி 127 ஆகவும் மிகக் குறைந்தது '00' ஆகவும் உள்ளமை கவனிக்கப்பட வேண்டியது ஆகும்.

- இதன் பின் 2008 இல் ஒருவர் 113 புள்ளியை (வெட்டுப் புள்ளி) பெற்று சித்தி பெற்றுள்ளார்.

- இங்கும் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றுபவர்களுக்கு கற்பிப்பதற்காக ஓரளவு ஆசிரியர்கள் காணப்பட்டனர். மேலும் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியுதவியுடன் பலர் தொண்டர் ஆசிரியர்களாக கடமைபுரிந்துள்ளனர் என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. எனினும் புலமைப்பரிசில் 'பாரிய அபிவிருத்தி' காணப்பட்டிருக்கவில்லை.

**குறிப்பிட்ட இப்பிரதேசத்தின் முழுமையான பெறுபேறுகள் 2009**

| பாடசாலை வகை | சித்தி பெற்றோர் தொகை | பாடசாலை தொகை |
|---|---|---|
| தரம் 3 | 09 | 26 |
| தரம் 2 | 06 | 08 |
| தரம் 1 C | 10 | 04 |
| மொத்தம் | 25 | 38 |

**பெறுபேறுகள் (2008)**

புலமைப்பரிசில் பரீட்சையும் பெறுபேறும் குறிப்பாக ஆரம்பக்கல்வி பாடசாலைக்கான ஒரு அடைவுகுறிகாட்டியாகும்.

இங்கு 26 பாடசாலைகளில் ஒன்பது மாணவர்களே சித்தி பெற்றுள்ளமை ஆரம்பக்கல்வியில் அடைவு மட்டத்தின் தேக்க நிலையைக் காட்டுகிறது. இதற்கு இப்பிரதேசத்தில் (2007க்கு முன்னர்) நிலவிய

- ஆசிரியர் பற்றாக்குறை
- ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் இன்மை
- சில காலம் ஆரம்பக் கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் இல்லாதிருந்தமை

போன்ற காரணங்கள் கூறப்படலாம். இவைகளுக்குள்ளும் நியாயங் கள் இல்லாமல் இல்லை.

என்றாலும் ஆரம்பக் கல்வி பாடசாலைகளில் அதிபர்களின் பின்வரும் குறைபாடுகள் கோடிட்டுக் காட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

- சில அதிபர்களுக்கு ஆரம்பக் கல்வி பற்றிய போதிய பயிற்சி இன்மை.
- ஆரம்பக் கல்வி பயிற்சி பெற்றிருப்பினும் அதனை பிரயோகிக்காமை. பெயரளவில் பயிற்சி பெற்றுள்ளமை.
- உள்ளக மேற்பார்வை இன்மை அதிபர்கள் பாடசாலை களில் வெறும் 'அதிபர்களாக மாத்திரம் செயற்படலும் உதவி மேற்பார்வையை மேற்கொண்டு ஆலோசனை வழி காட்டலை செய்யாமை.
- ஆரம்பக் கல்வி பயிற்சி பெறாது வேறு பயிற்சிகள் பெற்றவர்கள் ஆரம்பப்பாடசாலைக்கு அதிபரானமை

(உ.ம்) சமூகக்கல்வி, வர்த்தகம், ஆங்கிலம் போன்ற துறைகளில் பயிற்சி பெற்றோர்

மேற்கண்ட காரணங்களோடு குறிப்பிட்ட இப்பிரதேசத்தில் தொடர்ந்து நல்ல பெறுபேற்றைப் பெற்ற பாடசாலை ஒன்றின் பெறுபேற்றையும் நாம் இங்கு பார்க்கலாம்.

| பாடசாலை 'A' புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு (2005-2008) | | |
|---|---|---|
| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் |
| 2005 | 28 | 02 |
| 2006 | 54 | 14 |
| 2007 | 52 | 12 |
| 2008 | 36 | 07 |

மேற்கண்ட பெறுபேற்றினை இப்பாடசாலை எவ்வாறு பெற்றது என்பதற்கு பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

- தொடர்ச்சியாக இப்பாடசாலை நல்லதொரு வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வந்துள்ளமை.
- ஆரம்பத்திலிருந்தே ஆசிரியர்கள் (தரம் 1,2,3) செயற்றிட்டத்தை மேற்கொள்ளும் நோக்குடையோராக இருந்து வருகின்றமை.
- ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு.
- பெற்றோர்களின் ஒத்துழைப்பு.
- சித்தி பெற்ற மாணவர்களை பாராட்டலும் அதிபர், ஆசிரியர்களை உற்சாகப்படுத்தும் செயற்றிட்டங்களும் முறையாக முன்னெடுக்கப்படுகின்றமை.
- தரம் 5 இற்காக கற்கும் ஒரு கலாசார பின்னணியை கடந்த காலங்களிலும் பல ஆசிரியர்கள் உருவாக்கி உள்ளமை.
- தடைகள் இடையிடையே வந்தாலும் தொடர்ந்து விடாது வேலைத்திட்டம் செயற்படுகின்றமை.

மேற்கண்ட பல காரணங்களே ஓரளவு பெறுபேறுகளை பின்னடைந்த, ஆய்வுக்கு உட்பட்ட இப்பிரதேசத்தில் பெற சாத்தியமானது. எனவே ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையின் வெற்றி பல கோணங்களில் பார்க்கப்பட வேண்டியதாகும்.

அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் குறித்த பாடசாலைச் சமூகத்தின் அறிவு, தராதரம், பொருளாதாரம், விழிப்புணர்வு, ஆர்வம் போன்ற இன்னோரன்ன காரணங்கள் உள்ளன எனலாம்.

எது எவ்வாறெனினும் இவைகளை வென்று வெற்றிக்கு மாணவர்களை கொண்டு செல்வதற்கான வழிவகைகளைத் தேடி முன் செல்வதே நல்லதொரு கல்வியியலாளரின் பணியாகும். அந்த வகையில் அதைச் செய்ய வேண்டியவர்கள் அதிபர், ஆசிரியர்களே ஏனெனில் அவர்களே கல்வி ஒளியை பாய்ச்சுபவர்கள்.

# மலையகப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் முறை

பாடசாலை என்பது மகிழ்ச்சிகரமான ஓர் இடமாக திகழ்தல் வேண்டும். மிகவும் ரம்மியமான சூழலில் பாடசாலை அமைதல் வேண்டும். பாடசாலைக்கென தனித்துவமான ஒரு பண்பு இருத்தல் வேண்டும். பாடசாலையினுள் காலடி எடுத்து வைக்கும் குழந்தைக ளின் உள்ளத்தை ஈர்த்தல் வேண்டும். மாணவர்களுக்கு அறிவூட்டல் செயற்பாடு அங்கே நிகழ்கிறது. எனவே மகிழ்ச்சியுடன் பாடசாலையை ஆரம்பித்தல் என்பது மிக முக்கியமானது.

எது எவ்வாறாயினும் மாணவர்களின் கற்றல் செயற் பாடுகளே பிரதான இடத்தைப் பெறுகின்றன. கற்பித்தல் அறிவூட்டல், வழி காட்டல், உதவி செய்தல் போன்றன மாணவர் மையக் கல்வியின் மூல வேர்களாக உள்ளன எனலாம். கற்பித்தல் முறைகள் மிகப் பிரதானமாக உள்ளன.

ஆரம்ப, இடைநிலை, சிரேஷ்ட வகுப்புகளுக்கு இவைகள் மாறுபடுகின்றன. செயற்பாட்டு ரீதியான கற்பித்தல் முறைமை இன்றைய புதிய கல்வி போக்காகும். ஆரம்ப வகுப்புகளுக்கான விளையாட்டு முறைகளினூடாக கற்பித்தல் செயற்பாட்டு முறைமைக் காக ஆசிரியர் ஆயத்தங்களை செய்ய வேண்டியவராக உள்ளார்.

நவீன உபகரணப் பயன்பாடு மாணவர்களுக்கு அறிவூட்டலு க்குத் துணை புரியும். விரிவுரை முறை தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றெனினும் உயர் வகுப்புகளில் இதனைப் பயன்படுத்தின் தவறில்லை.

மலையகப் பாடசாலைகளில் மேற்பார்வைகளின்போது அண்மைக்காலங்களில் பலகுறைபாடுகள் கண்டறியப்பட்டன. புதிய ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சி இன்மை இதற்குக் காரணம் என்றாலும், பயிற்சி பெற்ற சிலரும் அவ்வாறே இருந்தமை அவதானிக்கப்பட்டது.

கேள்வி முறைகள் (Pattern) மாறுபடல் வேண்டும். ஒரே வகையான முறைகள் சில ஆசிரியர்களால் கையாளப்பட்டதை குழு

மேற்பார்வையில் கண்டறியக் கூடியதாக இருந்தது. பாடசாலை மட்டக் கணிப்பீட்டில் குறிப்பிடப்படும் ஒப்படை தொடர்ந்து ஒப்படை ஒப்படை என்றிருத்தல் மாணவனை சலிப்படைய செய்யும்.

இதேபோல் 'சுயகற்றல்' சில வேளைகளில் பாடத்திட்ட புத்தகத்தில் (Record of Work) நூறுக்கு மேல் இருந்ததையும் கண்டறிந்தோம். ஆசிரியர்களின் தெளிவின்மை, விடய அறிவின்மை, வினாக்களை தொடுப்பதில், எடுப்பதில் உள்ள தகைமை இன்மை, தேடல் இன்மை, ஏனோ தானோ என்ற போக்கு, காலத்தை வகுப்பில் ஓட்டல், சோம்பல், தத்தமது தொழில் தொடர்பான விளக்கமின்மை போன்ற இன்னோரன்ன காரணங்கள் கல்வியைப் புகட்டுவதில்குறைபாடுகளை தோற்றுவித்துள்ளன.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு குறித்த ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் தெளிவான அறிவைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். குறிப்பட்ட ஒவ்வொரு பாடத்திலும் முக்கியத்துவம் சிறப்பு பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைத்தல் வேண்டும். ஏன் இப்பாடத்தைக் கற்றல் வேண்டும் என்பதை மாணவன் அறிதல் வேண்டும்.

உதாரணமாக கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு அளிக்கும் இடத்தை தமிழ்மொழி அல்லது அழகியற் பாடங்களுக்கு ஆசிரியர்கள், அதிபர்கள் அளிப்பதில்லை. சமநிலையான அந்தஸ்துடன் மாணவர் பாடங்களை அணுக ஆசிரியர்கள் தமது மனப்பாங்கை மாற்றிக் கொள்ளல் வேண்டும்.

மலையகப் பாடசாலைகளில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் தமிழ்மொழி, ஆங்கிலமொழி அடைவு கடந்த க.பொ.த. சாதாரண தரப் பெறுபேற்றில் பின்னடைவு கண்டிருப்பதைக் காண முடிந்தது. இதற்கமைய நுவரெலியா கல்வி வலயத்தில் பின்வருமாறு காணப்பட்டது.

**தமிழ்மொழியும் இலக்கியமும்**

| பாடசாலைகள் | தோற்றிய மாணவர்கள் | சித்தி | சி. இன்மை |
|---|---|---|---|
| 38 | 1929 | 1430 | 499 |

**ஆங்கில மொழி**

| பாடசாலைகள் | தோற்றிய மாணவர்கள் | சித்தி | சி. இன்மை |
|---|---|---|---|
| 38 | 1929 | 291 | 1637 |

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு பல காரணங்கள் கூறப்படலாம். இங்கு ஆங்கில மொழி தொடர்பாக கூறப்படும் நியாயங்கள் ஒரு புறமிருக்க தாய்மொழி தொடர்பாக நியாயம் ஏதும் கூற முடியாது.

ஏனெனில் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் அனைத்து ஆசிரியர்களும் தமிழ் மொழி மூலமாக கல்வி கற்றவர்கள் என்று சுட்டிக்காட்டப்படல் வேண்டும். இப்பாடசாலைகளில் 'மொழி' தொடர்பாக அக்கறை காட்டப்படவில்லை எனலாம். எனினும் கடைசி வேளையில் க.பொ.த சாதாரண தரத்தில் கற்பித்த (2008 இல்) ஆசிரியரை மாத்திரம் குற்றஞ்சாட்ட இயலாது என்பதையும் உணரல் வேண்டும்.

## மலையகப் பாடசாலை மேற்பார்வைகளின் போது அண்மைக்காலங்களில் பல குறைபாடுகள் கண்டறியப்பட்டன

மேற்குறிப்பிடப்பட்ட விபரங்களில் ஆங்கில மொழி தொடர்பான பெறுபேற்று வீழ்ச்சிக்கு உரிய ஆசிரியர்கள் இன்மை கடந்த காலங்களில் நிலவிய நிலைமைகள் என்பன காரணங்கள் ஆகும்.

பின்வரும் விபரங்கள் மேலும் பாடங்களுக்கு 'சமமான' இடத்தை வழங்குதல் வேண்டும் என்பதையும் மாணவர்களுக்கு பாடங்கள் தொடர்பாக அறிவூட்டப்படல் வேண்டும் என்பதையும் உணர்த்தும்.

**நுவரெலியா கல்வி வலயம்**

**க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பெறுபேறு 2008**

**பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்**

| பாடசாலை | தோற்றியோர் | சித்தி | சித்தி இன்மை |
|---|---|---|---|
| அ | 67 | 29 | 38 |
| ஆ | 98 | 65 | 33 |
| இ | 90 | 62 | 28 |
| ஈ | 101 | 55 | 46 |

ஆசிரியர்கள் பரவலாக பாடங்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும் என்பதை இது காட்டுகின்றது எனலாம்.

ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் இடங்கள் கூட அவ்வாறே உள்ளன. பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், தொழில்நுட்ப பாட ஆசிரியர்கள், சமய ஆசிரியர்கள், அழகியற்கலை ஆசிரியர்கள் பின் வரிசைக்காரர்களாக உள்ளனர.

இந்த மனப்பாங்கு மாற்றப்பட அதிபர்கள் பல வழிமுறை களைக் கையாளுதல் வேண்டும். ஒவ்வொரு பாடங்களும் அந்தந்த பாடங்களில் நிலையில் சிறப்பான பாடங்களே என்பது உணரப்படல் வேண்டும். உதாரணமாக 'வரலாற்றுப்பாடம்' ஏனோ தானோ என பல்கலைக்கழகம் வரை இருந்தது. (தற்போது அது ஒரு மையப் பாடமாகி உள்ளது) கொள்கை பகுப்பாளர்களின் சில உயர் மட்ட அதிகாரிகளின் வழிகாட்டல்களே அப்பாடம் பின் தள்ளப்படக் காரணம்.

சிறந்த பெறுபேற்றை பெற்ற சில மாணவர்கள் தமிழ் மொழியில் சித்தி அடையாதிருந்தமையைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு பாடம் தொடர்பாகவும் மையப் பாடங்கள் தொடர்பாகவும் ஏனைய பொது பாடங்கள் தொடர்பாகவும் உள்ள மனப்போக்கே காரணம் எனலாம்.

***ஆசிரியர்கள்,***<br>***மாணவர்களுக்கு குறித்த***<br>***ஒவ்வொரு பாடம்***<br>***தொடர்பாகவும்***<br>***தெளிவான அறிவை***<br>***பெற்றுக் கொடுத்தல்***<br>***வேண்டும். குறிப்பிட்ட***<br>***ஒவ்வொரு பாடத்தினதும்***<br>***முக்கியத்துவம், சிறப்பு***<br>***பற்றி மாணவர்களுக்கு***<br>***எடுத்துரைத்தல் வேண்டும்***

## மொழி கற்பித்தலும்
## மலையகப் பாடசாலைகளும்

மொழியை கற்பிக்கும்போது நடைமுறையில் பல பிரச்சினைகளை அதனை கற்பிக்கும் ஆசிரியர் எதிர்கொள்வர். மொழி என்று இங்கு குறிப்பது பொதுவானதொன்றாக கருதப்பட்டபோதிலும் கூட சிறப்பாக தமிழ் மொழியை குறித்து நோக்குவது நல்லது. தமிழ் மொழியை கற்பிக்கும் ஆசிரியர் குறைந்து வருகின்றமை மொழி தொடர்பான அசிரத்தையையே காட்டுகின்றது. மொழித்தேர்ச்சித் தொடர்பாகவும் பொதுவாக தேர்ச்சி மையக் கல்வி தொடர்பாகவும் விதந்து பேசப்பட்டு வரும் இவ்வேளையில் இம் மொழித் தேர்ச்சி எவ்வாறு காணப்படுகின்றது என்ற புள்ளி விபரம் கவலை தருகின்றது.

கொழும்பு பல்கலைக்கழகம் மொழித்தேர்ச்சி பற்றி நாடளாவிய ரீதியில் ஓர் ஆய்வை மேற்கொண்ட வேளையில் 80 சதவீதமான புள்ளிகளைப் பெற்றோர் 36.5 வீதம் எனக் கண்டறியப் பட்டது. வடமாகாணத்தில் மொழித் தேர்ச்சியின் சராசரிப் புள்ளி 54.4 சதவீதமாகவும் கிழக்கில் 53.9 வீதமாகவும் காணப்பட்டது. மலையக மாணவரின் தேர்ச்சி நிலைப்பற்றி அறிய இயலவில்லை. எனினும் அது குறைந்த மட்டத்திலேயே இருக்கும் என்பதற்கு பிற சுட்டி களோடு ஒப்பிடும் வேளை அனுமானித்துக் கொள்ளலாம்.

எனவே மொழித் தேர்ச்சி மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் ஒரு சவால் என்பதில் சந்தேகமில்லை. ஆரம்பக் கல்வியில் மொழி கற்பிப்போர் எதிர்நோக்கும் சவால்களுக்கும், பிரச்சனைக்கும் இடை நிலைக்கல்வியில் எதிர்நோக்கும் பிரச்சனை களுக்கும் வித்தியாசம் உள்ளது. பெற்றோரின் கல்வி நிலை, பிள்ளை களின் கல்வி நிலை, அறிவு குடும்ப நிலை, சூழல், அமைவிடம் தொடர்பாடலின் செல்வாக்கு, பொருளாதார நிலை போன்ற இன்னோரன்ன காரணிகள் தாக்கத்தை செலுத்தலாம்.

ஆரம்பக் கல்வி தொடர்பாகவும் மொழி கற்பித்தல் தொடர் பாகவும் குறித்த ஒரு பிரதேச ரீதியாக மலையகத்தின் நுவரெலியா மாவட்டம் கோட்டம் 3 இல் அவதானிக்கப்பட்டது, ஆரம்பக்கல்வியில் மாணவர் பின்வரும் இடங்களில் இடர்படுவர்.

இங்கு மொழி முக்கியம் பெறுவதைக் காணலாம். வாசிக்கும் வேளையில் மாணவர் மொழியை சரியாக விளங்கி வாசிக்காமை அதாவது, (ணகர, னகர), (ரகர, றகர), (லகர, ழகர, ளகர) வேறுபாடு இவைகளை முறையாக ஆசிரியர்களுக்கு ஏலவே கற்பித்தோர் கற்பிக்காமையால் தற்பொழுது மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறிழைக்கின்றனர்.

மலையகப் பகுதி பாடசாலைகளில் குறிப்பாக நாம் அவதானத்தில் எடுத்துக் கொண்ட பிரதேசத்தில் இக்குறைபாடு மிக அதிகமாகவே காணப்பட்டது. பெருமளவில் பெருந்தோட்ட மக்களின் குழந்தைகளே கல்வி கற்கும் பிரதேசப் பாடசாலைகளாக இவைகள் காணப்படுவதனால் ரகரத்தை றகரமாகவும், லகரத்தை ழகரமாகவும் உச்சரிப்பது சாதாரணமானதாக காணப்பட்டது. இதேவேளை பிற பிரதேச ஆசிரியர்கள் சிலர் கீழ்க்காணுமாறு உச்சரிப்பது மற்றொரு மொழி தொடர்பான பிரச்சினை ஆகும்.

உதாரணமாக மல்லிகை (ல) மல்லிகை எனவும் கரவெட்டி (ல) கரவெட்டி எனவும் மன்னன் (மெ) ன்னன் எனவும் உச்சரிக்கப்படுகின்றது.

மேலும் எமது மலையகப் பிரதேச ஆசிரியர்களின் வாசிப்பின் போதுள்ள குறைபாடுகளை நிவர்த்திக்க ஆலோசனை களும் பயிற்சிகளும் அவசியமானவையே ஆகும். வாசிப்பினை போலவே பேச்சிலும் மொழி, உச்சரிப்பு சிக்கல்கள் உள்ளன. ரகர, றகர, லகர, ழகர பேதங்கள் தெளிவின்மை காரணமாகவே மாணவர் பேச்சில் குறைபாடுகள் உள்ளன. பிரதேச வழக்கு பேச்சின் வழக்கு பேச்சின் உயிர் நாடியாக உள்ளது. அவதானிக்கப்பட வேண்டிய ஒன்று. எழுத்து, பேச்சு, இதற்கிடையேயான வேறுபாடு ஆசிரியர் களால் பல வேளைகளில் உணரப்படவில்லை. ஒரு நியம மொழி இதுவரை சரியாக கண்டறியப்படாமையால் அல்லது பயன்படுத்தப் பட்டமையால் 'ஓரளவு திருத்தமான' மொழிப் பிரயோகத்திற்கு மாணவர்களை வழிகாட்ட வேண்டியது அவசியமாகும்.

சொற்கள் எழுத்துக்கள் தொடர்பாக தமிழ் மொழியில் பொதுவாகவே பல பிரச்சினைகள் உள்ளன. தமிழ் மொழியின் எழுத்துக்களின் 'ஒலி இயல்' அல்லது 'ஒலி வெளிப்பாடு பற்றி விளங்காது மொழியை முறையாக பேச இயலாது என்பது ஓர் உண்மையாகும். உதாரணமாக:-

✠ தாகம், தாபம்
✠ காகம், யோகம்
✠ பாகம், பாவம்

மேற்குறிப்பிட்ட சில உதாரணங்களுடன் இன்னும் பல உதாரணங்களை எம்மால் கூற இயலும். பிரதேச ரீதியாக பரவலாகவே பேச்சு வழக்கில் பல்வேறு அழுத்தம், தாக்கங்கள் உள்ளன என்பது ஓர் உண்மையாகும். ஆரம்பக் கல்வியில் யாம் பார்த்த பிரதேசம் பாரிய அளவு சிங்கள, முஸ்லீம் மக்கள் வாழாத பிரதேசமாகக் காணப்பட்டமையால் பேச்சில் அதன் தாக்கம் குறைவாகவே காணப்பட்டது.

கேட்டல் ஆரம்பக் கல்வியின் மற்றொரு விடயமாகும். தேர்ச்சி மையக் கல்வி பற்றி சிந்திக்கும் யாம் கேட்டலில் ஏற்படும் இடர்பாடுகள் மொழியை விளங்கிக் கொள்வதில் ஏற்படும் தவறின் மற்றொரு கூறு எனில் பிழை இராது என எண்ணுகிறேன். ஆசிரியர் கதை கூறும் போதோ உரையாடும் போதோ கேட்டு கிரகிக்கும் மாணவர்களின் திறன் எத்தனை வீதம் என்பதைக் கூட நாம் பார்த்தல் இயலும். வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களும் ஒரே மாதிரி இல்லை என்பதே யதார்த்தமாகும். ஒவ்வொரு மட்டத்திலேயே மாணவர் கேட்டலிலும் உள்ளனர் என்பது உண்மை.

ஆசிரியரின் குரல் ஒலி, உச்சரிப்பு (மொழியை) தன்மை, தெளிவு கணீர் என்ற ஒலி அலை வீச்சு, அதேவேளை அவ்வாசிரியரின் மொழியை விளங்கிக் கொள்ளும் வகையிலான ஒரு பிரதேச வழக்கு என்பன மாணவர்களை துரிதமாக கேட்பதற்கு உதவலாம். பரிச்சயமான மொழிப் பிரயோக மாணவர்கள் உடன் உள்வாங்கிக் கிரகிக்க நிச்சயம் உதவலாம்.

நாம் அவதானித்த பிரதேசத்தில் கடமை புரியும் ஆசிரியர்கள் பெருமளவில் குறித்த பிரதேச சூழலிலேயே (சற்றுத் தூரமாக இருந்தாலும்) வளர்ந்தவர்கள், கற்றவர்கள் ஆதலால் மாணவர்கள் இடர்பாடல்குறைவாகக் காணப்பட்டது எனலாம்.

அடுத்து எழுத்துப் பற்றி பார்க்கும் பொழுது சரியான பொறி முறையாக எழுத்துக்கள் எழுதப்படுகின்றனவா? எழுதுவிக்கப் படுகின்றனவா என்பன கவனிக்கப்படல் வேண்டும். பயிற்சி பெற்ற சில ஆசிரியர்களே எழுத்துக்களை முறையாக எழுதாதுள்ள நிலைமை ஆரம்ப வகுப்புகளில் காணப்பட்டுள்ளது.

அவ்வாறெனின் பயிற்சியே பெறாத ஆரம்ப வகுப்பு ஆசிரியர்கள் எவ்வாறு எழுதுவர், எழுதுவிப்பர் என்பது சிந்திக்கப் பட வேண்டியதாகும். எமது அவதானிப்பில் சில பாடசாலைகளில் எவ்வித வழிகாட்டலும் அதிபர், சிரேஷ்ட ஆசிரியர்களினால் செய்யப்படாதுள்ளமை கண்டறியப்பட்டது. பல பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர்களினால் வழிகாட்டல்கள் நிகழ்ந்துள்ளன.

***புலமைத்துவம்<br>பெற்ற பலர்<br>புலம்பெயர்ந்ததும்<br>பாகுபாடும்,<br>தமிழ்மொழி பற்றிய<br>அக்கறை<br>இன்மையும்<br>மொழிகற்பிப்போரின்<br>செயற்பாடுகளில்<br>தாக்கத்தினை<br>ஏற்படுத்தியுள்ளன.***

பிழையான சொல் அட்டைகள், சுவரொட்டிகள் தொங்க விடப்பட்டிருந்தமை மொழி தொடர்பான அக்கறை இன்மையைக் காட்டியது. இவை ஒரு சில பாடசாலைகளே. இங்கு முறையான உள்ளக மேற்பார்வை இல்லை என்பதனை இது காட்டியது எனலாம்.

தமிழ்மொழி தொடர்பான விழிப்புணர்வு காலத்தின் தேவை யாகும். இன்று வடக்கு கிழக்கு யுத்தம் காரணமாக பல இழப்புகள் மொழிக்கும் இனத்துக்கும் ஏற்பட்டு வருகின்றன. அவைகளுள் தமிழ் மொழிக்கு பல வழிகளிலும் இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றன. புலமைத்துவம் பெற்ற பலர் புலம்பெயர்ந்ததும் பாகுபாடும், தமிழ் மொழி பற்றிய அக்கறை இன்மையும் கற்பிப்போரின் செயற்பாடு களில் தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது எனலாம். மொழி ஓர் இனத்தின், குழுமத்தின் அடையாளம் என்பது மட்டுமல்ல நாகரிகம் பெற்ற கூட்டத்தின் பண்பாட்டுச் சின்னம் எனில் மறுப்பதற்கில்லை.

## மலையக பாடசாலைகளில் வகுப்பறை முகாமைத்துவம்

பாடசாலை முகாமைத்துவம் பற்றி பேசும் போது பெருமள வில் அது அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், பகுதித் தலைவர்கள் பற்றியதாகவே அமைகிறது. பொதுவாக பாடசாலை எனும் ஒரு நிறுவனத்தின் கட்டமைப்பில் இவ்வாறு பேசப்படுவதும் கூட ஒரு பாரம்பரியமானதாகவே இருந்து வருகிறது. ஆனால் இவ்விடயம் தொடர்பாக ஆழமாக நோக்கும் போது பல முகாமைத்துவ அலகுகளும் இனங்காணப்பட்டுள்ளதைக் காணலம்.

இதனடிப்படையில் மாணவர்களின் கல்வித்தர மேம் பாட்டிலும் பாடசாலைகளின் வெளியீட்டு செயற்பாடுகளிலும் வகுப்பறை மிக முக்கியமான இடத்தை வகிப்பதை மறுத்தல் இயலாது. மாணவர்களின் செயற்பாடுகளுக்கான களமாக இருப்பது வகுப்பறையே. ஆசிரியர்களின் ஆளுமை வெளிப்பாடு இங்கே தான் பரிணமிக்க முடியும். வகுப்பறை மாணவர்களின் கற்றல் செயற் பாட்டிற்கும், ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டிற்கும் உதவும் வகையில் அமைதல் வேண்டும்.

மலையக பாடசாலைகளில் இன்றும் பாடசாலைகளில் முறைமையான ஆரம்ப வகுப்பு அறைகள், பிற அலகுகள் (விஞ்ஞான,

**வகுப்பறை, மாணவர்களின்
கற்றல் செயற்பாட்டிற்கும்,
ஆசிரியர்களின் கற்பித்தல்
செயற்பாட்டிற்கும்
உதவும் வகையில்
அமைதல் வேண்டும்**

நடன, மனைப் பொருளியல்) அமைக்கப்படாதுள்ளமையால் ஏற்படக்கூடிய குறைபாடுகளுடனேயே இதனை அணுக வேண்டி உள்ளது. எவ்வாறெனினும் மலையக பிரதேச அதிபர்கள் தாம் பெற்றுக் கொண்ட முகாமைத்துவ பயிற்சி நெறிகளுக்கு அமைய வகுப்பறை தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர்.

வகுப்பறையின் அமைப்பை வடிவமைக்க வேண்டியவர் வகுப்பு ஆசிரியரே. தனது வகுப்புக்கு உரிய அறையை கிடைத்த வசதிகளுக்கு இயைபாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கம், முயற்சி, செயற்பாடு, திட்டம் வகுப்பாசிரியருக்கு இல்லை எனில் கற்பித்தலும் கற்றலும் முறையாக நடக்க வழி பிறக்காது.

உதாரணமாக முப்பது பேர் உள்ள ஒரு வகுப்பை ஐந்து குழுக்களாக பிரிக்கலாம். இது ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்விக்கு ஏற்ப செயற்படுத்தலாம். குழுக்களுக்கு தனித்தனி தலைவர்களை நியமிக்கலாம். இத்தலைமை முறை ஒரு சுழற்சி முயற்சியில் அனைவரும் தலைமை ஏற்கும் வகையில் செய்யலாம்.

ஏக தலைமை என்ற எண்ணக் கருவை இல்லா தொழிக்கவும் பரவலாக தலைமைத்துவப் பண்புகளை அனைவரும் வளர்த்துக் கொள்ளவும் இது வழிவகுக்கும். மாற்று கருத்துகளுக்கு இடமளித்தல், மதித்தல், செவிமடுத்தல், ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கைப் உருவாக்குதல் போன்றன ஏற்பட வழி பிறக்கும்.

குழுவில் இடம்பெறும் மாணவர்களுக்கு பரவலாக வேலைப் பகிர்வை வழங்கலாம். வகுப்பறை சுத்தம், அலங்காரம், கதிரை, மேசை ஒழுங்குகள், வகுப்பறை நூலகம் போன்றவற்றை ஒழுங்கு செய்யும் பணிகளில் பொறுப்புகளை வழங்கலாம். பாடப் பதிவு, இடாப்புகளை பேணுவது தொடர்பான கண்காணிப்பு வேலை யையும் வழங்கலாம்.

இங்கே ஆசிரியரின் வழிகாட்டலும், ஆலோசனையும் அத்தியாவசியமானதொன்றாகவே உள்ளது. பின்தங்கி இருத்தல், பேசாதிருத்தல், ஒதுங்கி இருத்தல், கூச்சப்படல், பின் வரிசையினை விரும்பல், தாழ்வு மனப்பான்மை கொள்ளல் போன்றவற்றை நீக்கலாம். கூட்டுணர்வு, குழுவாக செயற்படல், உதவி செய்தல், பன்முக ரீதியாக சிந்தித்தல் இதன் மூலம் ஏற்படும்.

வகுப்பறைகளிலேயே சிறுசிறு கலை நிகழ்ச்சிகளை, வினாவிடை போட்டிகளை நடத்தலாம். ஆரம்பக் கல்வியில் இதற்கு பல சந்தர்ப்பங்கள் தரப்பட்டுள்ளன. இடைநிலை, உயர் நிலைகளுக்கு ஏற்ப நிகழ்ச்சிகள் மாறுபடலாம். ஆரோக்கியமான மலையக மாணவர்களின் எழுச்சிக்கு முறையான வகுப்பறை முகாமைத்துவம் இன்றியமையாததாகும்.

# தமிழ்மொழிக் கல்வியும் மலையக ஆசிரியர்களும்

ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடும் ஒரு கூட்டத்தினர் ஆவர். ஆசிரியர்களின் மொழித்திறன் கற்பித்தலில் பாரிய பங்களிப்பினை செய்யும் என்பது உண்மையாகும். ஆசிரியர்களின் மொழிப்புலமை பற்றி இன்று சிந்திக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

பாடசாலைகளில் பண்பாட்டின் மூலவேரான மொழி பின் தள்ளப்பட்டு வெறும் வர்த்தக நோக்கத்துடனான பாடங்கள் முன் எடுக்கப்பட்டு வருகின்றன. தொடர்பாடல் சாதனமான மொழி படிப்படியாக வலுவிழந்து வருகின்றது. நல்ல மொழி ஆற்றல் உள்ள தமிழ் ஆசிரியர்களின் தேவை அதிகரித்து வருகின்றது. ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாக பயிற்றப்பட்டு வெளியேறிவரும் ஆசிரியர்களின் தரம் பற்றிய மீள் நோக்கு ஒன்று தேவையாகி வருகின்றது.

தேசிய ரீதியாக பார்க்கும் பொழுதும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களே பெருமளவில் பயிற்சி நெறியைத் தொடர்கின்றனர் எனலாம். இந்நோக்கில் மலையகப் பகுதிகளும் உள்ளடங்கும். ஊவா, மத்திய, சப்பிரகமுவ, மாகாணங்களில் வருடா வருடம் பல ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், ஆசிரியைகள் பயிற்சியின் பின்னர் வெளியேறி பாடசாலைகளில் கடமை ஏற்பது ஆரம்பக்கல்விக்கு உயிரூட்டி இருத்தல் வேண்டும். ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி, யதன்சைட் ஆசிரியர் பயிற்சி கல்லூரி போன்றன குறிப்பாக மலையகப் பிரதேச பாடசாலைகளின் ஆரம்பக்கல்வி ஆளணி தேவையை பூர்த்தி செய்து வருகின்றன எனில் மறுப்பதற்கில்லை.

இதேவேளை, அண்மைய காலங்களில் வெளிப்பிரதேச மாணவிகளும் (வவுனியா, மட்டக்களப்பு போன்ற) யதன்சைட் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இஸ்லாமிய சகோதரர்களும் கூட இங்கு பயிற்சி பெறுவதை காணக்கூடியதாக இருக்கிறது. ஆரம்பக்கல்வி மாத்திரம் அல்ல தமிழ் மொழிப் பாடநெறியை பின்பற்றும் ஆசிரியர்களும் நாம் தரிசிக்கும் ஆசிரியர்கள் ஆவர்.

காலத்துக்குக் காலம் நடத்தப்பட்ட தொலைக் கல்வி பாட நெறியை பின்பற்றும் ஆசிரியர்களும் நாம் தரிசிக்கும் ஆசிரியர்கள் ஆவர்

காலத்துக்கு காலம் நடத்தப்பட்ட தொலைக்கல்வி பாட நெறியை பின்பற்றித் தமது பயிற்சியை முடித்த பலர் உள்ளனர். இவர்கள் அனைவரும் பெருந்தோட்டப் பிரதேச பாடசாலைகளில் கடமை புரிபவர்களாக உள்ளனர். எமது மலையகப் பாடசாலை களின் மொழித்திறன் விருத்திக்கு வகை கூற வேண்டியவர்களாக எமது ஆசிரியர் கூட்டத்தினர் இருத்தல் வேண்டும் என்பது எதிர்பார்ப்பாகும்.

இங்கு இரு வகையாக இப்பிரச்சினையை நோக்கலாம். முதலாவது ஆசிரியர் மொழி கற்பித்தலில் எதிர்நோக்கும் இடர்கள். அதாவது ஆசிரியர் மொழி கற்பித்தலுக்கான ஆளுமையை பெற்றுள்ளாரா என்பது. இரண்டாவது மாணவன் எவ்வகையான இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றான் என்பது.

தரம் 1-5 வரையிலான ஆரம்பக்கல்வி பாடசாலைகளில் மாணவர்கள் இடர்படும் இடங்கள் பல உள்ளன. வாசிப்பதில், பேசுவதில், எழுதுவதில் அவன் இடர்படுவான்.

உதாரணமாக வாசிக்கும் பொழுது உச்சரிப்பில் உள்ள குறைபாடுகள் லகர, ழகர, ளகர பேதங்கள் அறியாமை, வாசிக்கும் பாணி (Style) யில் உள்ள குறைபாடுகள். அதாவது ஏற்ற இறக்கம் இன்மை. சில இடங்களுக்கு அழுத்தம் கொடாமை, வளவளா தொழ தொழா என வாசித்தல், பயந்தகுரல் 'தொனி' இப்படிப்பல.

இங்கு மறுபுறத்தில் மொழி கற்பிக்கும் ஆசிரியர் இதனை திருத்தம் செய்யும் அளவுக்கு பயிற்சியும் புலமை ஆற்றலும் உடையவ ராக உள்ளாரா? பரந்த தமிழ், மொழி அறிவு, இலக்கியப் பின்புலம், கற்பித்தல் நுட்பம் உடையவரா? என்பது ஒரு பாரிய கேள்வியாகும்.

ஒரு குறிப்பிட்ட ஆண்டு காலம் தொடக்கம் பயின்று பிழையாக தமிழை கற்றுத்தேறி வந்திருக்கும் இக்கூட்டம் ஒரு தடைக் கற்களுக்கப்பால் இருப்பது ஒன்றும் (Barrior) புதினம் அல்ல. இத் தடைக்கற்களை உடைப்பதென்பது வெறுமனே ஆசிரியப் பயிற்சி முறைகளின் மூலம் மாத்திரம் சாத்தியப்படும் எனில் இயலாது. இதற்கென ஒரு விசேட வேலைத்திட்டம் தேவையாக உள்ளது.

**வாசிப்புத்திறன் இல்லாத மாணவன் வினாக்களுக்கு குறித்த நேரத்தில் விடை அளிக்கத் தவறி விடுவதன் மூலம் நேரத்தை செலவழித்து விட்டு பரீட்சையில் கோட்டை விட்டு விடுகிறான். விரைவாக வாசிக்கவும் கிரகிக்கவும் விடையை ஒட்டி சிந்தித்து முடிவு எடுக்கவும் அடிப்படையில் வாசிப்பே முக்கியமாக உள்ளது.**

இதற்கிடையில் இடை நிலை வகுப்புகளிலும் தரம் 10-13 வகுப்புக் களிலும் ஆசிரியனும், மாணவனும் இடர்படும் சந்தர்ப்பங் கள் பல உள்ளன. இடைநிலை வகுப்புக்களில் பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பனவற்றோடு இலக்கண பயிற்சியும் கைவரப் பெறல் வேண்டும். செய்யுள்களை நயத்தல், ஆக்கங்களை படித்தல், படைத்தல், இடை நிலை வகுப்புகளில் பெருமளவில் எதிர்பார்க்கப்படுகின்றது. இன்றைய தொலைக்காட்சி, இணையம், கணனி சஞ்சிகைகள் (வலைப்பூக்கள்) போன்றன புதிய வரவுகளாக இலக்கிய உலகில் உள்ளன. மொழி தொடர்பான புதிய அறிவு ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் தேவைப்படுகிறது. ஆசிரியர் மேலும் தேடல் மிக்கவனாகத் திகழும் பொழுதில் மாத்திரமே இன்றைய புதிய இலத்திரனியல் உலகுக்கு ஈடுகொடுக்க இயலும்.

ஆசிரியன் தன்னை வெறுமனே வெறும் கற்பித்தலுக்காக மாத்திரம் தயார்படுத்திக் கொண்டு பரீட்சைகளில் புள்ளிகளை பெற்று தமிழ்ப்பாடங்களை பெற்றுக் கொள்கின்றானா என்றொரு சந்தேகம் காலத்துக்கு காலம் ஏற்பட்டு வருகின்றது. இதேதான் மாணவனுக்கும் பொருந்துகிறது. இக்கருத்து பொய் எனில், ஏன் தமிழ் மொழித்திறன் குறைவடைந்து வருகின்றது என்றொரு வினா எழுகின்றது.

வினாக்களையும் விடைகளையும், தயாரித்து அளிக்கும் 'டியூஸன் மாஸ்டர்' மாணவனினதும் ஆசிரியரினதும் சுய ஆளுமை விருத்திக்கும் தனித்துவமான படைப்பாற்றல் விருத்திக்கும் தடைக்கல்லாக இருக்கிறார். எனவே நவீன இலக்கியங்களிலும் அதேவேளை பழைய இலக்கியங்களிலும் பரிட்சயமிக்க ஆசிரியர், மாணவர்குழாம் உருவாக்கப்பட வாசிப்பு ஒரு சாதனமாக அமையும்

எனில் வியப்பில்லை. இதனை ஊக்குவிப்பதன் மூலம் மொழித்திறன் விருத்தி ஏற்படமுடியும்.

இடைநிலை, உயர்நிலை வகுப்புக்களில் தமிழறிவு தொடர்பாக பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும். சஞ்சிகைகள் நடத்துதல், தமிழறிவுப் போட்டிகள் நடத்துதல், பல்வகை கதம்ப நிகழ்ச்சிகள் ஊடாக இலக்கிய மன்றத்தில் பண்டைய இலக்கியங் களை அறிமுகம் செய்தல், திருக்குறள், பாரதியார் பாடல்களில் மனனப்போட்டி நடத்துதல், சிறந்த சொற் பொழிவாளர்களை அறிமுகம் செய்தல், படைப்பாற்றலை வளர்க்கும் வகையில் கவிதை, சிறுகதை, கட்டுரை பட்டறைகளை அறிமுகம் செய்தல், சிறந்த கதை, சிறந்த கவிதை, சிறந்த நாவல், கட்டுரைகள், கட்டுரை வகைகள் பற்றி எடுத்து விபரித்தல் போன்ற இன்னோரன்ன விடயங்கள் மூலம் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் மொழி ஆற்றலை விருத்தி செய்ய இயலும்.

கற்பிக்கும் சகல ஆசிரியர்களும், பாட பேதமில்லாமல் தமிழ் மொழி ஆற்றலை வளர்த்துக்கொள்ள முன்வருவதன் மூலமே மொழித்திறன் விருத்தி பெற்று வெற்றி பெற முடியும்.

தமிழ்மொழி கற்பிக்கும் அல்லது ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர் மாத்திரம் இப்பணியை ஆற்ற இயலாது. தமிழ்மொழி அபிவிருத்தி செயற்றிட்டம் எனும் செயற்றிட்டம் ஒன்றினை பாடசாலைகளில் காலம் பிந்தாது முன்னெடுக்க முயல வேண்டும்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், தமிழ்மொழிப்பாட ஆசிரியர் கள் ஆற்றும் பணியின் அரைவாசிப்பங்கினையாவது ஏனைய பாடத்துறை ஆசிரியர்களும் ஆற்ற வேண்டியவர்களாக உள்ளனர். இதனை பாடசாலை முழுமைக்குமான ஒரு பொதுவான செயற்றிட்டம் மூலமே ஆற்ற இயலும்.

கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்கள் தமிழ் மொழித்திறன் விருத்தி தொடர்பாக கவனம் எடுப்பதன் மூலம் குறித்த அப்பாடங்களிலும் கூட மாணவர்கள் மிக விரைவான சிந்திக்கும் திறனை வளர்த்துக் கொள்ள இயலும்.

கணித, விஞ்ஞான விடயங்களை விளங்கிக் கொள்ளவும் அப் பாடங்களை தயார் செய்யவும் வாசிப்பும் உள்வாங்கலும், கிர கித்தலும் அவசியமானதாக உள்ளது. புலமைப்பரிசில் பரீட்சையில் பரீட்சார்த்தமாக இதனை அவதானித்தல் இயலும். வாசிப்புத்திறன் இல்லாத மாணவன் வினாக்களுக்கு குறித்த நேரத்தில் விடை அளிக்கத் தவறி விடுவதன் மூலம் நேரத்தை செலவழித்து விட்டு பரீட்சையில் 'கோட்டை' விட்டு விடுகின்றான். விரைவாக வாசிக்கவும், கிரகிக்கவும் விடையை ஒட்டி சிந்தித்து முடிவு எடுக்கவும் அடிப்படையில் வாசிப்பே முக்கியமானதாக உள்ளது எனலாம்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஆலோசகர்கள், ஆரம்பக்கல்வி உதவி கல்வி பணிப்பாளர்கள், தமிழ்மொழி ஆசிரியர் ஆலோசகர் கள், தமிழ் மொழிப் பாட உதவிகல்வி பணிப்பாளர்கள் மொழி தொடர் பாக விழிப்புணர்வு பெறவேண்டும். இவர்களது கூட்டு முயற்சியாக ஒரு செயற்றிட்டம் அவசியம்.

# பாடசாலைகளில் ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கும் முறை

கற்பித்தல் என்பது ஒரு கலையாகும். மாணவர்களுக்கு தெளிவாக புகட்டல் என்பது வெறுமனே பேச்சினாலோ வெண் கட்டியாலோ மாத்திரம் நிறைவேறி விடாது.

ஓர் ஆசிரியருக்கு கற்பித்தலில் உள்ள ஆர்வம், திறமை, இயல்பூக்கம் அவரது கற்பித்தலில் இழையோடும். மலையக பாடசாலைகளில் நல்ல ஆசிரியர்களை கொண்டிருந்தோம். ஏன் இன்றும் கூட கண்டு கொண்டிருக்கின்றோம். அவர்களின் பெயர்களை அவ்வப்போது உச்சரிக்கையில் எமதுள்ளம் புளகாங்கிதம் அடையும். அவர்களிடம் காணப்பட்ட அந்த மந்திரம் தான் என்ன...? மாணவர்களுடனான நல்லுறவு, இணக்கம், பிணைப்பு, பரஸ்பர தொடர்பு அவர்களின் மனதை வென்றிட காரணமாக இருந்திருக்கிறது.

ஒரு நல்லாசிரியனுக்கு பல ஆளுமைகள் தேவைப் படுகின்றன உங்களின் உச்சரிப்பு, பேச்சு, தொனி உங்களை அவர்களின் பால் நிச்சயம் ஈர்க்கும். ஆரம்ப கல்வியாயின் (தரம் 1-5 வரை) ஓர் ஆசிரியரின் வகிபங்கு பல்விதமானதாக உள்ளது.

மிக நெருக்கமாக அக்குழந்தைகளுடன் தாயாக, தந்தையாக, சகோதரனாக, தாதியாக, ஆசிரியையாக பல வகிபங்குகளை அவர் ஏற்க வேண்டி உள்ளது. கதைக்கும் முறை, அணுகும் முறை தனது வகிபங்கிற்கு இயைபாகி செயற்பட வேண்டியுள்ளது. உங்களது மகிழ்ச்சிகரமான தோற்றம் உங்களது கனிவான பார்வை, பொறுமையுடன் கேட்கும் சகிப்புத்தன்மை தொடர்ந்து விடாது முயன்று மீண்டும் மீண்டும் உங்கள் நோக்கத்தை அடைய செயற்படும் செயற்பாடு உங்களை மாணவர்களுடன் கலந்திடச் செய்யும்.

ஓர் ஆசிரியரின் உடல் அங்க செயற்பாடுகள் (Body Language) மிக முக்கியமானதாகும். ஆரம்ப கல்விக்கு மாத்திரம் அல்ல தொடர்ந்து உயர் வகுப்புகளுக்கும் கூட தெளிவான கூர்மையான உங்களின் விழிப்பார்வை, உதட்டு, கன்ன, முக, கை அசைவுகள் தோற்றம் கற்பித்தலில் தாக்கத்தைச் செலுத்தும்.

நீங்கள் கற்பிக்கும் போது மாணவர்கள் ஜடமாக அமர்ந்திருக்கவில்லை என்பதையும் உயிர்த்துடிப்புடனும் உணர்வுக ளுடனும் அவர்கள் உங்களை அவதானிப்பார்கள் என்பதையும் மனதில் கொள்ளல் வேண்டும். 'அவர்கள் உங்களுடன் இருக்கின்றார்கள்' என்பதே உங்கள் கற்றலின் வெற்றியாகும். அவர்கள் உங்களுடன் இல்லை எனில் அதுவே உங்கள் கற்பித்தலின் தோல்வியாகும்.

நீங்கள் எவ்வாறு உங்களது பாடப் பகுதியை சமர்ப் பிக்கின்றீர்கள் (Presentation) என்பது மாணவர்களின் துலங்களில் பிரதிபலிக்கும் எனலாம். மிக முக்கியமானது நீங்கள் எவ்வாறு உரையாடுகின்றீர்கள் என்பதாகும்.

'வளா கொழா' என்றாலும் அது வெற்றி பெறாது நீங்கள் பேசும் பாணி (The way of talking) மிக முக்கியமான ஒன்றாகும். சுவருக்கும் வெண்பலகை கரும்பலகைக்கும், கதிரை மேசைகளுக்கும் நீங்கள் கற்பித்தால் மாணவர்களான உயிருள்ள மனித பிராணிக்கு அது செல்லாது என்பதை நல்லாசிரியன் தெரிந்து வைத்திருப்பான்.

மாணவர்களுக்கும் உங்களுக்கும் இடையே தொடர்ந்து ஒரு பிணைப்பு சங்கிலி போல் தொடர்ந்து வருகின்றதா? என்பது மிக முக்கியமானதாகும். ஆசிரியர்களின் சத்தம், ஒலி, தொனி மாணவனை கவர்ந்து ஈர்க்கும். எத்தனை ஆசிரியர்கள் மலையக பாடசாலைகளில் தமது தொனியை, சத்தத்தினை செம்மைப்படுத்தி தயார்ப்படுத்தி கற்பிக்கின்றனர் என்பது கவனிக்கப்பட்ட வேண்டிய ஒன்றாகவே உள்ளது.

பல புதிய ஆசிரியர்கள் இன்னுமே கிணற்றிலிருந்து கிளம்பும் குரலாக உள்ளதையும் பல பழையவர்களும் கூட அவ்வாறே உள்ளதையும் பலரும் அறிவர். ஆசிரியர் தொழிலுக்கு குரல் (Voice) அவசியமில்லையா....

ஆரம்பக் கல்வியில் இக்குரல் மிக அவசியமானதாக உள்ளதை மறுத்தல் இயலாது. ஓர் ஆசிரியன் பொறுப்பு மிக்கவனாக இருத்தல் வேண்டும். தனக்கு அளிக்கப்பட்ட பாடத்தினையும் தனக்கு பொறுப்பளிக்கப்பட்ட மாணவர்கள் பற்றியும் அவர் தெளிவு பெற்றிருத்தல் வேண்டும்.

ஒரு சந்ததியினரின் ஏற்றமும், இறக்கமும் தமது கரங்களில் உள்ளது என்பதை ஆசிரியர்கள் பொறுப்புடன் உணர்தல் வேண்டும். கற்பித்தலை ஆரம்பிக்கும் முன்னர் ஆசிரியர் அது தொடர்பான பயிற்சியை பெற்றிருத்தல் வேண்டும். சரியான முறையான பயிற்சி இன்றி வகுப்பறைக்கு செல்வது பயிற்சியில்லாத வைத்தியர் அறுவை சிகிச்சை செய்தது போன்றதாகும்.

இன்று மலையகத்தில் புதிய, பழைய ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகளுக்கு கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளமையால் எதிர்காலத்திலேயே இதனை பூரணத்துவமாக எதிர்பார்க்கலாம். அதுவரை பயிற்சி இல்லாத ஆசிரியர்களின் பிரச்சினைகள் இருந்தே தீரும் எனலாம். எனினும் இடையிடையே நடைபெறும் செயலமர்வுகளின் மூலமும், சிரேஷ்ட ஆசிரியர்களினதும், ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்வி பணிப்பளார்களினதும் உதவியுடன் இப்பிரச்சினையை ஓரளவு தணிக்கலாம்.

ஆசிரியர்கள் முன் ஆயத்தத்துடன் வகுப்பறைக்கு செல்லல் வேண்டும். முன் ஆயத்தத்துடன் ஆசிரியர்கள் செல்ல வேண்டும் என்பதை ஒரு சட்டமாக, சுற்று நிருப கட்டளையாக கொள்ளத் தேவையில்லை. ஆனால் சிறந்த கற்பித்தலுக்கு அதுவே வழி என்பதனை சுயமாக ஆசிரியர்கள் உணர்ந்து செயற்படல் வேண்டும்.

எனவே கற்பித்தல் தொடர்பாக பல பயிற்சிகளை ஆசிரியர்கள் பெற்றிருத்தல் வேண்டும். சிறந்த சிரேஷ்ட ஆசிரியர்களின் மாதிரி வகுப்பறைக் கற்பித்தலை (Model Classes) அவர்கள் பார்ப்பது நல்லது. கற்பித்தல் நுணுக்கங்களையும் (Technics) உபகரணங்களையும், பாணியையும் (Style) தெரிந்திருத்தல் அவர்கள் தம் பணிக்கு செழுமை சேர்க்கும் எனில் மிகையில்லை.

## வகுப்பறை: மாணவர்களின் பயிற்சி பட்டறை

பாடசாலைகளின் முகாமைத்துவம் பற்றிப் பேசப்படுகின்ற போது பெருமளவில் அதிபர்களின் முகாமைத்துவம் பற்றி பேசப்படுகின்ற அளவுக்கு ஆசிரியர்களின் முகாமைத்துவம் பற்றி பேசப்படுவதுகுறைவாக இருந்து வருகின்றது.

அவ்வப்போது ஒருசில செயல் அமர்வுகளில் ஆசிரியர்களின் முகாமைத்துவ திறன் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டாலும் கூட ஆசிரியர்கள், பாடசாலை என்பது ஏதோ அதிபர்களுக்குரியது என்ற தவறான ஒரு போக்கினைக் கொண்டவர்களாகவே திகழ்கின்றனர். இந்நிலை தொடர்ந்து நீடித்து வருகின்றமையைக் காணலாம்.

அதிபர், பிரதி அதிபர், உப அதிபர் எனப் பதவி நிலைகளில் பலர் பாடசாலைகளில் செயற்பட்டாலும் மாணவர்களுடன் நேரடியாக தொடர்பு உள்ளவர்கள் ஆசிரியர்களே ஆவர். வகுப்பு அறைகளில் மாணவர்களின் செயற்பாடுகளை இயக்குவிப்போர் ஆசிரியர்கள் ஆவர்.

மாணவர்கள் என்போர் பல மட்டங்களிலிருந்து வருவோர் ஆவர். அவர்களது குடும்பப் பின்னணி, வருமான நிலை, சூழல், பெற்றோரின் கல்வி நிலை, உடல், உள நிலை போன்ற இன்னோரன்ன விடயங்களை வகுப்பு ஆசிரியர்கள் கட்டாயம் அறிந்திருத்தல் வேண்டும். பதவிகளைப் பெற்றுக் கொண்ட 3179 மலையக ஆசிரியர்கள் இது விடயமாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

பாடசாலை மேற்பார்வைகளின்போது இப் புதிய ஆசிரியர்களின் பல குறைபாடுகள் வெளிப்பட்டு வருகின்ற அதேவேளை ஏலவே கடமை புரிந்து கொண்டிருக்கும் ஆசிரியர்களும் கூட திருந்தாதவர்களாகத் திகழ்கின்றனர்.

புதிய ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள் கிடைக்கும் வரை பாடசாலை அதிபர், கல்வி பணிப்பாளர்கள் ஒழுங்குகளை மேற்கொள்வது நல்லது. இந்த விடயத்தில் சில வலயங்கள் கவனம் செலுத்தி உள்ளதுடன் சில அதிபர்களும் கூட தத்தமது பாடசாலை சூழலிலேயே சிரேஷ்ட ஆசிரியர்களின் துணையுடன் பயிற்சிகளை வழங்கி வருவது பாராட்டத்தக்கதாகும்.

மாணவர்கள் அனைவரும் ஒரே மாதிரியானவர் அல்லர். அவர்கள் பன்முக திறமையும் திறமை இன்மையும் உடையோரா வார்கள். எனவே வகுப்பு ஆசிரியர்கள் 'Talk and chalk' என்று இராது அவர்களுடன் உரையாடல் வேண்டும்.

பாரம்பரியமான பாடத்திட்டம், பாடக்குறிப்பு, கற்பித்தலுக்கு அப்பால் அவர்களின் மனதை வெல்லல் வேண்டும். சுற்று நிருபங்களுக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளியாது அதற்கு புறம்பாக பல செயற்றிட்டங்களை முன்னெடுத்தல் வேண்டும். அவை இம்மாணவர் கூட்டத்தின் திறமைகளை இனம் காண்பதற்கும் வழிகாட்டுவதற்கும் ஆலோசனை வழங்கலுக்கும் வழிவகுக்கும்.

ஆசிரியர்கள் இதற்கு தயாரா என்பதே அடுத்த கேள்வி.

பல ஆசிரியர்கள் வகுப்பறைகளுக்கே செல்லாது இடாப்பு அடையாளங்களை வகுப்புத் தலைவர்களைக் கொண்டு பதிவ தையும், வகுப்புக்குரிய வசதிகள் சேவைகள் கட்டணங்கள், பா.அ.சங்க நிதி போன்ற இன்னோரன்ன விடயங்களை முழுமை யாக இந்த தலைவர்களிடமே விட்டு விட்டு இருப்பதையும் மேற்பார்வைகளின்போது காணக்கூடியதாக இருந்தது.

மாணவர்களுக்கு பொறுப்புக்களை வழங்கல் வேண்டும் என்பதற்காக ஆசிரியர்கள் வகுப்பறைக்கே சமுகந்தராதிருப்பது சரியானதல்ல. மாணவர்களைப் பற்றி ஆரம்பக் கல்வி வகுப்புகளில் இனம் காண்பது போல் எல்லா வகுப்பறைகளிலும் காணப்படல் வேண்டும்.

தத்தமது வகுப்பறைகளிலுள்ள மாணவர்களினைப் பற்றி அறிந்திராத ஆசிரியரால் ஒரு சிறந்த முகாமைத்துவத்தை வகுப்பறைகளில் மேற்கொள்ளல் இயலாது.

துடிப்பும் உயிரோட்டமுமுள்ள ஒரு வகுப்பறை சிறந்த நல்ல ஆளுமை கொண்ட வகுப்பு ஆசிரியராலேயே இயக்குவிக்கப் படுகின்றது, வழிகாட்டப்படுகின்றது. கலகலப்பும் சுறுசுறுப்புமுள்ள மகிழ்ச்சிகரமான வகுப்பறையை சிறந்த முகாமைத்துவமிக்க வகுப்பு ஆசிரியராலேயே ஏற்படுத்த முடியும்.

**மாணவர்களைப் பற்றி ஆரம்பக்கல்வி வகுப்புகளில் இனம் காண்பது போல் எல்லா வகுப்பறைகளிலுமே காணப்படல் வேண்டும். தத்தமது வகுப்பறைகளிலுள்ள மாணவர்களினைப் பற்றி அறிந்திராத ஆசிரியரால் ஒரு சிறந்த முகாமைத்துவத்தை வகுப்பறைகளில் மேற்கொள்ளல் இயலாது.**

சிடுசிடுப்பும் எரிச்சலும் தூங்கு மூஞ்சி முகமும் கொண்ட ஓர் ஆசிரியரினால் உயிருள்ள உயிரோட்டமிக்க ஒரு மாணவர் கூட்டத்தை உருவாக்க இயலாது.

மேற்பார்வையின் போது இந்தக் கோலங்களை நாம் பல இடங்களில் கண்டுள்ளோம். ஆசிரியர் தத்தமது இயல்பான 'சில குறைபாடுகளுடனான' குணாதிசயங்களை ஆசிரியத்துவத்திற்கும் தொழிலுக்கும் ஏற்ப இயைபாக்கிக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. முன்கோபம், பொறுமை இன்மை, செவி மடுக்காமை, ஏற்றுக்கொள்ளாமை, திறந்த கலந்துரையாடல், கருத்துக்களுக்கு இடம் கொடாமை, சனநாயகத் தன்மைகளை மதியாமை, விமர்சனம், சுய விமர்சனப்பாங்கு இன்மை, தர்க்க ரீதியாக எதையும் அணு காமை, தாழ்வுச் சிக்கல், புதிய கல்வி சீர்திருத்தங்களை உள் வாங்காமை போன்ற பல குறைபாடுகளை திருத்திக் கொள்வதற் கான மனப்பாங்கினை படிப்படியாக வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

புதிய ஆசிரியர்கள், இளம் ஆசிரியர்களிடம் மட்டும்தான் இக்குறைபாடுகள் உள்ளன என்பது தவறானது. மிக நீண்ட அனுபவமுள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடமும் இக்குறைபாடுகள் காணப்படுகின்றமை மேற்பார்வையின்போது கவலையை தந்துள்ளது.

கோயிலுக்காகவும் கடவுளுக்காகவும் அர்ப்பணிப்பையும் தியாகத்தையும் செய்கின்ற நாம் ஏன் கல்விக்காக இந்தக் குழந்தைகளுக்காக சில அர்ப்பணிப்புகளை செய்யக்கூடாது? பாடசாலைகளில் வகுப்பு ஆசிரியர்கள், பிள்ளைகளுக்கு படிப்பிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு வழிகாட்டி உதவி செய்ய வேண்டியவர்களாக உள்ளனர்.

மாணவர்களின் நல்ல கனவுகளைக் கலைத்து விடாதவர்களாக இருத்தல் வேண்டும். அவர்களின் நல்ல கனவுகளுக்கு திரை போடுபவர்களாக இருத்தல் கூடாது. அவர்கள் கனவுகளைக் காண தூண்டுபவர்களாக, கனவுகளை தூவுபவர்க ளாக நீங்கள் இருங்கள். வாழ்க்கையை நம்பிக்கையுடனும் துணிச்சலுடனும் எதிர்கொள்ளும் புதிய இளம் சந்ததியினரை நீங்கள் உருவாக்க விழையுங்கள்.

கனவுகள் அவர்களின் எதிர்காலத்திற்கு அத்திவாரமிட உதவியும் அந்தத் திசையை நோக்கி அவர்களின் எண்ணங்களை நகர்த்துங்கள். கனவுகள் சவால்மிக்கதாக திகழல்வேண்டும். பத்தாம் பசளித்தனமாக கனவுகளால் ஆகப்போவது ஏதுமில்லை. மாணவர்களுடன் அன்றாடம் சிறிது மனம் விட்டு கதையுங்கள். அவர்கள் பேசும்போது, அவர்கள் விளையாடும் போது, பிரயாணம் செய்யும்போதும் அவர்களின் எண்ணங்கள் உண்மையையும் உயர்வையும் கொண்டதாகத் திகழ அவர்களின் உள்ளங்களில் பண்பையும் பாசத்தையும் பரிவையும் கருணையையும் விதையுங்கள். ஒவ்வொரு நாளும் வகுப்பறை உரையாடலில் ஓர் உபதேசமாக இல்லாது பொதுவாக சிந்தனை விதையை விதையுங்கள்.

வகுப்பு ஆசிரியர்கள், ஆசிரியைகள் இந்த நல்ல செயற்பாடுகளுக்கு தயாரா? பல ஆசிரியர்கள் இன்னும் அதற்குப் பக்குவப் படவில்லை என்பதே யதார்த்தமாகும். ஆசிரியர்கள் இந்த நிலைக்கு இன்னும் உட்படுத்தப்படவில்லை என்பதே உண்மை யாகும். ஆனால் அவர்களினால் அது இயலும் என்பதே எம் நம்பிக்கையாகும்.

எனவே சிறந்த நல் ஆசிரியர்களினாலேயே வகுப்பறையை கவின்மிகு கலைக்கூடமாக அமைக்க இயலும். மாணவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் வகுப்பறைகள் அமைதல் வேண்டும். வகுப்பு ஆசிரியர்களுக்கு நல்ல முகாமைத்துவ அறிவுதேவை என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

# கவன ஈர்ப்பை பெறவேண்டிய இடைநிலைப் பாடசாலைகள்

மலையக பாடசாலைகளிலும், பொதுவாக பெரும்பாலான பாடசாலைகளிலும் மாணவர் கல்வித்தர விருத்திக்காக பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவை விசேடமாக பின்வருமாறு அமைகின்றன.

01. புலமைப்பரிசில் பரீட்சையை மையப்படுத்தி வரையப்படும் செயற்றிட்டங்கள்.

02. க.பொ.த. சாதாரண தரத்தினை அடிப்படையாகக் கொண்ட செய்ற்றிட்டங்கள்.

03. க.பொ.த உயர் தரத்தினை அடிப்படையாகக் கொண்ட செயற்றிட்டங்கள்.

இங்கு நாம் குறிப்பாக இடைநிலைப்பிரிவில் செயற்றிட்டங்கள் பெருமளவில் இல்லாமையை உணரலாம்.

ஆரம்பக் கல்வியான தரம் 1- தரம் 5 வரையிலான செயற்திட்டங்கள் புலமைப்பரிசில் பரீட்சையோடு ஆறப்போடப்பட்டு மீண்டும் தரம் 9, 10, 11 வகுப்புகளில் ஆரம்பிக்கப்படுகின்றது.

தரம் 6,7,8 வகுப்புகள் கவனிக்கப்படாத ஒரு நிலைமை பொதுவாக உள்ளது. ஆனால் இந்த வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் வயது, உடல், உள மாற்றங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை ஆகும். மிகவும் சுறு சுறுப்பாகவும், கள்ளம் கபடமின்றியும், கேள்விகளுக்கு 'பட் பட் டன' சரியோ பிழையோ பதில் கூறும் மாணவர் கூட்டம் இவ் வகுப்புகளில் இருக்கும் பொது வேலைகளில், பாடசாலைகளில் ஈடுபடும் இம் மாணவர் கூட்டம் பல சவால்களை பாடசாலைகளில் (மலையகத்தில்) எதிர்நோக்குகின்றனர். அவை பின்வருமாறு,

01. பெருந்தோட்ட பாடசாலைகளிலிருந்து வந்து சேரும் மாணவர்கள் தரம் 6இல் சேர்கிறார்கள். ஆரம்ப காலங்களில் இவர்கள் பல குறைபாடுகளுடனேயே நகர பாடசாலைகளை அல்லது இடைநிலை பாடசாலைகளை வந்தடைவார்கள்.தற்போது இந்நிலை மாறிவருவது ஏதோ உண்மைதான்.

02. புதிய பாடசாலைகளுக்கு வந்து அனுமதியைப்பெறும் மாணவர்கள் புதிய சூழலில் புதிய கலாசார, நடைமுறை பின்னணியில் புகுகிறார்கள். இது ஒரு நிலைமை. இதற்கென ஒரு வேலைத்திட்டம் தேவை.

03. பல பாடரீதியான அடைவுமட்ட குறைபாடு மற்றொரு பிரச்சினை ஆங்கிலம், கணிதம், விஞ்ஞான பாடங்களில் இவர்கள் பின்தங்கி இருக்கக் கூடும்.

04. பெருந்தோட்டத்தின் சில பாடசாலைகளிலிருந்து நகரப் பாடசாலைகளுக்கு தரம் 6 க்கு அனுமதி பெறும் முன் நடாத்தப்பட்ட பரீட்சை பல விடயங்களை வெளிக் கொணர்ந்தது நடைமுறையில் ஓர் உண்மை.

நுவரெலியா கோட்டம் 3 (ஹோல்புறூக்)
நுவரெலியா கோட்டம் 2 (தலவாக்கலை)

பிரதேசங்களில் குறித்த பெரிய பாடசாலைகளுக்கு தரம்6 இல் அனுமதிப்பெறும் மாணவர்கள் தொடர்ச்சியாக அடைவுமட்டம் அடையாதவர்களாகவே காணப்பட்டனர். குறிப்பிட்ட ஆரம்பக் கல்வி (1-5) பாடசாலைகள் எழுத்து, வாசிப்பு என அறியாத மாணவர்களையே தொடர்ந்து வெளியீடாக (OutPut) செய்து வருவது கண்டு பிடிக்கப்பட்டது.

இதே வேளை நல்ல திறமையான மாணவர் கூட்டத்தை உருவாக்கும் பாடசாலைகளாக சில நல்ல தரம் 1-5 பாடசாலைகளும் உள்ளன.

மேற்குறித்த யாவும் இடைநிலை பாடசாலைகளின் கல்வித்தர விருத்திக்கு சவால்களாகும்.

05. இடைவிலகல் இவ் வகுப்புகளிலேயே மிக அதிகமாக உள்ளன. அமெரிக்க பல்கலைக்கழக ஆய்வாளர் மைக்கல் போல் தனது ஆய்வில் பின்வருமாறு குறிப்பிட்டுச் சொல்கிறார்.

'...... பெருந்தோட்டப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி பிரிவுக்கும் சிரேஸ்ட பிரிவுக்குமிடையிலான இடைநிலைப் பிரிவில் மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துக்காணப்படுகின்றது. பெருந்தோட்டப் பகுதி பாடசாலைகளிலிருந்து இடைவிலகுகின்ற மாணவர்கள் வெளியுலகிற்கு தேர்ச்சியற்ற நிலையில் பல்வேறு தொழிலுக்குச் செல்வதால் மன ரீதியான முரண்பாடுகளுக்கு முகங்கொடுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.......' என்கிறார்

போட்டி பரீட்சைக்காக கற்கும் இன்றைய போக்கே இவ்வக்கறை இன்மைக்குக் காரணமாகும்.

06. பாடசாலைகளில் நிர்வாக கட்டமைப்பிலும் கூட இடைநிலை வகுப்புகள் கவனிக்கப்படாதுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பாடசாலை மேற்பார்வைகளின்போது இவ்வகுப்புகளில் ஆசிரியர்களின் கற்பித்தல் குறைவாகவும், நேர அட்டவணை முறையாக போடப்படாமலும் ஆரம்ப, உயர்பிரிவுபோல் இறுக்கமான கட்டமைப்பு (Structure) இல்லாமையையும் காணக்கூடியதாக உள்ளது.

07. தரம் உயர்த்தப்பட்ட (UpGraded Schools) பாடசாலைகளில் தொடர்ச்சியான ஒரு வேலைத்திட்டம் இன்மை மற்றொரு பிரச்சினையாகும். அ ப்பாடசாலைகளில் வகுப்பு தரம் உயர, உயர உரிய அலகுகள் (Units) வழங்கப்படாமை பாரியபின்னடைவாகும்.

விஞ்ஞானகூடம், மனையியல்கூடம், நூலகம்/ வாசிகசாலை, கணனி கூடம், விவசாய கூடம், முதலுதவி பிரிவு போன்றன வழங்கப்படாதுள்ளமையால் இங்கு கற்கும் மாணவர்கள் இதன் பலனைப் பெறாதவர்களாகவே உள்ளனர்.

உதாரணமாக:- கொத்மலை, வலப்பனை, நுவரெலியா வலயங்களிலுள்ள இவ்வகையான பாடசாலைகளைக் கூறலாம். வலபபனையில் தரம் உயர்த்தப்பட்ட ஐந்து இடைநிலை பாடசாலைகளிலும் மேற்கூறப்பட்ட எவ்வித அலகுகளும் கிடையாது. இதே போன்ற கொத்மலை வலயத்தில் தரம் உயர்த்தப்பட்ட அல்லது தரம் 6 வரை இடைநிலை பிரிவுக்குள் உள்ளடங்கும் பாடசாலைகள் உட்பட பத்து பாடசாலைகளிலும் எந்த வளங்களும் இல்லை. சில பாடசாலைகளில் Room to Read மூலம் வாசிகசாலை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் நுவரெலியா கல்வி வலயத்தில் பின்வரும் உதாரணத்தைப் பார்க்கலாம்.

வலயம் :- நுவரெலியா

கோட்டம் :- நுவரெலியா 3 (ஹோல்புறூக் (தமிழ்)

| பாடசாலைகள் | விஞ்ஞான கூடம் | நூலகம் | மனை கூடம் | கணனி வசதி | விவசாய கூடம் |
|---|---|---|---|---|---|
| A | X | X | X | ✓ | X |
| B | X | X | X | X | X |
| C | X | X | X | X | X |
| D | X | X | X | X | X |
| E | X | X | X | X | X |
| F | X | X | X | X | X |

X - இல்லை ✓ - உண்டு

'Room to read' வசதிகள் சில பாடசாலைகளில் மாத்திரம் உள்ளன. மேற்குறிப்பிட்ட சில பாடசாலைகளில் கணனிக்கான அறைகள் கட்டப்பட்டுள்ளன. எனினும் கணனிகள் வழங்கப்படவில்லை. இடைநிலைக்குரிய பிரிவுகள் வழங்கப்பட வில்லை எனபதே யதார்த்தமாகும்.

08. தோட்டப்புற பின்தங்கிய இடைநிலை மாணவர்கள் புறத்தாக்கங்கள், விழிப்புணர்வுகள், மாதிரி பாடசாலைகள் என்பவற்றைப் பாராதவர்களாக இருப்பதனால் கற்பதற்கான சிந்தனைக் கிளரல்கள் இல்லாது உள்ளமை ஒரு காரணம் எனலாம்.

எனவே பாடசாலைகளில் இடைநிலை வகுப்புகளுக்கான புதிய செயற்றிட்டங்கள் திட்டமிடப்படவும், செயற்படுத்தப்படவும் வேண்டிய தேவை உள்ளது. அவை பின்வரும் பண்புகளை, விடயங்களை உள்ளடக்கியதாகத் திகழலாம்.

1. இடைநிலை வகுப்புகளுக்கு (6,7,8,9) முறையான ஆசிரியர் பகிர்வு.
2. முறையான அங்கீகரிக்கப்பட்ட நேர அட்டவணை.
3. முறையான பகுதி தலைவர், அவருக்கான வேலைப்பகிர்வு.
4. தரம் ஆறில் பின்னடைவில் உள்ள மாணவர்களுக்கான அடைவு மட்ட உயர்ச்சிக்கான விசேட திட்டங்கள் (உதாரணம்) கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், தமிழ் போன்ற பாடங்கள் தொடர்பான விசேட செயற்றிட்டங்கள் (அவர்களினது பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில்)
5. தரம் 5இல் புலமைப்பரிசில் சித்தி பெற்ற அல்லது 70% புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்காக தொடர்ந்து தரம் 6,7,8,9,10,11 வகுப்புக்களில் விசேட செயற்றிட்டங்கள்
6. பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் மீளாய்வு, பெற்றார் சந்திப்பு, பரிகார கற்பித்தல்.
7. ஆசிரியர், மாணவர் ஊக்குவிப்பு (Motivation) பாராட்டு, பரிசு, சான்றிதழ் வழங்கல்.

மேற்கண்டவாறு பாடசாலைகளில் இடைநிலை வகுப்புகளின் பால் கவனயீர்ப்பு செய்யப்பட வேண்டிய தேவை உள்ளது. மலையக பாடசாலைகளை அச்சுறுத்தும் 'இடைவிலகலுக்கு' இவ் வகுப்புக்களில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

புதிய செயற்றிட்டங்கள் இவ்வகுப்புகளுக்காக உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். மலையக பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தர பெறுபேற்று அதிகரிப்புக்கு இவ் வேலைத்திட்டம் அடித்தளமிட முடியும்.இதனால் க.பொ.த உயர் தர பெறுபேறு உயரவும், பல்கலைக்கழக பிரவேச விகிதம் அதிகரிக்கவும் வாய்ப்புக்கள் உள்ளன.

# மலையகமும் வாசிப்பின் முக்கியத்துவமும்

வாசிப்பு தொடர்பாக தற்போது அதிகமாக பேசப்பட்டு வருகின்ற போதும் நவீன தொழில் நுட்ப வளர்ச்சி மனிதனின் வாசிப்புப் பழக்கத்தில் பெருமளவு தாக்கம் செலுத்தி வருகின்றது என்பது ஓர் உண்மையாகும். முன்னர் வாசிப்பு பெற்ற இடத்தினை இன்று தொலைக்காட்சி பெற்று வருகின்றது. வாசிப்பு என்பது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததும் முக்கியமானதுமாகும்.

ஒரு காலத்தில் தொடர் நவீனங்கள் குடும்பப் பெண்கள் மத்தியிலும் ஏனையோர் மத்தியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது போல் இன்று தொலைக்காட்சி 'மெகா சீரியல்கள்' பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. சாண்டில்யனின் 'கடல் புறா' கல்கியின் 'பொன்னியின் செல்வன்' , ஜாவர் சீதாராமனின் 'உடல், பொருள்' , ஆனந்தி தமிழ்வாணனின் கல்கண்டில் 'கடலில் தெரிந்த கை' இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

இவ்வாறான ஜனரஞ்சக அல்லது குடும்பப் பெண்களின் வாசிப்பினைவிட காத்திரமான வாசிப்புப்பழக்கமும் மற்றொரு புறம் இருந்தது என்பதே உண்மையாகும். சர்வதேச சினிமாத் துறையில் மிக நவீன தொழில்நுட்பங்களையும் புதிய (Graphic) முறைகளையும் அறிமுகப்படுத்தக் கூடிய வளமும், அறிவும் உடைய இந்தியா பெருமளவு செலவில் சின்னத்திரை எனும் தொலைக்காட்சி யினூடாக தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்பி வருகின்றது. தொலைக்காட்சிக்கென ஒரு தனி மொழி உள்ளது. காட்சி படிமங்கள் முக்கியம் பெறுகின்றன. காட்சி படிமங்களின் தொகுப்பே சினிமா. இதன் தாக்கமே பெருமளவில் இன்று தொலைக்காட்சி நாடகங்களில் படிந்து வருகின்றது.

தொலைக்காட்சி நாடகங்கள் மக்களை மிக அண்மித்த ஊடறுத்த கலை வடிவமாக மாறி வருகின்றன. இச் சூழ்நிலையில் வாசிப்பு மற்றொரு கோணத்தில் உள்ளது. அன்று இளஞ்சிறார்கள் புத்தகம் / நூலகம் (ஆகாஷித்திருந்தது) ஈர்த்திருந்தது போல் இன்று தொலைக்காட்சி ஈர்த்துள்ளது. வாசிப்பில் மாணவர்கள், ஏனையோர் ஈடுபட அது தொடர்பான புதிய முயற்சிகள் அவசியமாக உள்ளது. அது பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

இதற்கான தந்திரோபாயங்கள் பற்றி எண்ண வேண்டி உள்ளது. தொலைக்காட்சியில் கட்புல, செவிப்புல தொழிற்பாடு உள்ளது. வாசிப்பு அப்படி அல்ல நரியும் திராட்சைப் பழமும் கதையை தொலைக்காட்சியில் பார்க்கும் ஒரு சிறுவனின் மன நிலைக்கும் அதே கதையை வெறும் ஒரு நூலில் வாசிக்கும் சிறுவனின் மன நிலைக்கும் பாரிய பேறுபாடுகள் உள்ளன. தொலைக்காட்சியில் 'காட்சி' படிமங்கள் சிறுவனுக்கு உளக் கிளர்ச்சியை ஊட்டுகின்றன. இது ஒரு சவாலாகும்.

வாசிப்பை எப்படி கவர்ச்சியாக்குவது? அதனை புதிய தளத்திற்கு எவ்வாறு கொண்டு செல்வது?

சித்திர கதைகள் சிறுவர்களின் உள்ளத்தைக் கவர்வன வாகும். அழகிய பளபளப்பான தாளில் வரும் ஆங்கில அல்லது பிற மொழிக்கதைகள் இங்கு குறிப்பிடப்பட வேண்டியவை ஆகும். வாசிப்பை மேம்படுத்த பாடசாலை சிறந்த ஒரு களமாக உள்ளது. அண்மையில் சில பாடசாலைகளில் நூலகம் தொடர்பாக ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட வேளையில் பல விடயங்கள் வெளிச்சத்திற்கு வந்தன.

அக்கரப்பத்தனை பிரதேச பாடசாலை ஒன்றிற்கு சென்ற வேளையில் சில விடயங்கள் கிடைத்தன. இதன்போது நூலகத்திலுள்ள நூல்களின் வகைகள், தொகைகள், வாசிப்பு வீதம், பயன்படுத்தப்படும் நூல்கள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. சுமார் 1800 நூல்கள் அந்நூலகத்தில் காணப்பட்டன.

நாவல், சிறுகதை, கவிதை, அறிவியல், சமூகவியல், இலக்கியம், இலக்கணம், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான நூல்கள் போன்றன தமிழிலும், ஆங்கிலத்தில் இலக்கணம், சிறுகதை, வாசிப்பு நூல்கள், நாவல்கள் போன்றனவும் காணப்பட்டன. தினசரி பத்திரிகை காணப்படவில்லை. சஞ்சிகைகள் நூலகத்திற்கு கிடைக்கும் (அனுப்பப்படும்) சஞ்சிகைகள் காணப்பட்டன. சஞ்சிகைகள் வாங்குவது ஊக்குவிக்கப்படுவதாக

கூறப்பட்டது. இலங்கையிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள் அங்கு காணப்படாமை ஒருகுறைபாடாகும்.

மாணவர்கள் கணிப்பீட்டு வேலைக்காக (SBA) அத்துறை தொடர்பான நூல்களைப் பெற்றிருப்பது அவதானிக்கப்பட்டது. மேலும் கதைகள், அறிவியல்சார் நூல்கள் அவர்களின் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. என்றாலும் மேலும் மாணவர்கள் வாசிப்பு பலதுறை சார்ந்ததாக, பன்முகப் பட்டதாக அமைய வேண்டிய தேவை உள்ளமை குறிப்பிட வேண்டியதாகும்.

ஒரு வகையில் புதிய கல்வி சீர்திருத்தம் மாணவர்களை தேடலில் ஈடுபடத் தூண்டியுள்ளது என்பதே உண்மையாகும். அதனை மேலும் எவ்வாறு விருத்தி செய்வது என்பது குறித்து நூலக பொறுப்பாளர்களும் ஏனையோரும் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

49 ஆசிரியர்கள் கடமை புரிகின்ற அப்பாடசாலையில் மிக அதிகமாக நூலகத்தினை பயன்படுத்துவோர் 25 பேரே என்பது கருத்தில் எடுக்கப்பட்டது. அவர்கள் பயன்படுத்தும் நூல்கள் தொடர்பாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. தத்தமது பாடம் தொடர்பாக நிறையவே பயன்படுத்துகின்றனர்.

இதற்கு அடுத்த நிலையில் கதைகள், கவிதைகள், விஞ்ஞான, சமூக, வரலாறு / புவியியல் நூல்கள் பயன்படுத்தப் பட்டிருந்தன. ஆங்கில நூல்கள் பயன்படுத்துவது குறைவாகவே காணப்பட்டாலும் ஆங்கில ஆசிரியர்கள் அந்நூல்களை பயன்படுத்தி இருப்பது ஒரு சிறப்பாகும். நூல்களை பயன்படுத்தும் ஆசிரியர்களான 25 ஆசிரியர்களுள் 5 ஆசிரியர்கள் மிக அதிகமாகவே நூலகத்தினை பயன்படுத்தி இருந்தனர்.

குண நல உள்ளீட்டு நிதி மூலம் நூலகத்திற்கான நூல்களைப் பெற்றிருந்தனர். எனினும் வசதிகள், சேவைகள் கட்டணத்திலிருந்து சிறப்பாக பயன்படுத்தப்படாமை அவதானிக்கப் பட்டது. நூல்களை சேகரிப்பதில் கூடிய கவனம் தேவை. இது தொடர்பாக திட்டம் ஒன்று தேவையாகும். இதனை அடுத்து கொட்டகலை பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நவோதயா செய்ற்றிட்டத்தின் கீழ் அந்நூலகம் கற்றல் வள நிலையமாக (Learning Resources Centre) மாற்றம் பெற்றுள்ளது. கற்றல் வள நிலையத்தில் தமிழ் நூல்கள், ஆங்கில நூல்கள், சிங்கள நூல்கள் காணப் படுகின்றன.

தமிழ் நூல்களின் வகைகள் எனும்போது வழமையான சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள், விமர்சன நூல்கள், சமய நூல்கள், தொழில்நுட்ப தொடர்பாடல் நூல்கள் போன்றவற்றுடன் கலைக்களஞ்சியங்கள், சங்க இலக்கியங்கள் போன்றன காணப் படுகின்றன.

தரமான நூல்கள் பல காணப்படுகின்றன எனலாம். 'நவோதயா' செயற்றிட்டத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற நிதியிலிருந்து (௫ இலட்சம் ரூபா) கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக ஓரளவு நூல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆங்கில நூல்கள் எனும்போது சிறுவர் கதைகள், நாவல்கள், பாடங்கள் தொடர்பான உசாத்துணை நூல்கள், அகராதிகள் போன்றன காணப்படுகின்றன. சிங்கள் நூல்கள் பெருமளவில் இல்லை. அவை பயன்படுத்தப்படுவதும் குறைவாகவே காணப் படுகின்றன.

நூலகப் பயன்பாடு என்று பார்க்கும்பொழுது இங்கு கடமை புரியும் 72 ஆசிரியர்களுள் மூன்றில் இரண்டு பகுதியினர், நூலகத் தினை பயன்படுத்துவது அவதானிக்கப்பட்டது. உதாரணமாக சித்திரப் பாடத்திற்கு வள நிலைய நூல்களின் துணையுடன் கற்பித்தலை மேற்கொள்கின்றனர். மேலும் ஒளி, ஒலிப்பதிவு சாதனங்களூடாக கற்பித்தலை மேற்கொண்டுள்ளனர். மாணவர் மேலதிக தேடல்களுக்காக கற்றல் வள நிலையத்தைப் பயன்படுத்தி குறிப்புகளை பெற்றுக் கொள்கின்றனர்.

தமிழ்மொழி அகராதிகளை பயன்படுத்த நூலகர் விளக்கங் களை வழங்கி வழிகாட்டி வருகின்றார். மேலும் மாணவர் வாசிப்புக் கேற்ற நூல்களை தெரிவு செய்து வகுப்பு ஆசிரியரிடம் வழங்கி பாடவேளை முடிய வகுப்பு ஆசிரியர் நூலகருக்கு ஒப்படைக்கும் நடைமுறை காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மாணவர்கள் அதிகமாக பாடப்பரப்பு தொடர்பான உசாத்துணை நூல்களையே அதிகம் பயன்படுத்துகின்றனர். அதனை மற்றொரு வகையில் பின்வருமாறு வகைப்படுத்திக் கூறலாம்.

தரம் 1-5 வரை மாணவர் பயன்படுத்தும் நூல் வகை சிறுவர் நூல்கள், கதைகள்

தரம் 6-9 பாடம் தொடர்பான நூல்கள், சிறுவர் நூல்கள், உசாத்துணை நூல்கள்

தரம் 10-11 நாவல், சிறுகதை, கட்டுரைகள், களஞ்சியங்கள்,தகவல், தொழில்நுட்ப நூல்கள், பாடம் தொடர்பான நூல்கள்.

தரம் 12-13 கணித, விஞ்ஞான, கலைப்பிரிவு மாணவர்கள் தத்தமது பாடத் துறைசார் நூல்களையும் பொது அறிவு நூல்களையும் பயன்படுத்துகின்றனர்.

நூலகத்தில் புதிய தொழிநுட்ப உபகரண பயன்பாடு, நூலகத்தின் அபிவிருத்தி மாத்திரமல்ல, வாசிப்பின் உயர்ச்சிக்கும் அதிகரிப்புக்கும் வழிவகுக்கும். இது எந்தளவு பரவலாக பாடசாலை களில் உள்ளன என்பது வினாவாகவே உள்ளது. எமது ஆய்வுக்குட்பட்ட பிரதேசத்தில் மொத்தமாக 38 பாடசாலைகள் காணப்பட்டன. அவைகள் பின்வருமாறு தரத்திலே காணப்பட்டன. இவைகளில் நூலக அபிவிருத்தி என்பது நவீன முறைகளுக்கு உட்படுத்தப்பட்டது மிகக் குறைவாகவே இருந்தமை குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

| பாடசாலை வகை | தொகை |
|---|---|
| **தரம் 1-5** | **25** |
| **தரம் 1-8** | **01** |
| **தரம் 1-9** | **02** |
| **தரம் 1-10** | **02** |
| **தரம் 1-11** | **04** |
| **தரம் 1-13** | **04** |

இயங்கும் வகுப்புகளின் அடிப்படையில் 38 பாடசாலைகளுள் க.பொ.த உயர்தர வகுப்புகள் உள்ள நான்கு (4) பாடசாலை களுள் இரண்டில் (2) மாத்திரமே நூலகம் (முறையானது) காணப்படுகிறது.

அவைகளும் பூரணத்துவமானது என கூற முடியாது. பாடசாலை தொகை மதிப்பு ௨008 பட்டோலையில் நூலகம் தொடர்பான விபரங்கள் உள்ளன. அதில் முறையான நூலகம் என்பது 'கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு, வேறு அரச நிதி, வெளிநாட்டு உதவிகள் அல்லது கொடையாளிகள் என்பன மூலமாக நூலக கட்டிடம் ஒன்று அமைக்கப்படக்கூடிய இடவசதி, நூலகத்திற்கு தேவையான புத்தகங்கள், மரத் தளபாடங்கள், நூலக உபகரணங்கள என்பன கிடைக்கப் பெற்று பயன்படுத்தப்படும் நிலையம் முறையான நூலகம் எனப்படும்' என்று கூறுகின்றது.

தற்காலிக நூலகம் மேல் குறிப்பிடப்படாத வேறு வகையில் பாடசாலை மூலம் அமைக்கப்பட்டு நூலக உபகரணங்கள் பயன்படுத்தும் இடம் தற்காலிக நூலகம் எனப்படுகின்றது. இத் தற்காலிக நூலகம் சில பாடசாலைகளில் காணப்படுகின்றது எனலாம். இதேவேளை Room To Read நிறுவனம் ஏழு பாடசாலை களுக்கு நூல்களையும் தளபாடங்களையும் வழங்கிய துடன் தொடர்ந்து நூலகம் தொடர்பாக நூலகர்கள் அல்லது நூலகத்தை நடத்துகின்ற சிரேஷ்ட ஆசிரியர்களுக்கு செயல் அமர்வுகளை நடத்துகின்றனர்.

மற்றையது இப்பிரதேசத்தில் மிக அதிகமாக காணப் படுகின்ற ஆரம்பக் கல்வி (1-5) பாடசாலைகளான ௨5 பாடசாலை களைப் பொறுத்தவரையில் நூலகம் அல்லது கற்கும் அறை உரிய முறையில் செய்யப்படவில்லை என்றே கூறலாம். கற்கும் அறை என்பது பாலர் பிரிவு மாணவர்களுக்கான பாட உபகரணங்கள், அறிவுசார் விளையாட்டுகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் ஆகியவற்றுடன் வாசிக்கும் சூழலமைவுடனான நிலையான கட்டிடம் என்று பட்டோலை வரைவிலக்கணம் கூறுகின்றது.

இது வாசிப்பு வீதத்தினை அதிகரித்தல் என்ற நோக்கத்திற்கு தடைக்கல்லாகும். பல பாடசாலைகளில் ஒரு சில நூல்கள் வாசிப்புக்காக வழங்கப்படுகின்றமை ஏதோ உண்மைதான். எனினும் வாசிப்பில் ஈடுபடாத ஆரம்பக் கல்வி ஆசிரியரும் அதிபரும் இதனை ஊக்குவிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாத ஒன்றாகும்.

நூலகத்தை மாணவர் பயன்படுத்துவதற்கான நேர அட்டவணை ஒன்று அவசியமாகும். புதிய சுற்று நிருபம் நேர சூசியில் நூலகப் பயன்பாட்டிற்கு பாட வேளைகளை ஒதுக்கி உள்ளது குறிப்பிடத்தக்கது. இதன்படி வாரமொன்றிற்கு ஒதுக்கப்படும் பாட வேளைகள்

| தரம் | பாடவேளை |
|---|---|
| 6- | 01 (40 நிமி) |
| 7- | 01 (40 நிமி) |
| 8- | 01 (40 நிமி) |
| 9- | 01 (40 நிமி) |
| 10- | 01 (40 நிமி) |
| 11- | 01 (40 நிமி) |
| 12- | 02 (80 நிமி) |
| 13- | 02 (80 நிமி) |

மேற்கண்ட சுற்று நிருப நூலக பாடவேளைகளை முறையாக மாணவர்கள் பயன்படுத்துகின்றனரா என்பதும் ஒரு வினாவாகும். நூலகம், வாசிப்பு அறை இல்லாத பாடசாலைகளும் கூட வாசிப்புக்கான நடமாடும் (Mobile Library Service) நூலக சேவையை செய்ய இயலும்.

ஆரம்பக் கல்வியில் காணப்படுவது போல் வாசிப்பு மூலம் அறிவை வளர்க்க முடியும். பொருட் பதிவேட்டு முறை (Inventory) அரச சுற்று நிருப முறைமை இவைகளுக்கு எல்லாம் புறம்பாக பாடசாலைகளில் எவ்வாறு சுதந்திரமாக திறந்த நூலக/ வாசிப்பு சேவையை ஏற்படுத்த இயலும் என சிந்திப்பது ஆரோக்கியமாகும் எனலாம். நூலக பதிவேட்டு முறை சுற்று நிருபம், அதிபர்கள், ஆசிரியர்களை பயமுறுத்துவதால் நூல்கள் அலுமாரிகளில் பாதுகாப்பாக தூங்குகின்றன என்பது மற்றொரு யதார்த்தமாகும்.

நூலக வாரத்தினை நடத்துவதன் மூலம் நூல்களை சேகரிக்கலாம். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், தொண்டர் நிறுவனங்கள், அமைச்சர்கள், அமைச்சுகள்,

மூலம் குறித்த இக்காலத்தில் நூல்களை சேகரிக்கலாம். பிறந்த நாள் பரிசாகவும் மாணவர்கள் நூல்களை வழங்கலாம்.

நூலக அபிவிருத்திக்காக போட்டிகளை நடத்தி பரிசளிக்கலாம். போட்டிகள் நூலகப் பயன்பாட்டின் மேன்மை தொடர்பானதாக அமையலாம். நூலக நூல்களின் உள்ளடக்க விடயங்களும் வினாக்களாக்கப்படலாம். இவை யாவற்றினதும் இலக்கு வாசிப்பின் பால் ஈர்ப்பை ஏற்படுத்துவதற்கே என்பதை உணரலாம்.

## மலையகப் பாடசாலையும்
## தொடர்பாடலும்

பாடசாலைகள் மனித உயிர்களுடன் உறவாடும் அறிவாலயம் எனலாம். மனித நேயத்தை, மனிதத்தை விதைக்கும் விளை நிலம் பாடசாலைகள் எனும் கலைக்கூடங்களாகும். இம்மனிதர்கள் பாடசாலைகளில் பல தரத்தினராக உளர். அவர்கள் அதிபர், ஆசிரியர், மாணவர், சிறு பணியாளர்கள் எனச் சொல்லலாம். இதனை மேலும் பிரித்து செல்லும் பொழுது பாடசாலையுடன் தொடர்புடையோர் என பலரைக் காணலாம். பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள், அரசியல்வாதிகள், கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் எனப் பலரை இத்தொடர் உள்வாங்கிச் செல்லும்.

எனவே இவர்களுக்கு இடையேயான மனித தொடர்பாடல் மிக முக்கியமானதாகும். மனிதர்களுக்கும் மனிதர்களுக்கு இடையேயான நெருக்கம், பிணைப்பு, பரஸ்பர உறவு, புரிந்து கொள்ளல் என்பது தொடர்பாடலின் மூலமே நிகழ முடியும். இந்நோக்கில் நாம் மலையகப் பாடசாலைகளில் இத்தொடர்பாடல் எவ்வாறு உள்ளது என்பதனை மேற்பார்வைகளின்போது அறிய முடிகிறது.

பாடசாலையில் அதிபர் முதலாவதாக இந்த முகாமைத்து வத்தை நன்றாக அறிந்திருத்தல் வேண்டும். இம்முகாமைத்துவ திறன் அற்ற அதிபர் செயல்திறனற்ற ஒருவராகவே காணப்படுவார். இவர்களுள் பலர் முகாமைத்துவ செயல் அமர்வுகளில் கலந்து கொண்டோர்களே ஆவர். ஆனால் அவர்கள் அதனை உள்வாங்கி நடைமுறையில் பிரயோகிப்பதில்லை என்பதே உண்மையாகும். 'ஏனோ தானோ' என்ற மனோபாவம் காரணமாகவோ அல்லது அசிரத்தை உதாசீனம் காரணமாகவோ பயனுறுதி வாய்ந்த ஒரு தொடர்பாடல் முறைமையை அவர்கள் பேணுவதில்லை. வளர்த்துக் கொள்வதுமில்லை. விளைதிறன், வினைத்திறன் மிக்க பாடசாலைகளிலேயே தொடர்பாடலும் பயனுறுதி வாய்ந்ததாக விளங்குவதை நாம் மேற்பார்வைகளின் போது கண்டோம். கப்பலை திசையறிந்து செலுத்துகின்ற மாலுமியைப் போல அதிபர் அறிவுறுத்தல்களையும், பணிப்புரைகளையும் கட்டளைகளையும், ஆலோசனைகளையும் உடனுக்குடன் வழங்க வேண்டிய நிலையிலுள்ளவர்கள் ஆவர். எனவே பாடசாலைகளில் அதிபருக்கு மாத்திரமல்ல ஆசிரியர்களுக்கும் இத்திறன் மிக அவசியமான ஒன்றாகும்.

**தொடர்பாடல் என்றால் என்ன?.**

'ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு ஒரு செய்தியை காவுகின்ற செயல் தொடர்பாடல் எனலாம்' என்கிறார் புறூக்கர் (Brooker) மேலும் விளக்குவதாயின், ஒரு தகவலை அல்லது பல தகவல்களை ஒரு தனியாளினாலோ ஒரு விலங்கினாலோ ஒரு கருவியினாலோ மற்றொரு தனி ஆளுக்கு அல்லது கருவிக்கு பரிமாற்றம் செய்வது.

எமது பாடசாலைகளில் இது எவ்வாறு நிகழ்கிறது. பேர்லோ (Berlo) குறிப்பிட்டது போல் அனுப்புபவர், செய்தி ஊடகம் , பெறுநர் ஆகிய நான்கு அம்சங்கள் அதிலுள்ளன. எமது பாடசாலைகளில் கற்பித்தலின்போது முறையாக சரியாக சொற்கள், வாக்கியங்கள் மாணவர்களுக்கு ஆசிரியர்களினால் வழங்கப்படுகின்றனவா என்பது ஒரு வினா. சில வினாக்கள் மாணவர்களைகுழப்பத்திற்குள் உள்ளாக்கும் வகையிலேயே தயாரிக்கப்படுகின்றன, கேட்கப் படுகின்றன.

இந்நிலையில் தொடர்பாடலில் தெளிவின்மையும், மயக்கமும் ஏற்பட்டுவிடுகின்றது. ஆசிரியர்கள் முதலில் தாம் கேட்க, எழுத விழையும் வாக்கியம் அல்லது வினா தொடர்பாக தெளிவு பெற்றிருத்தல் வேண்டும்.

பாடசாலைகளில் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் மாணவர்களுடன் செய்யப்பட வேண்டியுள்ளது. பொருத்தமான தொடர்பாடல் முறை இங்கு அவசியமாகும். மலையக பிரதேச பாடசாலைகளுக்கேற்ப சொற்பிரயோகமும் மாணவர்களின் வயதுக் கேற்ப சொல்லாட்சியும் மிக அவசியமாகும்.

வடக்கின் ஒரு பாடசாலை தொடர்பாடல் முறைமை இங்கு பொருந்தாது. பல பாடசாலைகளில் நடைமுறையில் பிரதேச ஆசிரியர் நியமனம் காரணமாக சிக்கல்கள் இல்லாதிருப்பினும் நகரப் பாடசாலைகளிலும் சப்பிரகமுவ மாகாணம், மத்திய மாகாணத்தில் சில வலயங்களிலும் பிரச்சினைகள் உள்ளன.

இஸ்லாமிய பாடசாலைகளில் கடமை புரியும் மலையகத் தமிழ் ஆசிரியர்களினாலும் தமிழ் பாடசாலைகளில் கடமைபுரியும் இஸ்லாமிய ஆசிரியர்களினாலும் சிற்சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. 'ஒரு பொது நியம மொழியை' பின்பற்றக்கூடிய காலம் இதுவரை மலரவில்லையாதலால் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் பிரதேசம், பிரதேச வழக்கு, மொழிப்பிரயோகம் பற்றிய அறிவு பெற்றிருக்க வேண்டிய தேவை உள்ளது. இல்லை எனில் செய்தியை சொல்லுகின்ற ஆசிரியருக்கும் பெறுகின்ற மாணவர்க்கும் இடையில் ஒரு 'தடை' (Barrier) திரையாக விழ மாணவர்க்கு ஆசிரியரின் செய்தி சென்றடையாமலேயே நின்று விடுகின்றது.

மலையகப் பாடசாலைகளில் மிக மிக பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மாணவர்கள் (ஏன் ஆசிரியர்களும் கூட) ஆசிரியர்களின் உரையாடலை விளங்க சிரமப்பட்டிருப்பதை அவதானித்தோம். மாணவர்களுடன் வாய்மூலம் மாத்திரம் அல்லாது கடிதம் மூலமும் பரிமாறிக்கொள்ள வழி உள்ளது.

என்றாலும் இதுவரை மலையகப் பிரதேசங்களில் வெற்றிகரமான ஒரு தொடர்பாடல் முறைமை வந்து சேரவில்லை என்பதே உண்மையாகும். அதாவது சாதாரண மனிதர்களுக்கு இடையேயான கடிதப் போக்குவரத்து மந்தமாகவே செயற்பட்டு வருகின்றது. கடிதங்கள், தந்திகள் இன்னுமே அரச நியமங்களிலும், நேர்முகப்பரீட்சைகளிலும் தாக்கம் செலுத்தியே வந்து கொண்டிருக்கின்றன.

கைபேசியும் (செல்போன்) தொலைபேசியும் இன்று ஓரளவு இதனை நிவர்த்தி செய்து வருவது உண்மையே. மலையக மக்களுக்கு சுத்தம், சுகாதாரம், கல்வி மந்த போஷனை, வீடின்மை, சிறுவரை வேலைக்கமர்த்தல் (உடல் ரீதியான துஷ்பிரயோகம்) சம்பளம், தேசிய அடையாள அட்டை பெறாமை போன்றன யாவும், 'எதிர்க்கணியத்தில்' உள்ளது போலவே கடிதப் போக்குவரத்தும் உள்ளது எனில் தவறில்லை.

மலையகப் பாடசாலைகளின் உள்ளே நவீன தொடர்பாடல் முறைகள் தற்பொழுதுதான் ஒரு சில பாடசாலைகளில் நடைமுறைக்கு வந்துள்ளது. தொலைநகல், (Electronic Mail system) Internet என்பன அவையாகும்.

எனினும் சாதாரண பாடசாலைகளில் இதுவரை தொலைபேசி (Landphone) வசதிகள் மிகக்குறைவாகவே உள்ளன.

பாரம்பரியமான அறிவித்தல் பலகை அறிவித்தல்கள் (Notice Board) ஒலிபெருக்கி, சுற்று நிரூபம், ஆசிரியர் கூட்டங்கள் (Staff Meeting) காலைக்கூட்டம் (Assembly) வழிபாட்டிடங்கள், வகுப்பறை போன்றன மூலம் செய்திகள் பரிமாறப்பட்டு வருகின்றன.

அதிபரின் அறையிலிருந்து நேரடியாக வகுப்புகளுக்கு செய்தியை கடத்தும் தொடர்பாடல் முறைகள் மலையகப் பாடசாலைகளில் அரிதாக ஒரு சில பாடசாலைகளிலேயே நடைமுறையில் உள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது.

மலையகத்தில் ஒரு சில ஆரம்பப் பாடசாலைகளில் கடிதம், காலைக்கூட்டம், பாடசாலை பணி பிரயோகிக்கப் படாததும் அவதானிக்கப்பட்டது. எனினும் பெருமளவு பாடசாலைகளில் பாடசாலை மணி நடைமுறையில் உள்ளது. பாடசாலைகள் சமூகத்துடன் தொடர்பு கொள்ளும் போது பயன்படுத்தக்கூடிய தொடர்பாடல் முறையையும் சாதனங்களையும் பயன்படுத்த வேண்டிய தேவை உள்ளது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் பிற நிறுவனங்கள் போன்றவற்றுடன் பாடசாலை பல்வேறு சந்தர்ப்பங்களில் தொடர்பு கொள்ளல் மூலமே பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் இயலும்.

மலையகத்தினை பொறுத்தவரையில் பெருமளவு பாடசாலை கள் ஆரம்பப்பிரிவு பாடசாலைகள் தோட்டங்களி னுள்ளே உள்ளன. ஒரு சில (பெரிய) தரம் உ,। சி, பாடசாலைகளே தோட்டங்களினுள்ளே உள்ளன.

இந்நிலையில் இப்பாடசாலைகளுக்கான தொடர்பாடலில் பல குறைபாடுகள் உள்ளன. கடிதப் போக்குவரத்து இதில் முதன் மையானது. மேலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் இங்கு காத்திரமான வகையில் இயங்காமை கண்டறியப்பட்டுள்ளது. செய்தியை அனுப்புவதிலும், செய்தியை பெற்றுக்கொள்வதிலும் கால தாமதங்கள் ஏற்பட்டு வருகின்றன.

## மலையகத்தில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுவதன் மூலம் உயர் கல்வியை வலுவடையச் செய்யலாம்.

சிறந்த கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப் பெறுபேற்றை பெறுவதன் மூலமே உயர் கல்வியைத் தொடரும் மாணவர்களின் தொகையை அதிகரிக்க முடியும் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். எந்த ஒரு பாடசாலையையோ அதிபரையோ அல்லது கல்விப் பணிப்பாளரையோ குறை கூறுதல் ஆரோக்கியமானது அன்று. மாறாக பின்னடைவுக்கான காரணங்களைக் கண்டறிந்து ஆலோசனைகளையும், வழிகாட்டல் களையும் தேடிச் செல்வதே சரியான அணுகுமுறையாகும்.

அதிபர்களும், ஆசிரியர்களும் இவ்வாறானதொரு தேடலையும் பகுப்பாய்வையும் பெற்றிருத்தல் அவசியமாகும். இவ்வாறான அறிவு சார் புதிய அணுகுமுறைகளின் ஊடாகவே உயர்தரத்திற்குத் தகுதி பெறும் மாணவர் தொகையை அதிகரிக்க கூடியதாக இருக்கும். 2008 ஆம் ஆண்டு நுவரெலியா கல்வி வலயத்தில் பெறுபேற்று பகுப்பாய்வின்படி தோற்றிய 1930 மாணவர்களிலிருந்து 522 பேர் மாத்திரமே தகுதி பெற்றிருப்பதாக பகுப்பாய்வு கூறுகின்றது.

இது தோற்றிய மாணவர் தொகையின் 27 சதவீதமாகும். மற்றொரு வகையில் பருமட்டாகக் கூறுவதாயின் தோற்றிய மாணவர் தொகையில் 1/4 பகுதியினரே க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெற்றிருக்கின்றனர். இத்தொகை மலையக மாணவர்களின் உயர் கல்வியை மேம்பாடடையச் செய்வதற்கு போதியதாக இல்லை என்று தான் கூறவேண்டும். குறிப்பாக நுவரெலியா போன்ற கல்வி வலயங்களின் பெறு பேறுகள் அதிகரிக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளமையை மறுத்தல் இயலாது.

நுவரெலியா கல்வி வலயத்திலிருந்து தோற்றியவர்களுள் 1/2 பகுதியினர் ஆவது க.பொ.த உயர்தரத்திற்கு தகுதியைப் பெறல் வேண்டும். இதுவே ஆரோக்கியமான பெறுபேறாக இருக்க முடியும். ஆயினும் இது இலகுவான ஒரு விடயம் அல்ல. மேலும் இப்பெறுபேற்றினை நோக்கும் பொழுது பரீட்சைக்கு தோற்றிய வர்களில் 50 சதவீதத்திற்கு மேல் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி

பெற்ற பாடசாலைகள் மிகக் குறைவாகவே உள்ளன. 38 பாடசாலைகளில் 03 (மூன்று) பாடசாலைகளே (50 வீதம் - 100 வீதம்) 50 வீதத்திற்கு மேல் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதியைப் பெற்றுள்ளன.

25-50 இடையே க.பொ.த உயர்தரத்திற்கு தகுதியைப் பெற்ற பாடசாலைகள் 5 பாடசாலைகளாக உள்ளன. ஏனையவை யாவும் 25 வீதத்திற்கும் குறைவான தகுதியையே காட்டுகின்றன. அதாவது 30 பாடசாலைகள் க.பொ.த. உயர்தரத்திற்கு குறைவான தகுதியை பெற்றுள்ளதாக காட்டுகின்றது.

இந்நிலை மலையகத்தின் உயர் கல்வியை மேம்பாடையச் செய்யும் இலக்கிற்குத் தடையாக (Barrier) உள்ளது எனலாம். இந்நிலை மாற்றம் ஏற்படுவதன் மூலமே உயர் தரக் கல்விக்கான மாணவர் தொகையை அதிகரிக்க இயலும். 25 சத வீதத்திற்கும் குறைவானோர் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெறும் பாடசாலைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். இப்பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன? ஆசிரியர் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை, முறையான நிருவாகம் இன்மை, மாணவர்களின் அசிரத்தை போன்ற பல விடயங்கள் பெறுபேற்றினை பாதிப்படையச் செய்யலாம். அல்லது இக்காரணங்களுள் சிலவாவது காரணமாக இருக்கலாம். க.பொ.த சாதாரண தர க.பொ.த உயர்தர பாடசாலைகளில் அதிபர்களால் மூடி மறைக்கப்படும் பல புதிய பிரச்சினைகளும் உள்ளன. இவை பல முன்னணிப் பாடசாலைகளில் உள்ளன.

டீன் ஏஜ் பருவத்திற்கே உரிய காதல் கடித விவகாரங்கள் மாத்திரமல்லாது வேறு பல தீய விடயங்களும் கூட மலையகப் பாடசாலைகளில் பரவி வருகின்றன என்பதே கவலைக்குரிய விடயமாக இருந்து வருகின்றது. போதைப் பொருள் பாவனை, மது பாவனை, சிகரட் போதைப் புகைப் பழக்கம் என்பன அவையாகும். க.பொ.த சாதாரண, க.பொ.த உயர்தர வகுப்புகளில் இவை செலுத்தும் தாக்கம் பற்றி இன்னுமே முறையான சரியான விபரங்கள் இல்லை. இந்நிலை க.பொ.த சாதாரண தரப் பெறுபேற்றினை ஒரு குறிப்பிட்ட வீதம் பாதிப்படையச் செய்கின்றது.

இப்பிரச்சினைகளுக்கெல்லாம் உளவளத் துறை செயற் பாடுகள் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்றனவா என்பதும் கேள்வியாகும். அவ்வாறு எடுக்கப்பட்டாலும் முறையாக இத்துறை சார்ந்த ஆசிரியர்களினால் அவை முன்னெடுக் கப்படவில்லை என்பதே யதார்த்தமாகும். உளவளத்துறையைச் சார்ந்த ஆசிரியர்கள் இன்மையும் அதிபர்களினாலும் ஏனையோர் களினாலும் இத்துறை தொடர்பான விளக்கமின்மையும் பல சிக்கல்களை தோற்றுவிக்கின்றன.

உளவளத்துறைச் செயற்பாட்டில் ஈடுபடவும் வழிகாட்டவும் வலய மட்டத்திலும் கூட முறையான வேலைத்திட்டம் இல்லை. அனைத்து க.பொ.த சாதாரண தர வகுப்பு ஆசிரியர்களுக்கும் உளவளத்துறை (Counseling) பயிற்சி வழங்கப்பட வேண்டும். க.பொ.த சாதாரண தர பெறுபேற்றை உயர்த்துதல் என்பது பல்வேறு காரணிகளில் சங்கிலித்தொடர் போல தொடரும் ஒரு நிகழ்வாகும். ஆகையால் க.பொ.த சாதாரண தரப் பெறுபேற்றை உயர்த்தும் இலக்கை அடையத் திட்டங்களும், கடின உழைப்பும் செயற்பாடுகளும் வலய மட்டத்தில் மாத்திரமல்ல அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் போன்ற அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் வீறு கொண்டெழுதல் வேண்டும்.

## 2009 க.பொ.த.சாதாரண தர பெறுபேறுகளும் மலையக பாடசாலை மாணவர்களும்

௨009 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரணதர பெறு பேறுகள் வெளியான பின்னர் அது தொடர்பான பகுப்பாய்வு ஒன்றினைக் கல்வி அமைச்சுமேற்கொண்டுள்ளது.

இது வழமையானதொரு நடைமுறையே, இதன்படி தேசிய ரீதியாக பிரதான பாடங்களில் மாணவர்களின் பெறுபேறுகள் பின்னடைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

***தேசிய ரீதியாக மாத்திரமல்ல***
***மாவட்ட ரீதியாகவும் இந்நிலைமையே***
***காணப்படுகின்றது.***
***இதில் மொழி தொடர்பாக***
***பார்க்கும் போது ஆங்கில***
***மொழி சித்தி***
***இன்மையும் கவனத்தில்***
***கொள்ளப்படல் வேண்டும்***

கணிதம், விஞ்ஞானம், தமிழ், சிங்களம் ஆகிய பாடங்களி லேயே பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டு ள்ளது. மொழியை பொறுத்தவரையில் தமிழ் மொழியில் ௨5 சத வீதமானோர் சித்தியடையவில்லை. பொதுவாக இந்நிலை திடரென ஏற்பட்ட ஒன்றல்ல என்பதும் இடைநிலை வகுப்புகளிலேயே இப்பிரச்சினை ஆரம்பிக்கின்றது என்பதும் ஓர் உண்மையாகும்.

தேசிய ரீதியாக மாத்திரமல்ல, மாவட்ட ரீதியாகவும் இந்நிலைமையே காணப்படுகின்றது. இதில் மொழி தொடர்பாக பார்க்கும்பொழுது ஆங்கில மொழி சித்தி இன்மையும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். கடந்த பல ஆண்டுகளாக இவ்விடயம் இவ்வாறே உள்ளது.

மாகாண, வலய, கோட்ட மட்ட மேற்பார்வைகளின்போது இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனினும் இதில் பல பிரச்சினைகள் உள்ளன. சில வலயங்களில் மொழி, கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்காக விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பது உண்மையே.

எனினும் தொடர்ந்து தேர்ச்சியாக ஆசிரியர்களும், மாணவர்களும் பெற்றோர்களும் ஒத்துழைக்கின்றனரா என்பது கேள்விக்குறியாகும். உதாரணமாக நுவரெலியா கல்வி வலயத்தின் கோட்டம் மூன்றில் (ஹோல்புறூக்) world Vision 2009 கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்காக விசேட செயற்றிட்டங்களை சனி, ஞாயிறுகளில் ஏற்படுத்தி இருந்தது. இதனை சில நிலையங்களில் பயின்ற மாணவர்கள் பயன்படுத்திட ஆர்வம் காட்டாமையால் இது பற்றி மீள ஆலோசிக்கப்பட்டது. இதன் பிரதிபலிப்பாக குறிப்பிட்ட வரவுகுறைவான மத்திய நிலையங்களில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

2009 ஆம் ஆண்டு பரீட்சை பெறுபேறு (க.பொ.த.சாதாரண தரம்) வெளிவந்தவுடன் வரவு குறைவான நிலையங்களில் பயின்ற மாணவர்களின் அடைவு மட்டம் குறைவாக காணப்பட்டது. நுவரெலியா கல்வி வலயத்தின் 2008 ஆம் ஆண்டுக்கான பகுப்பாய்வின் படி தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்திற்கு தோற்றிய 1929 மாணவர்களில் 1430 மாணவர்கள் சித்தியடைய ஏறத்தாழ 500(499) மாணவர்கள் தமிழ் மொழியில் சித்தியடையவில்லை என்பதை காட்டுகின்றது. ஆரம்ப வகுப்புகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பற்றாக்குறையால் தமிழ்மொழியில் மாணவர்களின் தேர்ச்சி குறைவாக காணப்பட்டது.

ஆங்கில மொழியிலும் மிகக் குறைவான சித்தியைப் பார்க்கலாம். 1928 பேர் தோற்ற சித்தி பெற்றோர் 291 பேரே ஆகும். ஏறத்தாழ 1637 பேர் சித்தியடையாமை பெரும் பின்னடைவாகும். இதற்கு பல காரணங்கள் உள்ளன.

- நீண்ட காலமாக போதிய ஆங்கில ஆசிரியர்கள் இன்மை ஒரு காரணமாகும்.
- நீண்ட காலம் ஆசிரியர் இல்லாமையால் மாணவர்களுக்கு ஆங்கில அடிப்படை அறிவு இன்மை மற்றொரு நிலையாகும்.

- இதன் விளைவாக அந்தந்த வகுப்புகளுக்கு உரிய பாடத் திட்டங்கள் முடிக்கப்படாமை.

- பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவும் பதிலீடாக ஆங்கிலம் கற்பிக்க கூடிய ஆசிரியர்களை தேட வேண்டி உள்ளமை.

- 3179 ஆசிரியர் நியமனத்தில் நுவரெலியா வலயத்திற்கு ஆங்கில ஆசிரியர் கிடைத்திருப்பினும் அவர்கள் பயிற்சி பெறவேண்டிய நிலையிலுள்ளமையால் பெறுபேற்றை எதிர்பார்க்க முடியாதுள்ளது.

2010 இல் பெறுபேற்றில் இந்நிலை மாறியிருக்கும் என எதிர்பார்த்தல் இயலாது. 2008 ஆய்வின்படி கணித பாடத்திற்கு தோற்றிய 1886 பேரில் 610 பேரே சித்தியடைய ஏனைய 1276 பேர் சித்தியடையவில்லை. விஞ்ஞான பாடத்திலும் தோற்றிய 1923 பேரில் 451 பேரே சித்தியடைந்துள்ளனர். 1472 பேர் சித்தியடையவில்லை.

**கணித, விஞ்ஞான பாட விடயங்கள்**

- ஆசிரியர்கள் போதிய அளவு இல்லாமை
- தொடர்ச்சியாக இப்பாடங்களை முறையாக கற்பிக்க இயலாமை.
- பதிலீடாக ஆசிரியர்கள் இன்மை
- 3179 ஆசிரியர் நியமனத்தில் பலர் போதிய அனுபவம் இல்லாமையால் கற்பிக்க சிரமப்பட்டமை அத்துடன் அவர்கள் எவ்வித பயிற்சியுமின்றி நியமனம் பெற்றமை.
- இயல்பாகவே தொடர்ந்து வரும் மனோ ரீதியான கணித/விஞ்ஞான பாட 'பயம்' போன்ற பல காரணங்களைக் கூறலாம்.

கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் இன்று பலர் நியமனம் பெற்று ஆசிரியர் கலாசாலைகளுக்கு சென்றுள்ளமையால் நுவரெலியா வலயத்தில் இரண்டொரு வருடங்களில் நல்ல பெறுபேறுகளை எதிர்பார்க்கலாம்.

எவ்வாறெனினும் கணித, விஞ்ஞான துறைக்கான தடையான நச்சு வட்டம் உடைக்கப்படல் வேண்டும்.

- கடந்த காலங்களில் மத்திய மாகாண கல்வி அமைச்சு பல வேலைத்திட்டங்களை இதற்காக முன்னெடுத்தது.
- இந்திய ஸ்தானிகர் உதவியுடனான விஞ்ஞான கூட அபிவிருத்தி.
- விஞ்ஞான உபகரணங்கள் வழுங்கல்.
- விஞ்ஞான /கணித ஆசிரியர்களுக்கான செயலமர்வு
- இந்திய ஆசிரிய நிபுணர்களின் உதவியுடனான கற்பித்தல் பயிற்சிகள்
- ஆசிரியர்களுக்கான இந்தியப் புலமைப் பரிசில் பயணம்
- இந்தியாவில் பட்டப் படிப்பைப் பெற வழி

போன்ற பல செயற்றிட்டங்கள் முன்னாள் அமைச்சர்களான வி.இராதாகிருஷ்ணன், எஸ்.அருள்சாமி போன்றோர்களால் முன்னெடுக்கப்பட்டன.

**நினைவு கூரத்தக்கது.**

குறிப்பாக இந்திய உதவி ஸ்தானிகராக இருந்த ராஜன் பிள்ளை, காத்திரமான பல வேலைத் திட்டங்களை முன்மொழிந்து செயற்பட்டமை நன்றியுடன் நினைவு கூரத்தக்கது. தொடர்ந்து இவ் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதுடன் மேலும் இதன் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட மத்திய மாகாண கல்வி அமைச்சு முன்வரல் வேண்டும்.

தேசிய ரீதியாக கணித, விஞ்ஞான, தமிழ்மொழி, ஆங்கில பாட அபிவிருத்திக்கு வேலைத்திட்டங்கள் மென்மேலும் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதேபோல் 2008, 2009 களில் 'GTZ' நிறுவனம் முன்னெடுத்த கணித பாட அபிவிருத்தி (20-30 புள்ளிகள் பெற்ற மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரித்தல்) வேலைத்திட்டம் போன்ற விசேட வேலைத் திட்டங்களே தேவை.

இது போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது முதலில் பெற்றோர்களை பிள்ளைகளுடன் அழைத்துக் கலந்துரையாடுவது நல்லது. நுவரெலியா வலயத்திற்கு மாத்திர மல்லாது பொதுவாக மலையகத்தின் ஏனைய வலயங் களுக்கும் இவ்வேலைத் திட்டங்கள் அவசியமானவையாகும்.

## மலையக பாடசாலைகளில் பண்புசார் விருத்திமுறை பயன்படுத்தப்படுகின்றதா

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் கல்வி மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. நாட்டினது செயற்றிட்டங்களை தூரநோக்குடன் திட்டமிடும் வேளையில் நாட்டினது தேவைக்கு ஏற்ப கல்வியையும் திட்டமிட வேண்டியுள்ளது. மேலும் அத்துறையை மதிப்பீடு செய்வதன் மூலமே எதிர்பார்த்த இலக்கை அடைய இயலும் என்பதை இன்று பல நாடுகள் உணர்ந்துள்ளன.

இந்நோக்கிலேயே பாடசாலை என்ற கட்டமைப்புக்குள் ஒரு தொடர் மதிப்பீட்டுச் செயற்பாடு மிக அவசியம் என்றுணரப் பட்டுள்ளது. உள்ளீடுகள் கல்விக்காக எவ்வளவுதான் கொட்டப் பட்டாலும் அதற்குரிய வெளியீட்டைப் பெற மதிப்பீட்டுச் செயற்றிட்டம் அவசியமாகும்.

காலத்துக்குக் காலம் இது தொடர்பான செயற்பாடுகள் இடம்பெற்று வந்துள்ளன. எனினும் அவை காலத்துக்கு ஏற்ப மாற்றமடைந்தே வந்துள்ளன. பரீட்சித்தல் (Inspection) மிக ஆரம்பத்தில் வட்டாரக் கல்வி அதிகாரிகள் (Circuit Education Inspector) இருந்த காலத்தில் இருந்த முறையாகும். அவர்கள் வருடத்திற்கு ஒருமுறை வருடாந்த அறிக்கைப் படிவத்தை (Annual Return Form) அதற்காக பாவித்தார்கள். இம்முறை மிகவும் அதிகாரத்துவம் வாய்ந்ததாக காணப்பட்டமையால் காலப்போக்கில் இம்முறை மாற்றமடைந்தது. இதற்குப் பதிலாக மேற்பார்வை (Supervision) முறை அமுலுக்கு வந்தது. மற்றொரு வகையில் ஆசிரியர்களின் செயற்றிட்டங்களை மேற்பார்வை செய்யவும் ஒழுங்குப்படுத்தவும் செயற்றிறன் நடைமுறைக்கு வந்தது.

இன்று பல கல்விச் சிந்தனைகளின் தாக்கத்தால் அதிகாரம் செய்தல் தவிர்க்கப்பட்டு உதவி செய்தல் அல்லது உதவி மேற்பார்வை நிலைக்கு மாறி உள்ளது. இந்தப் பின்னணியில் 'பண்புசார் விருத்தி' என்ற எண்ணக்கரு வலுப்பெற்று இன்று இம்முறை பின்பற்றப் படுகின்றது.

ஆலோசகர் (Guide) வசதி செய்பவர் (Facilitator), உதவியாளர் (Mentor) என்ற பங்கையே மேற்பார்வைக் குழு எடுக்க வேண்டியுள்ளமைகுறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்

கல்வித்தரத்தை உறுதிப்படுத்தல் (Quality Assurance) மிக முக்கிய நோக்காக பண்புசார் அபிவிருத்தி கொண்டுள்ளது.

30 பாடசாலைகளில் செயற்படுத்தப்பட்டு வளவாளர்களின் உதவியுடன் 560 அதிகாரிகள், ஆசிரியர் ஆலோசகர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்நிகழ்ச்சித் திட்டம் மாகாண மட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டு வலய கோட்ட மட்டத்திற்கும் அறிமுகம் செய்யப்பட்டு அமுலாக்கப்பட்டு வருகின்றது. 53 பண்புத் தரங்களும் 180 சுட்டிகளும் 900க்கும் அதிகமான நியதிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

பண்புத்தர சுட்டிகளின் அடிப்படையில் புள்ளிகளைக் கணித்தல் இச் செயற்றிட்டத்தின் சிறப்பம்சமாகும். பன்முக ரீதியாக பரவலாக எல்லா விடயங்களையும் உள்வாங்கி மதிப்பீடு செய்யும் இம்முறை பாடசாலையை முழுமையாக பார்க்க முயலுகிறது. பிரதான வகுதிகள் 7 (ஏழு) மையமாக கொண்டு கல்வியில் தரம் தயார் செய்யப்பட்டுள்ளது.

கல்வித் தர உறுதிப்பாடு தொடர்பான இச்செயன் முறையின் அடுத்த முக்கிய விடயம் அறிக்கை தயாரித்து பாடசாலைகளுக்கு அளித்தலாகும். இதன் மற்றொரு அம்சமான ஆலோசனைகள் வழங்குதல், பின்னூட்டல், வழிகாட்டல் போன்றன தொடர்கின்றன.

இச் செயற்பாடுகளை மாகாண மட்ட மேற்பார்வை, வலய, கோட்ட மட்ட மேற்பார்வைகளின் போது சிறப்பாக முன்னெடுக்க மேற்பார்வைக்குரிய தலைவர்கள் (Team Leaders) திட்டமிடுவதன் மூலமே இந்நோக்கத்தை அடைதல் இயலும்.

கல்வி அலுவலகங்கள் எந்தளவு பாடசாலையின் கல்வித்தர அபிவிருத்திக்கான கல்வித்தர உறுதிப்பாட்டை செய்கின்றன என்பது விமர்சனத்திற்குரியதாகும். திட்டமிட்டப்படி மேற் பார்வை கள் நடை பெறுகின்றனவா? வலயத்திலிருந்து கல்வி அதிகாரிகள், பாடத்திற்கு பொறுப்பான பணிப்பாளர்கள் வருகை தருகின் றார்களா? மேற் பார்வைக்கான வாகன வசதிகள் முறையாக வழங்கப்படுகின்றனவா?

கல்வித் தர அபிவிருத்திக்காக பணிப்பாளர்கள் பாடசாலை தரிசனத்தை கரிசனையுடன் செய்கின்றார்களா? போன்றன வினாக்களாகும். செயல் அமர்வுகளின் குகைகளாக பணிமனைகள் உருவாகி விட்டமையால் அவர்களின் பார்வை, வீச்சு, நோக்கு, செயற்பாடு திசை திரும்பி வருவதை கல்வியியலாளர்கள் கவலை யுடன் அவதானித்து வருகின்றார்கள்.

இலங்கையின் கல்வி வரலாற்றில் அறிமுகப்படுத்தப்பட்ட பல நல்ல ' அறிமுகங்கள்' நடைமுறையில் வெற்றி பெறாமைக்கு கல்விப் பணிமனைகளின் நோக்கு திசை மாறியமையும் அதிபர், ஆசிரியர்களின் 'ஏனோ தானோ' செயற்பாடுகளுமே காரணங்களாகும்.

"இத் திட்டத்தை இவ்வளவு காலத்தில் செய்து இந்தப் பிரதிபலனை (Performance) தரல் வேண்டும் அல்லது தண்டனைக் குரிய விடயங்கள் பல கவனத்தில் எடுக்கப்படும் பதவி ஏற்றம், படி ஏற்றம் நீக்கப்படும்" என ஏதும் இன்மையால் கடப்பாடு இல்லாத வர்களாக பலர் இருக்கின்றார்கள்.

எவ்வாறெனினும் உண்மையில் இக் கல்வித் தர உறுதிப் பாட்டு செயற்பாட்டை ஒரு நல்ல அதிபர் முறையாக பயன்படுத்திக் கொள்ள நிறையவே வாய்ப்புள்ளது. பண்புசார் விருத்தியை மேம்படுத்த பல பன்முகப் பார்வையை இதன் மூலம் ஆசிரியர் களிடையே விரிவாக்க இயலும். இதன் மூலம் ' தரமான சமூகத்திற்கு தரமான கல்வியை வழங்க இயலும்.

## மலையகமும் மத்திய கிழக்கும்

சிறுவர் சிறுமிகளுக்கு கல்வி மகிழ்ச்சிகரமானதாக உள்ளதா? மகிழ்ச்சிகரமான வகுப்பறைக் கற்பித்தல் நிகழ்கின்றதா? இலங்கையில் அவ்வப்போது அறிமுகம் செய்யப்பட்ட அல்லது தற்போது செய்யப்பட்டு வருகின்ற கல்விச் சீர்திருத்தங்கள் முழுமையாக மாணவனை அல்லது பாடசாலையை சென்றடைந்து உள்ளதா என்ற வினாவைத் தொடுக்கும் போது கல்வித் துறையிலீடுபட்டிருப்பவர்களுக்கு சரியான விடை தெரியும்.

இந்த வகையில் மலையகத்தைப் பற்றிக் கூற வேண்டுமா? இன்று மலையகக் குழந்தைகளுக்கு கல்வி ஒரு சுமையாகி வருவதையே நாம் அனைவரும் காணுகிறோம். மலையக சிறார்களுக்கு வறுமைச் சுமையுடன் கல்வியும் சுமையாகி வருகிறது. பாரம்பரியமான தேயிலைச் செய்கையில் 200 ஆண்டுகளுக்கு மேல் ஒரு மக்கள் கூட்டம் தனது வாழ்வாதாரத்தைத் தேடிட வேண்டி உள்ளது. இதிலே தோட்டத் தொழிலாளர்களின் வறுமை, வருமானம் இன்மை, வேலை நாட்கள் குறைப்பு, சுகாதாரம், போஷாக்கு இன்மை

| பாடசாலை | வகுப்புத்தரம் | மாணவர் தொகை | வெளிநாடு சென்றவர்கள் |
|---|---|---|---|
| அ | 9A | 40 | 12 |
| | 9B | 40 | 13 |
| | 10A | 40 | 24 |
| | 10B | 35 | 08 |
| | 11A | 35 | 08 |
| | 11B | 35 | 08 |

இன்னும் புதிய படித்த கூட்டத்தினருக்கு தமது வாழ்விடப் பிரதேசங்களிலே வேலை கிடைக்காமை என்பன சுமையாகி வருகின்றன.

இன்று பல மலையகப் பெண்கள், தாய்மார்கள் மத்திய கிழக்கு நோக்கிப் புறப்பட்ட வண்ணம் உள்ளனர். இளம் பெண்கள் விசேடமாக கொழும்பிலுள்ள வீடுகளுக்கும், ஆடைத் தொழிற் சாலைகளுக்கும் வேலைக்குச் செல்கின்றனர். ஆண்களும் இதற்கு விதிவிலக்கல்ல. வறுமை, வருமானம் இன்மை, உரிய வேலை நாட்கள் தோட்டங்களில் வழங்கப்படாமை, பிள்ளைகளின் கல்யாண தேவைகளின் அழுத்தம் போன்ற பல காரணங்களினால் வீட்டை விட்டு வெளிச்செல்லும் குடும்பத்தவரால் பாடசாலை செல்லும் பிள்ளைகள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

கொழும்பு அல்லது வெளிநாடு செல்லும் மலையகத்த வர்களின் தொகை தோட்டத் துறையின் வருமான வீழ்ச்சி காரணமாக நாளுக்கு நாள் அதிகரித்தே வருகின்றது.குறிப்பிட்ட ஒரு பிரதேச பாடசாலையில் தரம் 9A, 9A, 10A, 10B, 11B, 11B வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஓர் ஆய்வின்போது மலையக பாடசாலைகளுக்கு (குறிப்பாக பெருந்தோட்டத்து பாடசாலைகளுக்கு) மாணவர்கள் ஏன் ஒழுங்காக வருவதில்லை என்பதற்கு ஒரு காரணமாக இதனைக் கொள்ள முடிந்தது.

வெளிநாடு சென்றோர்களின் பிள்ளைகள் பெருமளவில் பாட்டிமாருடனேயே வாழ்கிறார்கள். பராமரிக்கப்படுகிறார்கள். அல்லது தாய் வெளிநாடு சென்று-விட்டால் தகப்பன்மாரால் பராமரிக்கப்படுகின்றார்கள். இதனால் ஒரு பிள்ளைக்கு உரிய 'காப்பு' கிடைக்குமா என்பது உளவியல் ரீதியாக சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். இந்நிலையில் இம்மாணவர்கள் வீட்டு வேலைகளையும் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர்.

உதாரணமாக வீட்டிலிருக்கும் சிறு குழந்தைகளை பராமரித்தல், சமையல் செய்தல், ஆடு, மாடு இருப்பின் புல் அறுத்தல், அவைகளை பராமரித்தல், உடைகளை சலவை செய்தல், தோட்டம் இருப்பின் அவ்வேலைகளை செய்தல் போன்ற இன்னோரன்ன வேலைகளை செய்கின்றனர.

சிறுவர் துஷ்பிரயோகம் பாலியல் துஷ்பிரயோகம் என்பனவும் (இல்லத்து சூழலில்) நடைபெறுகின்றன என்பதற்கு வெளி வருகின்ற ஒரு சில விடயங்கள் சாட்சி பகர்கின்றன. இந்நிலையில் இவர்களுக்கு படிப்பதற்கு ஏற்ற மனநிலை இல்லாதிருப்பதோடு தொடர்ந்து பாடசாலை செல்வதற்கு முடியாமல் உள்ளது.

மேலும் இதனை ஆரம்ப வகுப்பு பாடசாலைகளில் பார்ப்போமானால் (தரம் 1- தரம் 5 வரை) மலையகத்தின் கல்வி வளர்ச்சிக்கு இதுவும் ஒரு தடைக் கல்லாகி வருவதை உணரலாம்.

**பாடசாலை 'ஆ'**

குறிப்பிட்ட ஒரு பாடசாலையின் குறித்த ஒரு வகுப்பில் ஜனவரியிலிருந்து தொடர்ந்து

| தரம் | மாணவர் தொகை | வெளிநாடு | வெளி மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | 28 | 06 | 04 |
| 2 | 22 | 04 | 02 |
| 3 | 18 | 02 | 03 |
| 4 | 20 | 05 | 01 |
| 5 | 29 | 03 | 06 |
| 6 | 17 | 02 | 03 |
| 7 | 19 | 03 | 06 |
| 8 | 18 | 05 | 02 |
| 9 | 16 | 03 | 04 |

மாணவர் வரவு குறைவாகவே காணப்பட்டது. இது விடயமாக இவ் வகுப்பு மாணவர்களின் பெற்றோர் பற்றி அறியமுற்பட்டபோது பெருமளவு பெற்றோர் வெளிநாடு சென்றிருப்பது தெரிய வந்தது. 33 பேர் மத்திய கிழக்கு அல்லது பிற மாவட்டங்களுக்கு தொழிலுக்கு சென்றோராகக் காணப்பட்டனர்.

தொடர்ச்சியாக மாணவர் வராமையால் அவர்கள் அடைவு மட்டத்தில் பின் தங்கி இருப்பது கண்டறியப்பட்டதுடன் ஆர்வம் அற்றவர்களாக 'வீட்டுச்சுகம்' கண்டவர்களாகவும் காணப்பட்டனர்.

அவர்களது உடைகள், சுகாதாரம் மோசமாக காணப் பட்டதுடன் 'இடர்படல்' காரணமாக பயந்தவர்களாகவும் பின் வரிசையை விரும்புபவர்களாகவும் திகழ்ந்தனர். பாடசாலையிலும் கல்வியானது சுமையை ஏற்றுவதாக ஆசிரியர்களால் ஆக்கப்படும் போதுகுழந்தை பாடசாலையை வெறுக்கின்றான்.

புத்தகப் பையை காலையில் எடுத்து மாட்டும் போதே அவனது சுமை ஆரம்பிக்கின்றது. சுதந்திரமாக மாணவர்கள் ஆரம்பக் கல்வியில் இருக்கின்றார்களா? மாணவர் மையக் கல்வி செயற்பாட்டுக் கல்வி மலையக பாடசாலைகளில் முறையாக அமுல்

படுத்தப்படுகின்றதா? உடல், உள ரீதியாக இம்மலையக மாணவர்கள் எவ்வாறு ரம்மியமான ஒரு சூழலில் கல்வி பெறுகின்றார்கள்? எம் கல்வித்துறையின் மீது வீசப்படும் இந்தக் கேள்விக் கணைகளுக்கு இதய சுத்தியோடு நாம் காய்தல் உவத்தலின்றி பதில் கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம். 99 சதவீதமானோர் தோட்டத் தொழிற்றுறையில் ஈடுபடும் சூழலில் கற்கும் மாணவர்களிடமும் பல வேறுபாடுகள் காணப்படவே செய்கின்றன.

ஒரு சமூகத்தின் கல்வி எழுச்சியும் கூட அச்சூழலில் அல்லது குறிப்பிட்ட பாடசாலையை போஷிக்கும் பெற்றார்களின் கல்வி அறிவு மட்டத்திலும் கூட தங்கி இருக்கின்றது எனலாம். பெற்றோர்களின் கல்வித் தரம் அதிகரிக்க அதிகரிக்க குறிப்பிட்ட குடும்ப அங்கத்தவர்களின் கல்வித் தரமும், சமூக இசைவாக்கமும் நகர்வும் கூட மேன்மை அடையும். பெற்றோர்களுக்கான கல்வி, பெற்றோர்களுக்கான கல்விசார் விழிப்புணர்வூட்டல், முதியோர் கல்வி, பெற்றோர் ஆசிரியர்/ அதிபர் சந்திப்பு, கலந்துரையாடல், மாணவர் கல்வி தொடர்பாக பாடசாலை சமூக கூட்ட செயற்பாடு போன்ற சிந்தனைகள் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவைகள் ஆகும்.

மலையகத்தில் ஏற்பட்டு வரும் வெளிநாடு செல்லும் 'படலம்' அல்லது பிற மாவட்டங்கள் செல்லும் போக்கு தடுத்து நிறுத்தப்பட இயலாத ஒன்றாகவே காணப்படுகின்றது. எனினும் பாடசாலை ஒரு சமூக நிறுவனம் என்ற வகையிலும் மாணவர்கள், குழந்தைகள் பாடசாலைச் சூழலில் வளர்பவர்கள் என்ற வகையிலும் பெற்றோர்கள் குழந்தைகள் பால் அக்கறை செலுத்த வேண்டிய கடப்பாடு உள்ளது. மலையக பாடசாலைகளில் இது போன்ற சமூகப் பிரச்சினைகளை இனங்காண வேண்டியதும் அதற்கான பரிகாரங்களைத் தேட வேண்டியதும் காலத்தின் தேவையாக உள்ளது. மீண்டும் மீண்டும் ஏற்பட்டு வரும் சமூக பொருளாதார பிரச்சினைகள் இம்மக்கள் கூட்டத்தை இந்த மலையக மண்ணிலிருந்து பெயர்த்து எடுத்திடவே ஏதுவாகி வருகின்றது.

விக்டோரியா திட்டம், கொத்மலைத்திட்டம், மேல் கொத்மலைத் திட்டம் இப்படி எத்தனை திட்டங்கள் மலையகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டாலும் 'நீரையும்', 'மின்னையும்' இந்த மண்ணிலிருந்து சுரண்டிச் செல்வதாக உள்ளதே தவிர இந்த வளங்கள் இந்த மண்ணில் மக்களுக்கு உரமாகவில்லை என்பதே யதார்த்தமாகும்.

இளைஞர், யுவதிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் தத்தமது பிரதேசத்திலேயே வேலை வாய்ப்புக்கள் கிடைக்குமேயானால் பிள்ளைகளை விட்டு பெற்றோர் வெளியேறும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுவதைக்குறைக்க முடியும்.

இந்தச் சவாலை எதிர்கொள்ள நாம் தயாராவதன் மூலம் மலையகக் கல்விக்கு விழிப்புணர்வு ஊட்ட இயலும். ஆசிரியர்கள் வெறுமனே தத்தமது பயிற்சியின் மூலம் மாத்திரம் இப்புதிய பிரச்சி னையை அணுகுதல் இயலாது. சாதாரண பயிற்சி பெற்ற ஆசிரியர் களால் கூட மிகச் சாதாரணமான பிள்ளைகளின் பிணக்குகளை, முரண்பாடுகளை அணுக முடியாதுள்ளமை கண்டறியப்பட்டுள்ள இவ் வேளையில் பிள்ளைகள் எதிர்கொள்ளும் உடல், உள ரீதியான 'காப்பு' தொடர்பான பிரச்சினைகள் விசேடமாக அணுகப்பட வேண்டியவை ஆகும்.

தாய், தந்தையை பிரிதல் காரணமாக ஏற்படக்கூடிய தனிமை உணர்வு, ஏக்கம், தேவை பூரணத்துவம் பெறாமை தொடர்பான விடயங்கள் உளவளத் துணை செயற்பாடுகள் மூலம் கவனிக்க வேண்டியவை ஆகும். நெருக்கீடுகளால் ஏற்படும் பிரச்சினைகள் யாவும் இவ்வாறு செய்யப்பட வேண்டியவை ஆகும்.

மலையக பாடசாலைகளில் உளவளத்துணை செயற்பாடு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இது தொடர்பான விழிப்புணர்வு இன்னும் ஏற்படாத நிலையில் அதற்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. GTZ (ஜி.டி.இஸட்) போன்ற நிறுவனங்கள் மலையகப் பாடசாலைகளில் இது விடயம் தொடர்பாக கவனம் எடுத்து ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தல் நலம்.

## மலையக பாடசாலைகளும் கடந்த காலங்களில் அரசின் செயற்பாடுகளும்

மலையக கல்வி வரலாறு பற்றி பார்க்கும் பொழுது சில விடயங்களை மீண்டும் நினைவு கூர்வதன் மூலம் எம்மை நாமே விழிப்புணர்வூட்டிக் கொள்ள இயலும். குறிப்பாக எமது மலையகக் கல்வி வரலாற்றில் சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள், சட்டங்கள் தேசிய சிறுபான்மையினரான எம்மையும் பாதித்துள்ளது எனலாம்.

1962 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பாடசாலைகளை தேசிய மயமாக்கும் சட்டத்தால் நகர்ப்புறங்களில் பல பாடசாலைகள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கான பாடசாலைகளாக உருமாற்றம் பெற்றன. தமிழ், சிங்கள, முஸ்லீம் மாணவர்கள் ஒன்றாகக் கற்ற காலம் மாறி, இன, மத, மொழி ரீதியான பாடசாலைகள் தோற்றம் பெற்றன. சிறந்த நல்ல வளங்களைக் கொண்ட கல்லூரிகள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கான பாடசாலைகளாகின. சில இடங்களில் தமிழ்ப்பிரவு, தமிழ் பாடசாலைகள் இல்லாமல் போயின. ஊவா மாகாணத்தில் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

பண்டாரவளை சென். ஜோசப் கல்லூரியில் ஆரம்பத்தில் தமிழ்ப் பிரிவு காணப்பட்டாலும், காலப்போக்கில் அப்பாடசாலை தனிச் சிங்களப் பாடசாலையாகவே வளர்ச்சி பெற்றது. க.பொ.த உ/தரம் விஞ்ஞான/கணித பிரிவு தமிழில் இப்பாடசாலையில் காணப்பட்டாலும் அது தொடர்ந்து கொண்டு செல்லப்படவில்லை. இங்குள்ள தமிழ் மாணவர்கள் பண்டாரவளை சென் மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றப்பட்டனர். சிறு மலர் கன்னியர் மடத்திலிருந்து தமிழ் மாணவிகள் சென்.மேரீஸ் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றப்பட்டனர். சிறு மலர் கன்னியர் மடம் பின்னர் தனிச்சிங்கள பெண்கள் பாடசாலையாக மாற்றம் அடைந்தது. அமரர். எம்.பெருமாள் அவர்கள் அதிபராக பொறுப்பேற்றதுடன் 1968 இல் சென் மேரீஸ் மகா வித்தியாலயமாக தரம் உயர்ந்தது. மேலும் பண்டாரவளை சென்.மேரீஸ் தமிழ் மகா வித்தியாலயம் 1974 இல் பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயமாக பெயர் மாற்றம் பெற்றது. பதுளையிலும் ஊவாக் கல்லூரி ஆரம்பத்தில் பலமொழி இனம், சமயம் கொண்ட மாணவர்களை உள்ளடக்கியதாகவே இருந்தது. சென்.பீட்ஸ், தர்மதூதா உயர்தரப் பாடசாலையாவும் அவ்வாறே காணப்பட்டன.

ஆனால் 62 இற்குப் பின்னர் நிருவாகத்தின் செயற் பாடுகளினாலும் அவர்கள் தம் நோக்கங்களினாலும் படிப்படியாக தமிழ்ப் பிரிவு இல்லாமல் போனது, குறிப்பாக ஊவாக் கல்லூரியில் இயங்கிய தமிழ் பிரிவு மாலை நேரத்திற்கு மாற்றப்பட்டு பின்னர் வகுப்புக்கள் படிப்படியாக குறைவாக்கப்பட்டு இறுதியில் எஞ்சிய தமிழ் மாணவர்கள் சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றப்பட்டனர்.

பதுளை உயர்தரப் பாடசாலை (High School) சென்ட் பீட்ஸ் (ST BEDS) தர்மதூதா (Dharmatuta MV) தனி பௌத்த பாடசாலை களாக வளர்ச்சி பெற்றன. இறுதியில் பதுளை தமிழ் மகளிர் கல்லூரி , சரஸ்வதி த.ம.வி, சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம் என்பனவே தமிழ் பிள்ளைகளுக்காக எஞ்சின. இதே வேளை தனியார் கல்லூரிகளாக இயங்கிய பதுளை சித்தார்த்தா கல்லூரி, உடுவரை மகிந்தா கல்லூரி என்பன இருமொழி மாணவர்களும் கற்பதற்கான சூழலிலேயே பல காலம் இயங்கின எனலாம். பதுளையில் இரண்டு சரஸ்வதிகளுமே வளர்ச்சி பெற்றன.

அமரர் அமைச்சர். பி.எச்.பண்டார, அமைச்சர். சௌமிய மூர்த்தி தொண்டமான், மொடர்ன் இரட்ணசாமி போன்றவர்கள் இவ்விரு பாடசாலைகளின் வளர்ச்சியில் மிக ஆரம்பகாலத்தில் தத்தமது பங்களிப்பை செய்துள்ளமையை குறிப்பிடல் வேண்டும். இதன் விளைவே சரஸ்வதி தேசியக் கல்லூரியாக மலர்ந்தது. இன்னும் பலர் இப்பாடசாலைகளின் வளர்ச்சியில் பங்கு கொண்டுள்ளார்கள் எனினும் விரிவு கருதிக் கூறப்படவில்லை. பதுளை தமிழ் பெண்கள் கல்லூரி பெருமளவில் ஓர் இந்து பெண்கள் பாடசாலையாக வளர்ந்துள்ளது. முஸ்லிம் பெண்களுக்கென, அல் அதான் மகா வித்தியாலயமும் - மற்றொரு பக்கம் வளர்ந்துள்ளது.

பதுளை 2 ஆம் மைல் கல்லில் உள்ள பதுளை பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தினை அங்கேயுள்ள உடவெல சிங்கள மகா வித்தியாலயத்துடன் இணைப்பதற்கு 1980 களில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரால் கடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அதிபராக இருந்த ச.நாகரத்தினம் செயலாளர் சி.மகாலிங்கம் பா.அ.சபையினர், நலன் விரும்பிகள் ஆகியோரால் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு இறுதியில் அதே இடத்தில் கல்லூரி இயங்க அனுமதிக்கப்பட்டது. இது தற்போது பிறிதொரு இடத்தில் அபிவிருத்தி அடைந்துள்ளது.

இலங்கையின் தேசிய மயக் கொள்கையினால் சிறுபான்மையினர் பாதிக்கப்பட்டுள்ளனர். (கொப்பேகடுவையின் காணி சீர்த்திருத்தம் உட்பட) இங்கும் பாடசாலை தேசிய மய மாக்கலின் மற்றொரு பக்கம் உள்ளது. அதாவது கிறிஸ்தவ மிஷனரி பாடசாலைகள் தேசப்பற்றாளர்கள் என்பவர்களால் கபளீகரம் செய்யப்பட்டதாகும். என்றாலும் ஒரு சில பாடசாலைகள் மாத்திரமே அதே கிறிஸ்தவ பின்னணியிலும், கலாசார மத நோக்குடனும் இன்னும் செயற்படுகின்றன எனலாம். ஒரே பாடசாலையில் சகல இன, மத, மொழியினரும் கற்பது நல்லதென கற்பிதம் செய்யப் பட்டாலும் தனித்தியங்குவதினால் மேலும் பல சுதந்திர செயற் பாடுகளும் தனித்துவ அடையாளங்களும் பேணப்படுகின்றன என்பது மற்றொரு உண்மையாகும்.

டி.எஸ்.சேனாநாயக்கா கல்லூரி ஸ்தாபகர் கல்விமான் 'அலஸ்' அவர்களின் எண்ணக்கருவும் வேற்றுமையில் ஒற்றுமை காணும் நோக்கே இரண்டு நிலைகளையும் எவ்வாறு சமன் செய்வது என்பது கல்வியியலாளர்களின் சிந்தனைக்குள் இடப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் அரச சட்டங்களால் தேசிய சிறுபான்மை இனத்தவர் காலத்துக்குக் காலம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியே வந்துள்ளனர் என்பதே யதார்த்தமாகும்.

பாடசாலைக் கட்டமைப்பிலும், அதிகாரப் பிரச்சினையிலும் பல பிரதேசங்களில் தமிழர்தம் பாடசாலைகள் இவ்வாறே கெடுபிடிக்குள்ளாகியே வந்துள்ளன. தலவாக்கலை பிரதேசத்தினை எடுத்துக் கொண்டால் இங்கு சுமன சிங்கள மகா வித்தியாலயத்தில் இயங்கி வந்த தமிழ்ப் பிரிவு காலப்போக்கில் தலவாக்கலை மிடில்டன் தேயிலை தொழிற்சாலைக்கு சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் ஏற்பாடுகளுக்கு அமைய இடமாற்றம் செய்யப்பட்டது. இங்கு பாடசாலை மிக நீண்ட காலமாக இயங்கி வந்தது.

பல சிரமங்களை ஆசிரியர்களும், மாணவர்களும், எதிர்நோக்கினர் என்பது உண்மையாகும். என்றாலும் பாடசாலை IAB பாடசாலையாகுமளவுக்கு வளர்ந்தது சிறப்பாகும். அதிர்ஷ்ட வசமாக மேல் கொத்மலை திட்டத்தினால் பாதிக்கப்படும் பாடசாலை என்ற அடிப்படையில் தற்போது அது புதிய கட்டிடங்கள் பெற்றுள்ளது. இது மேல் கொத்மலை திட்டத்தின் பிரதிபலனே எனில் மறுப்பதற்கில்லை. கட்டிடங்கள் தொடர்பாக சில விமர்சனங்கள் இருந்தாலும் நீண்ட காலம் பழைய ஸ்டோரில் (Tea Factory) இயங்கிய வேளையில் 'பிரதேச அரசியல்வாதிகளின்' கண்களுக்குப் படாமல் தப்பியது ஒன்றும் விந்தையல்ல.

நாகசேனை / லிந்துலை சிங்கள மகா வித்தியாலயத்துடன் இயங்கி வந்த தமிழ் பிரிவு துலாங்கந்த தமிழ் வித்தியாலயத்துடன் இணைந்து சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயமாக வளர்ச்சி கண்டுள்ளது. Sidய செயற்றிட்டத்தின் விளைவாகப் பல பௌதீக வளங்களை லிந்துலை சரஸ்வதி மகா வித்தியாலயம் பெற்றுக் கொணடுள்ளது. அக்கரப்பத்தனை தமிழ் மகா வித்தியாலயமும், சிங்கள மகா வித்தியாலயத்தின் கீழேயே இயங்கி 1984 ஆண்டளவில் காணி பெறப்பட்டு தனித்தமிழ் மகா வித்தியாலயமாக மாறியது. இதற்கும் அமரர். தொண்டமான் அவர்களின் பங்களிப்பு காரணமாக இருந்தது. ஹோல்புறூக் தமிழ் மகா வித்தியாலயமும் 19/5/1967 இல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்று ஆரம்பிக்கப்பட்டு ஆரம்பத்தில் சிங்கள பாடசாலையின் பகுதி நேரப் பாடசாலையாக இயங்கி 24/6/1970 இல் விஸ்வலிங்கம் அதிபரின் தலைமையில் விக்னேஸ்வரா கல்லூரியாகத் தனித்தியங்கத் தொடங்கியது. முத்துசாமி, கந்தையா பிள்ளை போன்றோரும் பெற்றோரும் மிக ஆரம்ப கால கட்டிட வளர்ச்சிக்கு காலாக இருந்துள்ளனர். 1977 ஆம் ஆண்டு அரசு பொறுப்பேற்ற பின்னர் இப்பாடசாலை ஹோல்புறூக் த.ம.வியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது.

எனவே பொதுவாக நோக்கும் பொழுது காலத்துக்கு காலம் கல்வி தொடர்பாக கொண்டு வரப்படும் மாற்றங்கள், சீர்திருத்தங்கள், சட்டங்கள் மலையகக் கல்விக்கு எந்தளவு சாதகமாகி உள்ளன....? அல்லது பாதகமாகி உள்ளன என்பதனை கல்வியியலாளர்கள், அரசியலாளர்கள் விழிப்புடன் ஆராய்தல் அவசியமானதாகும்.

தேசிய நோக்குடன் கொணரப்படும் சில சீர்திருத்தங்கள் எமது மலையகப் பிரதேச கல்வி வளர்ச்சிக்கு எந்த வகையில் அனுகூலமாக திகழும் என்பது பற்றிய சிந்தனை தூர நோக்குடன் எதிர்நோக்கப்படல் வேண்டும். இவ்வாறான சில செயற்பாடு களாவது கடந்த காலங்களில் இருந்துள்ளமை யினாலேயே பல பாடசாலைகள் தப்பிப் பிழைத்து வளர்ந்துள்ளன என்ற வரலாற்றை மறுத்தல் ஆகாது.

## மலையக சமூகமும் புதிய சவால்களும்

இன்று மலையகம் பல புதிய சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. காலங்காலமாக மலையக மக்கள் பல இன்னல்களை எதிர்நோக்கி வந்துள்ளனர். என்றாலும் இங்கு கூறப்படுபவை மலையக மக்களின் வாழ்வியலில் தாக்கங்களை ஏற்படுத்தும் விடயங்களாகும்.

அவற்றுள் ஒன்று, குடும்பங்களில் மூத்தோர் அல்லது தாய், தந்தையர் தொழில் நிமித்தம் வெளியூர்களுக்குச் செல்கின்றமை ஆகும். சராசரியாக ஒவ்வொரு தோட்டத்திலும் பத்து அல்லது பதினைந்து பேராவாது இவ்வாறு வெளிநாடு சென்றுள்ளனர். அவர்களில் பெண்கள், தாய்மார் மத்திய கிழக்கிற்கும் ஆண்கள் குறிப்பாக கொழும்பிற்கும் சென்று விடுகின்றனர்.

அண்மையில் ஒரு பாடசாலையில் தரம் 9, தரம் 10, தரம் 11 வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் பெற்றோர் தொடர்பாக ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வு இதனை உறுதிப் படுத்துகின்றது.

| வகுப்பு | மொ. மாணவர் தொகை | வெளிநாடு/ வெளிமாவட்டம் சென்ற பெற்றோர் தொகை |
|---|---|---|
| 9 m - | 40- | 12 |
| 9 M - | 41- | 13 |
| 10 m - | 38- | 24 |
| 10 M - | 37- | 08 |
| 11 m - | 39- | 08 |
| 11 M - | 37- | 09 |

மேற்குறிப்பிட்டோரில் பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாக சென்றோரே மிக அதிகமாகும்.

ஆண்கள் சாரதிகளாகவும், தொழிற்சாலைகளில் கடமை புரிவோராகவும், வெறும் தொழிலாளர்களாகவும் வெளிநாடு சென்றுள்ளதைக் காண முடிந்தது. உள்நாட்டிலேயே கொழும்பு போன்ற நகர்களுக்கு ஆண்கள் கடைகளில் ஊழியர்களாகவும், காவல் வேலை, பாஸ் வேலை (கொத்தனார்) செய்வோராகவும் சென்றுள்ளனர்.

இதில் விசேடமாக கொழும்பு மாவட்டத்துக்கு ஆடைத் தொழிற்சாலைக்குச் செல்லும் பெண்கள் இளம் பெண்களாகவும் ஒரு சில ஆண்களும் இளம் ஆண்களாகவுமே உள்ளனர். இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் பொழுது மலையகப் பகுதிகளில் வீடுகளில் பிள்ளைகளை பராமரித்து கண்காணித்து வளர்க்கும் நிலை குறைந்து வருவது அவதானிக்கப்படுகிறது. இதன் காரணமாக வளர்ந்து வரும் இளம் சந்ததியினர் வேறொருவர் பராமரிப்பில் வளர வேண்டிய தேவை ஏற்பட்டு வருகிறது. அவ்வாறு பராமரிப்போர் மாமாவாகவோ தாத்தா, பாட்டிமார்களாகவோ அண்ணன், அண்ணிமார், அக்காமார்களாகவோ இருந்து வருகின்றனர்.

பாடசாலைகளில் ஊதாரித்தனமாக அல்லது மிக அதிகமாக செலவு செய்யும் ஒரு கூட்டத்தினரில் இந்தப் பெற்றார்களின் பிள்ளைகள் உள்ளதைக் காணலாம். விசேடமாக வெளி நாட்டிலிருந்து தாய் அனுப்பும் பணத்தை சில வேளைகளில் பிள்ளை களே கையாள்வதைக் காணலாம். அல்லது அந்தப் பணத்தை அனுபவிப்பதைக் காணலாம்.

கால மாற்றம், புதிய தொழில்நுட்பம், நவீன தொழில் முறைகள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் (குறிப்பாக மத்திய கிழக்கு அலை) போன்றன வடக்கு, கிழக்கு மற்றும் சிங்கள, முஸ்லீம் மக்களை பாதித்துள்ளது. அப்போக்கு தற்போது மலையக மக்களின் சாதாரண வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இவ்விடயம் தொடர்பாக ஆய்வு செய்த போது மற்றொரு விடயமும் புலப்பட்டது. தாய் இல்லாவிடில் ஏற்படும் இடைவெளி, தாக்கம், இழப்பு, தந்தை இல்லாவிடில் ஏற்படும் இடைவெளி, தாக்கம், இழப்பு.

சுமார் இருபது வருடங்களுக்கு மேல் வெளிநாட்டில் கடமை புரியும் ஒருவரின் குடும்பம் பல தகவல்களை தந்தது. குறித்த அவர் இடையிடையே இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையாவது வந்து செல்பவராக காணப்படுகிறார். அங்கு தாய்தான் தந்தைக்குரிய கடமைகளையும் புரிந்து வருகிறார்.

தந்தையின் அரவணைப்பு, அன்பு, காப்பு இன்மையால் அக்குழந்தைகள் பாதிக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். அவர்கள் தந்தையிடமிருந்து அதிகம் சலுகை பெறுவோராகவும், செல்லம் உள்ளோராகவும் காணப்படும் அதே வேளை தம்மோடு இருந்து தம்மை பராமரிக்கும் தாயை வெறுப்பவர்களாக உள்ளனர்.

இடையிடையே வந்து செல்லும் தந்தை பிள்ளைகளுக்கு அதிக இடம் கொடுப்பதை பார்க்கக் கூடியதாக உள்ளமையால் பெண் பிள்ளைகள் தாயின் கண்டிப்பையோ கணிப்பையோ பெரிதாக மதியாது உள்ளனர்.

இவ்வகையான குடும்பங்களில் மற்றொரு பயங்கரம் 'டீன் ஏஜ்' பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களாகும். ஆண் பிள்ளைகள் மது போதை, புகைத்தல் போன்றவற்றிற்கு அடிமையாகின்றனர்.

தாய் இல்லாத குடும்ப சூழலில் வளரும் இளம் பிள்ளைகள் வீட்டுச் சூழலிலேயே பாலியல் துன்புறுத்தலுக்கும் துஷ் பிரயோகத் திற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். மேலும் சிறுவர் துஷ்பிரயோகங் களும் இச்சூழல் வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

இப்புதிய சூழலுக்கு முகங்கொடுக்க பிள்ளைகளுக்கு வழிகாட்டலும் ஆலோசனையும் தேவைப்படுகின்றது. பாடசாலை களில் இது விடயம் கவனிக்கப்பட வேண்டி உள்ளது. பாரம்பரியமான குடும்ப உறவு, குடும்ப அலகு சிதைவடைந்து வருகின்ற இக்காலக் கட்டத்தில் பாடாசலைகளில் கடமையும் பொறுப்பும் அதிகரித்து வருகின்றன.

பாடசாலைகள் எமது மலையக சூழலில் பல புதிய விடயங்கள் பற்றி சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது. வழி காட்டலுக்கான ஆசிரியர்கள் சில பாடசாலைகளில் பயிற்றப் பட்டுள்ளனர். பரவலாக எமது பாடசாலைகளில் அத்துறை சார்பான ஆசிரியர்கள் குறைவாகவே உள்ளனர். பாடசாலைகள் தவிர உளவளத்துணைச் சேவைகளை தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பனவற்றிலும் பெற்றுக் கொள்ளலாம். போர்ச் சூழலும் சுனாமிக்குப் பின்னரும் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட இச்சேவைகள் மலை யகத்திற்கு போதிய அளவில் கிடைக்கவில்லை என்றே கூறலாம்.

மலையகம் எதிர்நோக்கும் புதிய சவால்களைக் கண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது மலையக அறிவு ஜீவிகளினதும், மலையக மண்ணை நேசிப்போரினதும் கடமை யாகும்.

# மலையகமும் பல்கலைக்கழக பிரவேசமும்

பொதுவாக ஒரு சமூகத்தின் கல்வி அபிவிருத்தியை வளர்ச்சியை குறித்த அச்சமூகத்தின் படித்த உயர் குழாத்தின் தொகையைக் கொண்டு மதிப்பிடுவது ஒரு வழக்காக இருந்து வருகின்றது. இந்த 'அளவுகோல்' சரியா அல்லது பிழையா என்ற ஒரு நிலையும் இல்லாமல் இல்லை.

வெறும் பட்டதாரிகள் சமூக வளர்ச்சியின் 'அக்னி குஞ்சாகி' விடுவார்களா என்பது சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மலையகத்தில் 2012 இல் 500 பேரை பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதற்கான ஒரு வேலைத்திட்டம் பற்றி சிந்திக்கும் இவ்வேளையில் இச்சிந்தனை நம்பிக்கை வறட்சியின் வெளிப்பாடு என எவரும் எண்ண வேண்டியதில்லை.

எப்படியான பட்டதாரிகள் உருவாக்கப்படல் வேண்டும் என்பது பற்றி சிந்திப்பதும் சரியானதாகும். வருடந்தோறும் 1200 மலையக மாணவர்களுக்கு பல்கலைக்கழக பிரவேசம் இருந்தாலும் கூட ஒரு வீதத்திற்கும் குறைவானவர்களே பல்கலைக்கழகம் செல்கின்றனர். என்பது உண்மையாகும். எனவே பல்கலைக்கழக பிரவேசத்தைக் கூட்ட ஒரு வேலைத்திட்டம் தேவைப்படுகின்றது. க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி அடையும் மாணவர் தொகையை 'அதிகரித்தல் வேண்டும் என்ற கருத்து பொதுவாகவே உள்ளது.

இதே நேரம் ஆரம்பக் கல்வி (தரம் 1-5) இடைநிலை (தரம் 6-9) பற்றி சிந்தியாதது குறைபாடாகும். தரம் 4 இல் தரம் 5 புலமைப்பரிசிலுக்காக பொதுவாக ஆசிரியர்களும், பெற்றோர்களும் எடுக்கும் சிரத்தையை தரம் 1, தரம் 2, தரம் 3 வகுப்புக்களிலும் எடுத்திருப்பின் தரம் 5 இல் உடைவு மட்டம் உயர வாய்ப்பு உள்ளது. அதாவது மாணவர்களின் அடைவு மட்டம் குறித்த ஓரிடத்திலிருந்து 'திடீரென' உயரலாம் என எதிர்பார்ப்பது தவறானதாகும்.

கல்வியியலாளர்களின் சிந்தனையின்படி கல்வியைப் பொறுத்தவரையில் ஒரு Process உள்ளதை எவரும் மறுத்தல் இயலாது. மாணவர்களுக்கு அவர்களது வயது, மூளை வளர்ச்சி, உடல் வளர்ச்சி இவைகளுக்கு ஏற்பவே கல்வி புகட்டப்படல் வேண்டும் என்பதை பொதுவாக பெற்றோர்கள் ஏற்பதில்லை.

எனவே இங்கு படிப்படியாகவும் தொடர்ச்சியாகவும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் அவதானிக்கப்படல் வேண்டும் என்பதை உணரல் வேண்டும். பல்கலைக்கழக பிரவேசம் பற்றி ஆரம்பக்கல்வியில் என்ன சிந்திக்க உள்ளது? என வினவலாம். அடித்தளமே ஆரம்பக் கல்விதானே (தரம் 1-5) இதன் சரியான அடித்தளமே அடுத்ததாகும். இடைநிலை (தரம் 6-9) கணித, விஞ்ஞான, இலக்கண, ஆக்க, படைப்பு அறிவு மாணவனை நெறிப்படுத்த உதவும் பல்கலைக்கழக விஞ்ஞான, கணித துறைக்கான ஒரு முன்னோடியான ஒளிவீச்சு, இடைநிலையிலேயே ஆரம்பிக்கின்றது.

சரியான முறையில் அடித்தளம் ஆரம்பம், இடைநிலைகளில் இடப்படல் வேண்டும். இங்கு முறையான கல்வி செயற்பாடுகள் பெருமளவில் பாடசாலைகளில் நடைபெறுவதில்லை என்பது எமது ஆய்வின் முடியாவகும். காரணம் இடைநிலையில் 'அரச பரீட்சை' என்றொரு எதிர்பார்ப்பு, ஆர்வம், தூண்டல் எதுவும் கிடையாது. பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் இடைநிலை வகுப்புக்களை பெரிதாக கண்டுகொள்வதில்லை. பெற்றோரும் இதனை பெரிதாக எடுப்பதுமில்லை. ஒரு சிலர் மாத்திரம் ஆரம்பப்பிரிவு போல் இக் காலத்தையும் கணித்து செயற்படுவர்.

எனவே அதன் அடுத்த அறுவடைதான் தரம் 10, தரம் 11, அதன் பின்னர் தரம் 12, தரம் 13. இங்கு பெற்றோர், அதிபர், ஆசிரியர், மாணவர் துடிப்பாக செயற்படுவர். மேலதிக வகுப்புக்கள் தரம் 10, தரம் 11 களில் 'காரசாரமாக' இருக்கும். இது க.பொ.த சாதாரணதர பெறுபேற்றைக் கூட்டுமா? அதனால் உயர் தரம் செல்லத் தகுதி பெறும் மாணவர் மாணவர் தொகை உயருமா என்பது சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இக்காலகட்டத்தில் மீள்திறன் உள்ள மாணவர்களும், ஓரளவு நடுத்தர நிலையிலுள்ளோரும் க.பொ.த சாதாரண தரத்தில் தோற்றுவதற்கான தகுதியைப் பெறுவர். அவர்கள் ஓரளவு நல்ல பெறுபேற்றையும் பெற்றுத் தரலாம். இதே வேளை இவர்கள் ஒரு சிறு தொகையினராகவே காணப்பட வாய்ப்புண்டு இதே வேளை சாதாரண மட்டத்திலும், மிகவும் பின்தங்கிய நிலையிலும் காணப் பட்ட மாணவர்கள் உயர் சித்தியைப் பெற மாட்டார்கள்.

இவர்களின் 'தொகை' அதிகமாகவே காணப்பட பாடசாலையின் சித்தி பெறுபேற்று வீதம் குறைவாகவே காணப்படும். எனவே க.பொ.த சாதாரண தரத்தில் பெறுபேற்று வீதத்தினை கூட்டவேண்டுமாயின் பின்தங்கிய நிலையிலிருந்தோரிலிருந்தே இதற்கான வேலைத் திட்டத்தை முன் எடுத்தல் வேண்டும். இவர்களின் அடைவு மட்டத்தை கூட்ட விசேட செயற்றிட்டம் ஒன்றினை அறிமுகம் செய்து செயற்படுத்துவதன் மூலம் சித்திபெறும் வீதத்தினைக் கூட்டலாம். இங்கும் க.பொ.த உயர் தரத்திற்கு தகுதி பெறும் மாணவர் தொகையை கூட்டுவதென்பது சிரமமானதே.

எனவே, ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, அதன் அடுத்த நிலை தரம் 10, தரம் 11 என்பன தேசிய ரீதியான பாடத்திட்டத்திற்கு புறம்பாக வேறு ஒரு பரிகார செயற்றிட்டம் மெல்ல கற்கும் மாணவர்களுக்கான செயற்றிட்டம் அவசியம் செய்யப்படல் வேண்டும். ஏனெனில் இத்தொகை பாடசாலைகளில் பெரிய தொகையாக உள்ளமை யதார்த்தமாகும். பல்கலைக்கழகத்திற்கு அதிகமானோரை அனுப்புவதென்பது பற்றி சிந்திக்கும் பொழுது மேற்குறித்த 'கூட்டம்' பற்றிய சிந்தித்தல் அவசியமாகும்.

பொதுவாகவே மிக பிரபல்யமான ஒரு சில பாடசாலைகளைத் தவிர ஏனைய பாடசாலைகளில் வகுப்பு ரீதியாக ஓர் ஆய்வினை மேற்கொண்டால் மீள்திறன் மாணவர் குறைவாகவும், மெல்லக் கற்கும் அல்லது பின்தங்கிய (குறித்த வகுப்பிற்குறிய அடைவு மட்டத்தை அடையாத) மாணவர்கள் பெருமளவிலும் காணப்படுவர். ஆசிரியர்கள் திறமையான மாணவர்களுக்கு கற்பிக்கவே விரும்புவர். இந்நிலை பிரபல்யமான (Popular Schools) பாடசாலைகளில் தெளிவாக விளங்கும்.

9ஏ, 10ஏ, 8ஏ என சிறப்பான பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை உள்வாங்கும் இப்பாடசாலைகளில் பாடசாலையை விட பாடசாலைக்கு வெளியே குறித்த அப்பாடசாலைகளின் பெறுபேறுகள் தீர்மானிக்கப்படுவதனைக் காணலாம். எனவே, பின்தங்கிய நிலையிலுள்ளோரைக் கொண்டு பெறுபேற்றினை அதிகரிக்க ஆவன செய்தலின் ஊடாக பல்கலைக்கழக பிரவேச 'இலக்கை' அடைய வழி பிறக்கலாம். ஒரு தொகையான மாணவர்களை பட்டதாரிகளாக்க வேண்டும் என்ற நோக்கம் பாராட்டத் தக்கதே. என்றாலும் இதனை அடையவேண்டுமெனில் மிகச் சாதாரண நிலையிலுள்ளதும், பின்தங்கிய பிரதேசங்களிலுள்ளதுமான பாடசாலைகள் கவன, ஈர்ப்பைப் பெறல் வேண்டும்.

ஊவா, சப்ரகமுவ, மத்திய மாகாண பாடசாலைகளில் 'சில மாவட்டங்களிலுள்ள' எமது பெருந்தோட்டப் பாடசாலைகள் இன்னுமே காலனித்துவத்தின் அடையாளமாக திகழ்வதைக் காணும்போது இன்னும் எத்தனை ஆண்டுகள் இம்மலையக கல்வி வளர்ச்சிக்கு காத்திருக்க வேண்டிவரும் என்று 'ஏக்கம்' கொள்ள வேண்டி உள்ளது.

எவ்வாறெனினும் பெருந்தோட்டக் கல்வி பற்றிய விழிப் புணர்வு ஒரு ஒளி வீச்சு ஏற்பட்டு வருவது மறுக்க முடியாதது ஆகும். இந்நிலையில் க.பொ.த உயர்தரத்தின் இரண்டு அல்லது மூன்று நோக்கங்கள் மலையக மாணவர்களிடம் அல்லது பெற்றோர்களிடம் இருப்பது ஒன்றும் வியப்பு அல்ல.

முதலாவது க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்று பல்கலைக் கழகம் செல்வது.

இரண்டாவது க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெறுவது.

மூன்றாவது க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்று ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி செல்வது.

மேற்குறிப்பிட்டவைகளுள் நாம் எதர்பார்ப்பது பல்கலைக் கழக பிரவேசமே எனில் மறுப்பதற்கில்லை. ஆனால் இதனை 'எப்பிரிவு மாணவனைக் கொண்டு நிச்சயிப்பது...?

சராசரி, இடைநிலை அடைவினை அடைந்தவனைக் கொண்டு இவ்வெதிர்பார்ப்பினை அடைதல் இயலாது என்பது வெள்ளிடைமலை. மிகத் திறமையானவனே பல்கலைக்கழக பிரவேசத்தைப் பெற முடியும். ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு சிரேஷ்டப் பிரிவுகளுக்கு முறையாக வேலைத் திட்டங்களை முன்னெடுத்தல் மூலம் பல்கலைக்கழக பிரவேசம் பற்றி சிந்தித்தல் இயலும்.

பல அதிபர்கள் இன்று இதனை செய்து வருகின்றனர். பல நிறுவனங்களும் கூட இதற்கு ஒத்துழைப்பு நல்கி வருகின்றன. தியாக மனப்பான்மையோடு பல ஆசிரியர்கள் கடமை ஆற்றி வருகின்றனர். என்றாலும் அவர்களுக்கு ஒத்துழைப்பும் உதவியும் தேவைப் படுகிறது. மத்திய, மாகாண அமைச்சுகள் இவ்விடயத்தினை கவனத்தில் எடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

## மலையகத்துக்கென தனியான பல்கலைக் கழகம் சாதகமாகச் சிந்திப்போரே இன்று நமக்குத் தேவை

மலையகத்துக்கென தனியான பல்கலைக்கழகம் தேவை என்பதில் நியாயங்களை வீரகேசரியின் குறிஞ்சிப்பரல்களில் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள் கூறி வருகின்றார்கள். இது தொடர்பாக மலையக கல்வியியலாளர்கள், அரசியல்வாதிகள், புத்தி ஜீவிகள் தத்தமது கருத்துக்களை கூறி வருகின்றனர்.

எனவே இவ்விடயம் தொடர்பாக கொட்டகலையில் இயங்கி வரும் 'கொட்டகலை சமூக பட்டதாரிகள் அமையம்' என்ன கருதுகின்றது என்பதனை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

வந்தாறு மூலையில் கிழக்கிலங்கை பல்கலைக்கழகமும், ஒலுவிலில் அமரர் அஷ்ரப் அவர்களால் முஸ்லீம்களுக்காக ஒரு பல்கலைக்கழகமும் உருவாகி இருக்கின்ற சூழ்நிலையில் மலையகத்திற்கென ஒரு பல்கலைக்கழகம் தேவை என்பதில் பிழை இருப்பதாக தெரியவில்லை.

மேலும் 14 மரபுசார் பல்கலைகழகங்களும் ஒரு திறந்த பல்கலைக்கழகமும், இயங்கும் சூழ்நிலையில் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூகமாக இருந்து இன்று கல்வியிலும் வேறு பல வழிகளிலும் வளர்ச்சி அடைந்து வருகின்ற மலையக சமூகம் எதிர்கால ஒரு தூரநோக்காக பல்கலைக்கழகம் பற்றிச் சிந்திப்பது ஆரோக்கியமானதாகும்.

1830 ஆம் ஆண்டுகளிலிருந்து இந்நாட்டுக்காக உழைத்த ஒரு கூட்டத்தின் சந்ததியினர் இன்று பல்கலைக்கழகம் பற்றி எண்ண வேண்டி உள்ளமை குறிப்பிட்ட சமூகம் தாமும் தேசிய கல்வி நீரோட்டத்தில் பங்குதாரராக தம்மை இணைத்துக் கொள்ளவே அல்லாமல் வேறொரு நோக்கமும் இருத்தல் இயலாது.

1942 இல் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதாக அறியும் யாம் 2010 இல் எமக்காக சிந்திப்பதில் தவறு இருக்காது என்பதனாலேயே அமைச்சராக இருந்த டிலான் பெரேரா போன்றவர்கள் அன்று இதனை வரவேற்றுள்ளனர்.

பேராசிரியர் எம். சின்னதம்பி, தை. தனராஜ் (சிரேஷ்ட விரிவுரையாளர்) எம்.வாமதேவன் (நிதி அமைச்சின் திட்டமிடல் - முன்னாள் செயலாளர்) பேராசிரியர் எம்.எஸ். மூக்கையா, கலாநிதி ஏ. எஸ். சந்திரபோஷ் போன்றோர் மலையகத்துக்கென தனியான பல்கலைக்கழகம் தேவை என்பதனையே வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான், அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், அமரர் பெ.சந்திரசேகரன் போன்றோர் பல முன்னெடுப்புக்களை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டி உள்ளனர் என்பது ஓர் உண்மையாகும். ஒரு சமூகத்தின் எழுச்சிக்கும், விடிவுக்கும் சாதகமான சிந்தனையாளர்களின் (Positive Thinking) கருத்து வீச்சு அடிப்படையானதாகும். 'Think Tank' போன்ற அமைப்புக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டியவை ஆகும். சாதகமான சிந்தனை யாளர்களின் கருத்துக்களே ஒரு சமூக உயர்ச்சிக்கு வித்திட முடியும்.

மலையக பல்கலைக்கழகம் என்பது வெறுமனே 'ஒரு கட்டிடம் அல்ல' என்பதையும் அது ஒரு சமூகத்தின் குறியீடாக குறிப்பிட்ட பிரதேசத்தின் பிரதேச, பொருளாதார, கலை, பாரம்பரிய, பண்பாட்டு அம்சங்களை பேணவும், வளர்க்கவும் உதவும் 'களமாகும்' என்பதை எதிர்கணிய (Negative Thinking) சிந்தனையாளர்கள் உணரல் வேண்டும்.

எமது பெருந்தோட்டப் பொருளாதாரம் அல்லது பெருந் தோட்டத்துறை பற்றி வயம்ப பல்கலைக்கழகம் ஒரு பாடநெறியை அறிமுகப்படுத்தியதை அறிந்தோம். மலையக பல்கலைக்கழகம் இத்துறை சார்ந்த ஆய்வுகளையும் நவீன உற்பத்தி முறைகளையும் அறிமுகப்படுத்தவும் ஊக்குவிக்கவும் வழி உள்ளது.

இப் பல்கலைக்கழகம் மலையகத் தமிழ் மக்களின் வாழ் வியலை, பண்பாட்டு விழுமியங்களை உள்வாங்கிய, வளர்த் தெடுக்கின்ற ஒரு கலைக் கூடமாகத் திகழல் வேண்டும் என்றும் பலர் எண்ணுகின்றனர். பெருந்தோட்ட மக்களின் வரலாற்று நிகழ்வுகளையும், இவர்களது உழைப்பின் வியர்வையையும், இரத்தத்தையும் அடையாளமாக பதிவு செய்து ஆவணப்படுத்திட ஓர் உயர் கல்விக் கூடம் / பீடம் வழிவகுக்கும் என எதிர்பார்க்கின்றனர்.

எதிர்காலம் பற்றிய இவ்வாறான தீர்க்க தரிசனங்களும், தொலைநோக்குகளும் வரவேற்கத் தக்கவை. இவ்வாறான சிந்தனைத் தளிர்களே நாளைய விருட்சமாகிட முடியும். இந்த வகையில் மலையக தேசிய பல்கலைக்கழகத்துக்காக கடந்த சுமார் பத்து வருடங்களாக எழுதி, பேசி, செயற்பட்டு வரும் பேராசிரியர் சோ.சந்திரசேகரனின் தலைமையிலான குழுவினர் விதந்து பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக வயம்ப பல்கலைக்கழகத்தினால் பெருந்தோட்ட முகாமைத்துவ துறையில் பட்டபடிப்பு நடந்து முதன் முறையாக 16 பட்டதாரிகள் இளமானிப் பட்டம் (வெளிவாரி) வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. இவ்வாறான கற்கை நெறியை மலையக தேசிய பல்கலை கழகத்திலும் முன்னெடுக்க வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன.

மத்திய, ஊவா மாகாணங்களில் எமக்குள்ள குடிசனத் தொகையை நோக்குமிடத்து மத்திய மாகாணம் குறிப்பாக நுவரெலியா மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் இப் பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதற்கும் தொடர்ந்து செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுவதற்கும் வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. மேலும் இன்றைய அரசின் பல்கலைக்கழகம் தொடர்பான சிந்தனைகளும் கூட எம்மால் சாதகமாக்கிக் கொள்ளும் உபாயங்களைக் கண்டறிதல் வேண்டும்.

தேயிலைத் தோட்டத் துறையில் சிலர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்று உத்தியோகத்தர்களாகவும் தோட்டத் துறையை அண்டி எழுந்த சிறு நகரங்களில் சிறு வியாபாரிகளாகவும் பிரபல வியாபாரிகளாகவும் எம்மவர் தேயிலைத் தொழிலிலிருந்து பிறிதோர் துறைக்கு ஆரம்பத்தில் சென்றனர். தேயிலைத் துறையின் பக்க விளைவு இது. இதன் அடுத்தக் கட்டமாக ஆசிரியர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொலிஸார் என தொழிற்துறையை சாடி உள்ளனர். இதன் அடுத்த கட்ட நகர்வாக உயர்கல்வித்துறை உள்ளது.

கற்ற பட்டதாரிகளின் தோற்றம் என்பது ஒரு சமூக எழுச்சியின் ஒரு படிக்கல் ஆகும். எமது சூழலில் பல்கலைக்கழகம் அமையும் போதும் எமக்கென ஒரு பல்கலைக்கழகம் அமையும் போதும் இச் சமூகம் உயர் கல்வி பற்றிச் சிந்திக்க வாய்ப்பேற் படுகின்றது எனலாம்.

மலைய்க சமூகம் சார்ந்த மலையகத்துக்கான பல்கலைக் கழகம் எனும் கருத்து பரவலாக காய்தல் உவத்தலின்றி உரையாடப்பட வேண்டிய விடயமாகும். ஒரு சமூகத்தின் கல்வி வளர்ச்சியின் மற்றொரு அங்கம் பல்கலைக்கழகம் என உணரப்படல் வேண்டும். தீர்க்கதரிசனமிக்க ஒரு செயலகத்தின் ஆரம்பமே இவ்வெண்ணம் என்பதை உணரல் வேண்டும். ஒரு சமூக எழுச்சியின் அடைவை காட்டும் குறியீடு இது என அனைவரும் உணர்ந்து இதன் அடுத்த கட்ட நகர்வுக்கு அடித்தளமிடல் வேண்டும். இவ்விடயம் தொடர்பான எதிர்க்கணிய கருத்தாளர்கள் சமூக நோக்குடன் சிந்தித்தல் நலமாகும்.

மலையகத்துக்கென ஒரு தேசிய பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படும் வேளையில் எதிர்நோக்கக்கூடிய சவால்கள் பல உள்ளன. குறித்த பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படும் பாடநெறிகளுக்கு இயைபாகவே மாணவர்கள் உள்வாங்கப் படுவார்கள். இதனால் பல இன மாணவர்களும் கூட அனுமதி பெற வாய்ப்புண்டு. இதே வேளையில் எமது மாணவர்கள் தமது பாடநெறியின் தெரிவு காரணமாகவே ஏனைய பல்கலைக்கழக அனுமதியைப் பெற வாய்ப்புண்டு. மலையகத்துக்கென தனிப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் பொழுது பேராசிரியர் சோ.சந்திரசேகரன் குறிப்பிடுவது போல் பிற பல்கலைக்கழகத்தில் எமது மாணவர்களுக்கான அனுமதியில் பிரச்சினை ஏதும் ஏற்படாது என்பதுடன் எமது பல்கலைக்கழகத்துக்கான அனுமதியிலும்குறைபாடுகள் ஏற்படாது.

காலம் எமக்காக காத்திராது, காலத்தை நாம் தான் ஓடிப் பிடித்தாக வேண்டும் என்பதற்கு இணங்க மலையத் தேசியப் பல்கலைக்கழகத்திற்கான அடுத்த கட்ட நகர்வை சளைக்காது பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் முன்னெடுத்தல் வேண்டும். மலையகத்திற்கான தேசிய பல்கலைக்கழம் என்ற விடயத்தை முன்னெடுக்க ஒரு செயற்றிறன் மிக்கதும் சாதகமான சிந்தனையாளர்களைக் கொண்டதுமான அமைப்புக்குழுவை உடன் அமைத்து விடயத்தை அரசியலாளர்கள், சமூக ஆய்வாளர்கள் ஊடாக மேலெடுப்பது நலமாகும். இறுதியாக ஒன்று ‘ரோம் நகரம் ஒரே நாளில் கட்டப்படவில்லை’ என்பதை நினைவுறுத்திக் கொள்வது நல்லது.

## மலையக கல்வியில் விழிப்புணர்வு

யாழ் சமூகம் ஒரு காலத்தில் அளித்த முக்கியத்துவத்தை ஒத்த முக்கியத்துவம் எமக்குள்ளும் ஏற்படல் வேண்டும் என்பதே கல்வியாளர்களின் விருப்பமாகும்.

இந்த விழிப்புணர்வுக்கு வரலாறு உண்டு. மலையக கல்வி வரலாறு பற்றி அறிந்தோர் இதனை காலனித்துவத்தின் காலத்திலிருந்து தொடங்குவர். பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை தோற்றத்திலிருந்து இது ஆரம்பமாகிறது எனவும் தேயிலைக் கன்றுகளை தொழிலாளர்தம் பிள்ளைகள் நாசமாக்கி விடாமல் இருக்கும் பொருட்டு உருவாக்கப்பட்டதே 'அம்மாயி' களின் தலைமை யில் உருவாக்கப்பட்ட பிள்ளைக்காம்பராக்கள் இதன் தொடர்ச்சி யான வளர்ச்சியே இன்றை 'Creche' நிலையங்களாகும்.

தோட்ட நிருவாகங்களின் கீழ் நடத்தப்பட்ட பாடசாலைகள் மற்றொரு வகையில் தோட்டப் பாடசாலைகளாக பரிணமித்தன. பெருமளவில் யாழ், மட்டக்களப்பு போன்ற வெளிப்பிரதேச ஆசிரியர்களின் கற்பித்தலில் இப்பாடசாலைகள் இயங்கின. மேலும் தோட்ட அலுவலகத்தில் அரைநேரமும், தோட்டப்பாடசாலைகளில் அரை நேரமும் கடமை புரியும் ஆசிரியர்கள் பலரையும், பெருந் தோட்டப் பாடசாலை வரலாற்றில் காணக்கூடியதாக இருந்தது.

எழுத்து, வாசிப்பு இப்பாடசாலைகளில் இடம்பெற்றன. தோட்ட அதிகாரியின் மேற்பார்வையின் கீழ், பாடசாலைகள் இயங்கிய காலங்களில் தேவையான வளங்கள் நிருவாகத்தினா லேயே வழங்கப்பட்டன. இந்த நிருவாகம் பற்றியும் கற்பித்தல் பற்றியும் பல விமர்சனங்கள் உள்ளன. எனினும் இப்பாடசாலைகள் தேசிய பாடத்திட்டத்திற்கோ வழி காட்டலுக்கோ உட்பட்டிருக்க வில்லை என்பதே உண்மை. மேலும் இப்பாடசாலைகள் தரம் ஒன்றிலிருந்து தரம் ஐந்து வரை (1-5) நடத்தப்படக்கூடிய வகையிலேயே ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பெருந்தோட்ட குழந்தைகள் கையொப்பம் இட தெரிந்திருந்தால் போதும் என்பதும், தோட்டங்களில் ஒரு கூலிப்படை அல்லது தொழிற்படை தொடர்ந்து இருத்தல் வேண்டும் என்பதும் பிரித்தானிய காலணித்துவத்தின் உள் நோக்கமாக இருந்தது.

பெருந்தோட்டப் பாடசாலைகளில் கடமை புரிந்த ஆசிரியர்களுக்கு தோட்டத்து உத்தியோகத்தர்களுக்குரிய வரப்பிரசாதங்கள் கிடைக்கப்பெற்றன. தங்குவதற்கான ஆசிரியர் விடுதி, தேயிலை, இலவச மின்சாரம் போன்றன, இதற்கு விதிவிலக்கான நிலைமைகளும் சில தோட்டங்களில் இருந்தன.

இலவச கல்வியின் தந்தை எனக் கருதப்படுகின்ற சீ.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராவின் சிபாரிசுகளிலும் கூட எமது மலையக கல்வி பற்றி விதந்துரை செய்யப்படவில்லை என்பதை பேராசிரியர் சோ.சந்திரசேகரன் குறிப்பிடுவார்.

மலையகம், பெருந்தோட்டம் என்பது தொடர்ந்து ஒரு தனி அலகாகவே கணிக்கப்பட்டு வந்துள்ளது. என்பது வெளிப்படை அது பிரித்தானிய முதலாளித்துவ சமூகத்தின் தேவைக்கான ஒரு பொருளாதார கொள்கையையே பின்பற்றி வந்தது என்பதும் யதார்த்தமாகும், எவ்வாறெனினும் பெருந்தோட்ட தேசியமயக் கொள்கையின் விளைவாக சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் கூட அம்மாற்றங்கள் இவர்கள்தம் இருப்பையோ, வாழ்வியலில் பாரிய சமூக பொருளாதார திருப்பத்தையோ ஏற்படுத்தவில்லை. இந்நோக்கத்தில் இவர்கள் தம் கல்வி பற்றியும் அணுகலாம்.

1977 ஆம் ஆண்டிற்கு பின்னரான அரசியல் மாற்றங்கள் தாக்கங்கள் காரணமாக பல மாற்றங்கள் மலையக கல்வித் துறையில் ஏற்பட்டன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதேவேளை தனிநபர்களான அதிபர்கள், சில கல்வி அதிகாரிகள், பாடசாலைகள், மலையக சமூக நலன் விரும்பிகள், சில நிறுவனங்களும் கூட மலையகக் கல்வி வளர்ச்சியில் பங்களிப்பை செய்துள்ளனர் என்பது மேலும் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட வேண்டிய விடயமாகும்.

எது எவ்வாறெனினும் தொழிற்சங்க அரசியல் துறை சார்ந்தோர் என்ற வகையில் மலையக கல்வி பற்றி சிந்தித்த ஒருவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் எனின் மறுப்பதற்கில்லை. 1977 இல் தனி ஒரு மலையகத்தவராக நாடாளுமன்றம் சென்றதன் பின்னர் ஜனாதிபதி நிதியிலிருந்து மலையக கல்வி அபிவிருத்திக்காக விசேட நிதி ஒன்றினை பெற்று கல்வி வளர்ச்சிக்கான பாதையை வெட்டி வைத்தவர் அவர் ஆவார்.

ஒரு தொழிற்சங்கவாதி கல்வி பற்றி சிந்தித்தது கல்வியி யலாளர்கள் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வேளை அமரர். ஜோசப் பரராஜசிங்கம் ஒருமுறை கூறிய கருத்து ஞாபகத்திற்கு வருகின்றது. 'நீங்கள் கல்வி பற்றி நிறையவே நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துகிறீர்கள் ஏன் அது' என்ற போது 'எமது சமூகத்தின் விடுதலை என்று கிடைக்கும் இந்நாட்டில் விடிவு என்று பிறக்கும் என்பதெல்லாம் ஒரு நீண்டகால எதிர்பார்ப்பு எது எப்படி போனாலும், கல்வியை எமது சமூகம் பெற்றுக்கொண்டால் வாழ்வதற்கு வழியை தேடிக்கொள்வர். இதனாலேயே கல்வி பற்றி அழுத்தம் கொடுக்கின்றேன்.' என்றார்.

மலையக சமூகத்தின் நிலையும் இதேதான். இந்த அழகான மலைகளில் தெரியும் பச்சை எவ்வளவு காலத்திற்கு? இன்றே இதன் அழிவு தொடங்கி விட்டது. சப்ரகமுவ, ஊவா, மத்திய மலைநாட்டின் மாத்தளை, கண்டி மாவட்டங்களில் தேயிலைக்குள் ஊடுருவும் குடியேற்றங்கள் எதனைக் காட்டுகின்றன? தனியார் கம்பனிகளின் செயற்பாடுகள் இம்மக்களின் இருப்பு பற்றிய எந்த செய்தியைத் தருகிறது? மலையக பெருந்தோட்டத்துறை பற்றிய புதிய விழிப்புணர்வு செயற்பாடுகள் என்ன? தொழிற்சங்கங்கள் கையாலாகாத நிலையை அடைந்து விட்டனவா? இந்நிலையில் இங்கு வளரும் புதிய சந்ததியினர் ஒரு புதிய தொழிற்படையாக உருவெடுக்க வேண்டிய காலத்தின் தேவை மலையக புத்தி ஜீவிகளால் உணரப்பட்டும், உணர்த்தப்பட்டும் வருகின்றது.

இந்நோக்கில் கல்வி ஒரு வழிகாட்டியாக அமைய இயலும். 1977 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட, G.T.Z, Sida போன்ற நிறுவனங்களில் செயற்பாடு அரசியலில் அரசியலாளர்கள் நிதி ஒதுக்கீடு நிதிகளின் பயன்பாடு, PSEDP போன்ற ஆசிரிய நியமனம் 3179 ஆசிரியர் நியமனங்கள், உயர் கல்வி அமைச்சின் (Plantation School Unit) பெருந்தோட்டப் பாடசாலைகளின் பிரிவு எடுத்து வரும் நடவடிக்கைகள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் மலையக கல்விக்கு உரமூட்டி வருகின்றன. மேற்குறிப்பிட்டவைகளுள் பெருந்தோட்ட பாடசாலைகளுக்கான பிரிவு பல காத்திரமான வேலைகளை செய்து வருகின்றமை குறிப்பித்தக்கது. மலையக பாடசாலைகளின் அபிவிருத்திக்கு தேவையான தரவுகளையும், புள்ளி விபரங்களையும்

ஆலோசனைகளையும் தந்துதவுவதில் இப் பிரிவு பெரும் பங்கு ஆற்றி வருகின்றது. திருமதி. மகேஸ்வரி சபாநாயகம் இந்த வகையில் குறிப்பிடப்பட வேண்டியவர் ஆவார். SEMP எனப்படும் (Secondary Education Modernization Project) இரண்டாம் நிலைக்கல்வி அபிவிருத்தி தொடர்பான செயற்றிட்டம் தற்போது மலையக பாடசாலைகளுக்கும் வளங்களை வழங்கி வருகின்றது.

கணினி பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதன் சேவை மேலும் விரிவாக்கப்படல் வேண்டும். ICT எனப்படும் தகவல் தொழில்நுட்பம் க.பொ.த சா/தரத்திற்கு பாடமாக்கப் பட்டதனால் இதன் தேவை அதிகரித்துள்ளது. GIT எனப்படும் (General Information Technology) உயர்தரத்திற்கு அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.

சிங்கள மொழி மூலமான பல விடயங்கள் தமிழுக்கு வர காலதாமதமாகின்றது. இது பற்றி இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் போன்ற பல அமைப்புகள் குரல் எழுப்பிய வண்ணம் உள்ளன. என்பது உண்மையே. எனினும் நடைமுறையில் செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது. (NIE) எனப்படும் தேசிய கல்வி நிறுவனம் , உயர் கல்வி அமைச்சின் சில பிரிவுகள் நூலாக்க குழு என்பனவற்றில் என்ன நடைபெறுகின்றது. உயர் கல்வி பிரதி அமைச்சர்கள் தமிழ், முஸ்லீம் என இருவர் இருந்தாலும் அவர்களாலும் பல வேலைகளில் 'தடைகளை' உடைத்தெறிய இயலவில்லை. அவர்களின் முயற்சிகளுக்கு ஒத்தாசையை அதிகாரிகள் வழங்கினால் இப்பிரச்சினை தீர்க்கப்பட வழி உண்டு.

தேசிய மொழி தொடர்பாக டியூ.குணசேகர போன்றவர்களும் ராஜா கொள்ளுரே போன்றவர்களும் கூறி வருகின்ற, எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் மனங்கொள்ளப்பட வேண்டிய ஒன்றே. பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில் குறிப்பாக மலையக பாடசாலைகளின் அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன என்பதுகுறிப்பிடப்பட வேண்டிய ஒன்றே.

கல்வி அமைச்சிலும், கொள்கை வகுப்பிலும் எமது சமூக கல்வி பிரச்சினைகள், காத்திரமான வகையில் ஒலிக்கப்பட அதிகாரிகள் இன்மையும், தகுதி இன்மையும் பரவலாகவே உள்ளன.

எமது மலையக சமூகத்தைச் சார்ந்தோர் கடமை புரியும் சில அமைச்சுக்களினூடாகவே ஒரு சில வேலைகள் பல தடைகளுக்கு இடையிலே நடைபெற்றுள்ளமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியவை ஆகும். உதாரணத்திற்கு 3179 ஆசிரியர் நியமனத்தில் பலரது பங்களிப்பு இருந்தமைகுறிப்பிடத்தக்கது.

மலையக கல்வி வளர்ச்சி தொடர்பாக மத்திய அரசினதும், மாகாண அரசினதும் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் அவசியமாகும். வேற்றுமையில் ஒற்றுமை என்பதுபோல் மலையக கல்வி அபிவிருத்தி தொடர்பில் இது உணரப்பட்டு வருகின்றது. மத்திய மாகாணத்தை பொறுத்தவரையில் அமைச்சர் எஸ். அருள்சாமி அவர்கள் பலமுனைப்புக்களை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வருடந்தோறும் 500 மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்புதல், இந்தியாவின் காந்திக் கிராமத்தில் ஆசிரியர்கள் (விஞ்ஞானம், ஆங்கிலம்) பட்டப்படிப்பை மேற்கொள்ளல், கணனிகிமயக் கல்வியை பாடசாலைகளில் ஊக்குவித்தல், இந்திய உதவியுடன் கணினி நிலையங்களை மலையக பாடசாலைகளில் ஏற்படுத்தல், விஞ்ஞான பாடங்களை மலையக பாடசாலைகளில் ஏற்படுத்தலும் விஞ்ஞான உபகரணங்களை பாடசாலைகளுக்கு வழங்கலும், நூலக அபிவிருத்தி நூல்களை வழங்கலும் போன்ற பல திட்டங்களை 'முன்னோக்கிய பாய்ச்சல்' எனும் திட்டத்தின் கீழ் செய்து வருகின்றார் என்பதுகுறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

மத்திய மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் வி.இராதாகிருஷ்ணனதும், இடமாற்றலாகி சென்ற இந்திய உதவி தூதுவர் ராஜன் பிள்ளை அவர்களதும் ஆரம்பம் இங்கு மறுக்கப்படக்கூடாது. இதன் அடுத்த கட்டமாக இன்றைய புதிய இந்திய தூதுவரும் இன்றைய எமது கல்வி அமைச்சரும் அப்பிரச்சனையை தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே, மலையகக் கல்வியின் வரலாற்றுப் போக்கில் தற்பொழுது ஒரு முக்கியமான காலகட்டத்தில் நடைபயின்று கொண்டிருக்கின்றோம். எமது இந்த மலையக கல்வி வரலாற்றில் அதன் வளர்ச்சியில் பங்கு கொண்ட பலரது பல பக்கங்கள் இன்னும் வெளிச்சத்திற்கு வராதது கவலைக்குரியதே. தனிநபர்களாக பலர் இந்த சமூகத்தை உயர்த்தி உள்ளனர். நிறுவனங்களான அவர்கள் செயற்பட்டுள்ளனர். அவர்களை மலையக புத்தி ஜீவிகள் திரை விலக்கி வெளிச்சம் போடல் வேண்டும்.

# ஆமை மீதேறி பயணம் செய்யும் "ஆக்ராஸ்" கல்வி அபிவிருத்தி

கல்வி அபிவிருத்தியிலும், ஏனைய துறைகளிலும் பின் தங்கிய ஒரு பிரதேசமாக 'ஆக்ராஸ்' எனப்படுகின்ற ஹோல்புறூக் பிரதேசம் விளங்குகிறது. மக்களின் போதிய அளவு விழிப்புணர்வின்மை தலைமைத்துவங்களும் உரிய முறையில் இப் பிரதேச அபிவிருத்தி இன்மை பற்றி வெளிப்படுத்தாமை அல்லது துடிப்பான அரசியல் தலைவர்கள் இப்பிரதேசத்தில் தோன்றாமை போன்ற இன்னோரன்ன காரணங்களை இதன் பேரில் கூற இயலும்.

வாக்குவங்கிகளாக இப்பிரதேசம் காணப்பட்டாலும் கூட தோட்டத்து 'வெள்ளை வேட்டி' த்தலைவர்கள் சாராயத்திற்கு துணை போன கூட்டத்தினராக மாறி வருகின்றமை இச்சமூகத்தின் சாபக்கேடாகும்.

தத்தமது இலாபங்களுக்காக சிந்திக்கின்ற கூட்டங்கள் ஒரு 'பார்' லைசனைப் பெறுவதற்கு எடுக்கின்ற பிரயத்தனத்திற்கு ஈடாக சமூக மேம்பாட்டுக்கான திட்டங்களுக்கு ஆதரவு காட்டுவதில்லை. மிகவும் மெதுவான போக்குவரத்து பிரதான நகர்களுடனான தொடர்புகள் மேலும் விருத்தி செய்யப்படாதிருப்பது. அது பற்றி அரசியல்வாதிகள் அக்கறைப்பட்டாலும் தனியார், அரசு போக்கு வரத்துக்களின் கெடுபிடி போக்குவரத்தை மேலும் சீரழிக்கின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் இப்பிரதேச கல்வி பற்றி கூறத் தேவையில்லை. விசேட வெளிநாட்டு செயற்றிட்டங்கள் மூலமே ஏதாவது இப்பிரதேசத்தில் நடந்துள்ளது. மற்றும்படி வெறும் அரச செயற்றிட்டங்கள் இப்பிரதேச பாடசாலைகளில் பெரிதாக இடம் பெறவில்லை.

G.T.Z எனும் ஜேர்மனிய உதவித் திட்டம், 'சீடா' எனும் சுவிடன் அபிவிருத்தித் திட்டம் இப்பிரதேச கல்வி அபிவிருத்திக்கு அவசியமாகும். இதில் சீடா திட்டம் 1988 இல் இப்பகுதிக்கு வரவிருந்தது. முன்னாள் வட்டாரக் கல்வி அதிகாரியும், சீடா செயற்திட்ட அதிகாரியுமான ஏ. இராஜகோபால் 1988 அளவில் இப்பிரதேசத்திற்கு வருகை தந்து இது குறித்து விளக்கினார். ஆனால் பின்னர் இத்திட்டம் கொத்மலைக்கு மாற்றப்பட்டது.

அன்று மத்திய மாகாண கல்வி அமைச்சராகப் பதவி ஏற்றிருந்த இராமநாதன் தொண்டமானை சந்தோஷப்படுத்தும் பொருட்டு அவரது பிரதேசமான இறம்பொடைப் பகுதிக்கு உதவும் வகையில் உரிய அதிகாரிகளினால் நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டது.

இதன் பின்னர் இச் செயற்றிட்டம் இப்பிரதேசத்திற்கு பல ஆண்டுகளுக்குப் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டு சில பாடசாலை கள் உள்வாங்கப்பட்டமை குறிப்பிடப்பட வேண்டியதே என்றாலும் இப்பிரதேசத்திற்கு ஒரு முழுமையான விரைவுத்திட்டம் என்பது கனவாகவே உள்ளது. அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள லீட் அல்லது நிட் நிறுவன நிதிமூலம் சில பாடசாலைகள் நன்மை பெற உள்ளன.

இதே போல் RIERP (ரீப்) எனும் சீடா செயற்றிட்டம் மீள பராமரிப்பு வேலைகளுக்காக உதவ முன் வந்துள்ளது. 2006 இல் மத்திய மாகாண கல்வி அமைச்சு பத்துப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம் டயகம ஹோல்புறூக் பிரதேசத்திற்கு கல்வி அமைச்சரால் அறிமுகம் செய்யப்பட இருந்த வேளையில் திட்ட அதிகாரிகள் அத்திட்டத்தை மஸ்கெலியாவுக்குக் கொண்டு சென்று விட்டனர்.

1988 ஆம் ஆண்டுகளில் சீடா செயற்றிட்டத்திற்கு நடந்ததே 2006 இல் மீண்டும் நடந்தேறி உள்ளது. எனினும் கல்வி அமைச்சர் 2007 இல் டயகம ஹோல்புறூக் பிரதேசத்தில் பத்து பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய உறுதி பூண்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

ஹோல்புறூக் பிரதேச பாடசாலைகளின் தரம் உயர்த்தப் படல் வேண்டும். இங்கே பின்வருமாறு பாடசாலை பிரிவுகள் உள்ளன.

| பாடசாலை வகை | தொகை |
|---|---|
| 1AB | இல்லை |
| 1C | 04 |
| தரம் 2 | 07 |
| தரம் 3 | 27 |
| மொத்தம் | 38 |

இங்கே 1 ஏ, பி பாடசாலை அதாவது தரம் 12, 13 கணித விஞ்ஞான பிரிவு ஆரம்பிக்கப்படல் வேண்டும். தரம் 2 பாடசாலைகளும் மேலும் கூட்டப்படல் வேண்டும். டயகம தமிழ் வித்தியாலயம், பிரஷ்டன் தமிழ் வித்தியாலயம், கிளன் ஈகல்ஸ் தமிழ் வித்தியாலயம், தங்கக்கலை இல 1 தமிழ் வித்தியாலயம் போன்றன தரம் இரண்டுக்கு உயர்த்தப்படல் வேண்டும். அதாவது வகுப்புக்கள் தரம் 11 வரை வைக்கப்படல் வேண்டும். லிப்பக்கலை பிரதேசத்திலும் ஊட்டுவள்ளி பிரதேசத்திலும் தரம் ஒன்பது (தரம் 2) வரையிலான பாடசாலைகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

சந்திரிகாமம் பிரதேசத்தில் சந்திரிகாமம் தமிழ் வித்தியாலயம் தரம் ஒன்பது வரை தரம் உயர்த்தப்படல் வேண்டும். டயகம ஈஸ்ட் தமிழ் வித்தியாலயம் 1 சி ஆக தரம் உயர்த்தப்பட்டு கலை பிரிவு ஆரம்பிக்க வாய்ப்புண்டு. மராயா தமிழ் மகா வித்தியாலயம், ஹோல்புறூக் தமிழ் மகா வித்தியாலயம், அக்கரப்பத்தனை தமிழ் மகா வித்தியாலயங்களில் ஏதாவது உயர்தரப் பிரிவுகள் கணிதம் /விஞ்ஞானம் /புதிய பாடநெறிகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

குறிப்பாக ஹோல்புறூக் தமிழ் மகா வித்தியாலயம் விஞ்ஞான / கணித பிரிவு ஆரம்பிக்க பொருத்தமான பாடசாலையாக உள்ளது. மேலும் மன்றாசி பிரதேசத்தில் கிளன்லியோன் தமிழ் வித்தியாலயம் தரம் 2 வரை கொண்டு செல்லப்படல் வேண்டும். தரம் 3 இல் உள்ள 29 பாடசாலைகளின் தொகை படிப்படியாக அபிவிருத்தி செய்யப்பட்டு இத்தொகைகுறைக்கப்படல் வேண்டும்.

மிக மோசமான நிலையில் உள்ள நட்போன் தமிழ் வித்தியாலயம் மோனிங்டன் தமிழ் வித்தியாலயம், யரவில் தமிழ் வித்தியாலயம், கலிடோனியா தமிழ் வித்தியாலயம், ஊவாக்கலை இல 2 தமிழ் வித்தியாலயம் என்பவற்றுக்கு புதிய கட்டிடங்கள் தேவைப் படுகின்றன.

லோவர் கிரேன்லி தமிழ் வித்தியாலயத்தில் உடையும் நிலையிலுள்ள கட்டிடம் அகற்றப்படல் வேண்டும். தோன்பீல்ட் த.வி.கிளைஸ்டேல் தமிழ் வித்தியாலயம் இரண்டும் இணைக்கப்பட்டு வகுப்புக்கள் 9 வரை கொண்டு செல்ல ஆவன செய்யப்படல் வேண்டும். இதே போன்றே அப்பர் கிரேன்லி த.வி., டெல் த.வி இணைக்கப்பட்டு புதிய கட்டிடங்களுடன் தரம் 9 வரை கொண்டு செல்லப்படல் வேண்டும்.

மேற்குறித்த ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த ஆசிரியர் ஆளணி தேவை. ஹோல்புறூக் பிரதேசத்திற்கு 269 ஆசிரியர்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர்.

| பாடங்கள் | ஆசிரியர் தொகை |
|---|---|
| ஆரம்பக் கல்வி | 76 |
| கணிதம் | 19 |
| விஞ்ஞானம் | 19 |
| ஆங்கிலம் | 48 |
| தமிழ்மொழி | 15 |
| சமூகக்கல்வி | 14 |
| மனைப்பொருளியல் | 09 |
| வர்த்தகம் | 11 |
| விவசாயம் | 06 |
| சித்திரம் | 11 |
| சங்கீதம் | 09 |
| நடனம் | 05 |
| உடற்கல்வி | 09 |
| இந்து சமயம் | 07 |
| றோ.கத்தோலிக்கம் | 06 |
| றோ.கத்தோலிக்கம் (அல்லாதது) கிறிஸ்தவம் | 05 |

மேற்குறிப்பிட்ட தேவைகள் மேலும் அதிகரிக்கலாம். அதாவது பாடசாலைகளின் தரம் உயர்த்தப்படும் வேளையில் அதற்கேற்ப ஆசிரியர் தேவைகள் அதிகரிக்கும் க.பொ.த உயர்தர கணி/விஞ்ஞான பிரிவுகள் க.பொ.த உயர்ந்த வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படும் வேளையில் அப்பாடங்களுக்குரிய ஆசிரியர்கள் தேவைப்படுவர்.

நுவரெலியாவின் மூன்று தமிழ் கோட்டங்களுக்கும் ஏறத்தாழ 610 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். எனினும் இதில் மிகக் கூடுதலான தொகையினரான 269 ஆசிரியர்கள் ஹோல்புறூக்கிற்குத் தேவைப்படுகின்றமை விசேடமாகக் குறிப்பிட வேண்டிய அம்சமாகும்.

கட்டட தளபாட உபகரண வசதிகள்யாவற்றையும் பெருந் தோட்டப் பாடசாலைகளின் பிரிவு (Plantation Schools Unit), SEMP எனப்படுகின்ற (Secondary Education Modernization Project), GT2 எனும் ஜேர்மனிய செயற்திட்டம், Jica எனப்படும் யப்பானிய செயற்றிட்டம் I.C.T எனப்படும் தொடர்பாடல் அமைச்சு, கல்வி உயர்கல்வி அமைச்சு மாகாண கல்வி அமைச்சு போன்ற நிறுவனங்களினதும் அமைச்சுகளினதும் ஊடாக எமது மலையக

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஒருங்கிணைந்து தயாரித்த ஒரு திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ள அரசுக்கு அழுத்தம் கொடுத்தல் வேண்டும்.

2015 இல் உலகில் அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்ற கோஷம் சர்வதேசத்தில் ஒலித்தாலும் இலங்கையில் பாகுபாடான நிலையே காணப்படுகின்றது. வடக்கு கிழக்கிற்கு ஆறாயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். மலையகத்துக்கு நான்காயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மூல ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் சிங்கள மொழி ஆசிரியர்கள் 10,000 க்கு மேல் மேலதிகமாக உள்ளனர். இந்நிலையில் 'அனைவருக்கும் கல்வி' எனும் இலங்கை அரசின் கொள்கை வகுப்பாளர்களின் இலக்கு அடையப்பட வேண்டுமானால் மலையகக் குழந்தைகளின் கல்வியும் பொதுப்படையாக தமிழர் தம் கல்வி தேசிய ரீதியாக தரம் பெறல் வேண்டும்.

இங்கு குறிப்பாக நாம் குறித்துக் காட்டும் 'ஆக்ராஸ்' எனும் பிரதேச கல்வி அபிவிருத்தி அடைய இப்பிரதேச மக்களின் அரசியல்வாதிகளின் / மக்கள் பிரதிநிதிகளின் மனபாங்கு மாற்றம் அடைதல் வேண்டும். பெற்றோர், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கல்வி தொடர்பான ஓர் இலக்கோடும் தூர தரிசனத்தோடும் செயற்படல் வேண்டும்.

வெறும் தோட்டத் தொழிற்சங்க கண்ணோட்டம் எமது கல்வி அபிவிருத்திக்கு ஒரு தடைக்கல்லாகவே உள்ளது. சங்கம் வளர்க்கும் நோக்கோடு மாத்திரம் பாடசாலைகளை அமைத்தல் வாக்கு வங்கிகளை திருப்திப்படுத்த மாத்திரமே உதவும். பொது அபிவிருத்தி, பொது நோக்கு பொதுவான பொருத்தமான இடத்தில் கல்லூரிகளை/ பாடசாலைகளை அமைக்க முன் வருதல் எம் எண்ணக்கருத்தில் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும்.

எந்த ஒரு விடயத்தை அணுகும் போதும் அதைத் தனித்தனி தொழிற்சங்க பார்வையில் அணுகாது மலையகத்தின் பிரதேச மக்களின் நலன் கருதி அணுகுதல் சிறந்தது. குறிப்பாக எமது 'ஆக்ராஸ்' பிரதேசம் காலங்காலமாக புறக்கணிக்கப்பட்டே வருகின்ற ஒரு பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் கடமை புரியும் அதிபர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் விசேட சலுகை, முன்னுரிமை வழங்கப்பட வேண்டியவர்கள். ஆனால் அவ்வாறு கடமை புரிந்தவர்களையும் கணிப்பில் கொள்ளாமை கவலை தருகிறது.

அது தொடர்ந்த வண்ணமே உள்ளது. நேர்மையாக, உண்மையாக இப்பிரதேசத்தில் சேவை செய்தோரை விட வேறு பிரதேச அதிபர்களே காலங்காலமாக நன்மைகளைப் பெற்று வருகின்றனர்.

உயர் அதிகாரிகளால் இப்பிரதேச நிலைமைகள் முழு மையாக இன்னும் வெளிக்கொணரப்படவில்லை. இப்பிரதேசத்தின் பாடசாலைகளின் வளர்ச்சியை நேர்மையுடன் பார்க்கும்போது சில அதிபர்களின், ஆசிரியர்களின் உழைப்பு புரிகின்றது, தியாகம் தெரிகின்றது.

கடந்த இருபது வருடங்களில் டயகம ஈஸ்ட் த.ம.வி. டயகம வெஸ்ட் இல.2 த.ம.வி, அக்கரப்பத்தனை த.ம.வி டயகம த.வி.ஹோல்றூக் த.ம.வி, மராயா த.ம.வி, ஆர்ட்லோ த.வி, லோவர் கிரேன்லி த.வி, அல்பியன் த.வி, தங்கக்கலை இல.1 த.வி. போன்ற பாடசாலைகளின் அபிவிருத்தியில் அங்கு கடமை புரிந்த அதிபர் களின் பாரிய பங்களிப்பைக் காணலாம்.

## அதிபர் ஆசிரியர்களிடையிலான நல்லுறவே பாடசாலையை அபிவிருத்தி அடையச் செய்யும்

பாடசாலைகளின் அபிவிருத்திப் பற்றி நோக்கும் பொழுது அங்கு அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், பகுதித் தலைவர்கள் ஆகியோர் உள்ளடக்கப்படுகின்றனர். ஆசிரியர்களிடையே இருக்க வேண்டிய தொடர்பாடல், சமூக உறவு பற்றி ஆராய வேண்டியது அவசியம். மலையகப் பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர்களிடையே எவ்வகையான உறவு நிலை காணப்படுகின்றது என்பதை பொறுத்தே பாடசாலைகளின் அபிவிருத்தி தங்கி உள்ளது எனலாம்.

கணவன் மனைவியிடையே காணப்படக்கூடிய உறவுகளில் ஏற்படும் 'பழுது' பிள்ளைகளின் வாழ்க்கையை பாதிப்பதை சாதாரண வாழ்க்கையில் நாம் கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது.

இதுபோன்றதொரு நிலை அதிபர் ஆசிரியர்களிடையே ஏற்பட்டால் அப்பாடசாலை மாணவர்களின் கல்வி நிச்சயம் பாதிப்படையச் செய்வதாக இருக்கும். பாடசாலை என்ற நிர்வாக கட்டமைப்பில் ஒரு வலைப்பின்னல் போல் பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், பாட இணைப்பாளர்கள், ஆசிரியர்கள் என்போர் உள்ளனர்.

இவர்களின் வாடிக்கையாளர்களாக இருப்பவர்கள் மாணவர்களே. மாணவர்கள் என்ற மையப் புள்ளியை அடிப்படையாகக் கொண்டே அனைத்து கல்வி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அவர்களின் தேவையை அறிந்து திருப்திப் படுத்துவதே கல்வி எனும் பாடசாலை நிறுவனத்தின் நோக்கமாகும்.

ஒரு சில பாடசாலைகளிலுள்ள அதிபர்களின் ஆளுமை இன்மை மற்றும் தமது இயல்பான குணாதிசயங்கள் காரணமாகவும் ஆசிரியர்களுடனான உறவை வளர்த்துக் கொள்வதில்லை. ஜனநாயக தலைமைத்துவப் பண்பை வளர்த்து கொள்ளாத கர்வம், அதிகார வெறியும், அதிகார துஷ்பிரயோகமும் கொண்ட எதேச்சதிகார அணுகுமுறைகளினால் ஆசிரியர்களின் உள்ளத்தை வெற்றி கொள்ள முடியாத அதிபர்கள் சிலர் மலையகப் பாடசாலை களில் உள்ளனர்.

இதனால் இப்பாடசாலைகளில் சேவை ஆற்றும் ஆசிரியர்கள் மன விரக்தியுடன் அப்பாடசாலைகளுக்கு காலையில் காலடி எடுத்து வைக்கின்றனர். இப்பாடசாலைகளில் ஆசிரியர்கள் மேலதிக வேலைகள் செய்யாதவர்களாக உள்ளனர். பாடசாலையின் நிகழ்வுகளில் கடமைக்காக கலந்து கொள்கின்றனர். இவ்வாறான நிலை தொடரும் போதே மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

தத்தமது முழு நேரத்தையும் பாடசாலைகளின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிக்க வேண்டியது ஆசிரியர் தொழிலின் தாரக மந்திரமாகும். அதிபரின் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு இயைந்து போகாத ஆசிரியர்கள் காலப் போக்கில் அவரை 'காக்கா' பிடித்தாவது காரியம் பார்க்க விழைவர். சில அதிபர், ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுகின்றனர்.

மலையகத்தின் அரசியல் வரலாற்றில் 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் படிப்படியாக இந்நிலைமை அதிபர், ஆசிரியர்களையும் பீடித்துள்ளது. இதனால் பாடசாலையின் கல்வித் தர அபிவிருத்திக்கு 'ஏதாவது' நடப்பின் அது ஒருவகையில் பாராட்டத்தக்கதே. பாடசாலை அபிவிருத்திக்கான 'பணம்' அரசியல்வாதிகளான மக்கள் பிரதிநிதிகளிடமே உள்ளது என்பது யதார்த்தமாகும்.

ஆனால் அதிபர், ஆசிரியர்களின் முழு நேர அரசியல் ஈடுபடும் 'பகுதி நேர' பாடசாலை தொழிலிலும் காலப்போக்கில் அதிபர் ஆசிரியர்களிடையே விரிசல்களை தோற்றுவிக்கின்றது. அரசியல் உப்பை போன்றது உணவுக்கு உப்பு அவசியமே. அதுவே கூடிப் போனால் உணவை உண்ணல் இயலாது. இது போன்றதே மலையக பாடசாலைகளுக்கான அரசியல் ஈடுபாடும்.

தத்தமது பாடசாலையின் பொது வேலைத்திட்டத்திற்காக செயற்றிட்டத்தோடு இணைந்து பங்காளியாகும் ஆசிரியர்கள் எதையும் பாடசாலை நலனுக்கே பயன்படுத்துவர். தத்தமது நலன்களுக்காக அல்ல. பாடசாலை எனும் நிறுவனத்தில் இந்த விடயம் தெளிவுப்படுத்தப்படல் வேண்டும். தத்தமது பலவீனங்கள் தத்தமது பலம் சமப்படுத்தப்பட்டு பொது இலக்கிற்காக இசைவாக்கப்படல் வேண்டும். பலம் பாடசாலை விருத்திக்கு பயன்படுத்தப்படலாம். பலவீனங்கள் அதிபர், ஆசிரியர் உறவை பாதிக்கவே பயன்படும்.

எனவே இவ்வாறான குறைபாடுகளை நீக்கி நம்பகத் தன்மையோடும் விட்டுக் கொடுத்தும் கலந்து பேசியும் சைகை கூறும் வகையிலும் ஆசிரியர், அதிபர் ஒரு பொது நோக்கோடு செயற்படுவர் எனின் அதிபர், ஆசிரியர்களிடையே 'விரிசல்' ஏற்படாது, திறந்த தன்மையுடனான நிதி விடயங்கள் ஓர் அதிபரை தலை நிமிர்ந்து நிற்கச் செய்யும், பரஸ்பரம் உறவுகள் நெருக்கம் அடையும்.

ஆசிரியர்களின் பாடம் தொடர்பாகவும், பாடசாலையின் புறக்கிருத்திய செயற்பாடுகளினூடாகவும் ஆசிரியர்களை அதிபர் தமது முகாமைத்துவ பின்னலுக்குள் கொண்டு வர இயலும். அவ்வகையில் முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதுடன் தேவையான வளங்களை வழங்குவதன் மூலமாகவும் ஆலோசனை களையும் வழிகாட்டல்களையும் செய்வதன் மூலமாகவும் பாடசாலையின் கல்வித்தர அபிவிருத்தி என்ற எண்ணக்கருவிற்கு வலுவூட்ட முடியும்.

கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமயம், வரலாறு ஆரம்பக் கல்வி என்ற துறை சார்ந்த மன்றங்களை அமைப்பதன் ஊடாகவும் மொழி தொடர்பாக வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதன் வாயிலாகவும் ஆசிரியர்களை பங்காளிகளாக்கி அதிபர் ஆசிரியர்களின் அச்சுறுத்தல், அழுத்தங்களை தணிக்க இயலும். இதனால் அதிபர், ஆசிரியர் உறவு நெருக்கமடையும்.

# மலையகக் கல்வி :
# சிந்தனைக்கும் செயலூக்கத்திற்கும் சில விடயங்கள்

எந்த ஒரு நிறுவனத்திற்கும் ஓர் இலக்குத் தேவையாகும். மூன்று வருட செயற்றிட்டங்களோ அல்லது ஐந்து வருட செயற்றிட்டங்களோ கட்டாயம் இருத்தல் வேண்டும்.

இந்நோக்கில் பாடசாலையும் உள்ளடங்குகின்றது எனலாம்.

வழமையான வேலைகளை (Route Work) செய்வதே தத்தமது கடமை எனப் பலர் எண்ணுகின்றார்கள். இதில் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளர்கள் என்பவர்கள் விதி விலக்கல்ல. எந்த ஒரு வேலைத் திட்டத்திற்கும் மேற்பார்வை அவசியமாகும். மேற்பார்வை இல்லையெனில் எந்த ஒரு வேைலத் திட்டமும் உரிய நோக்கத்தை அடைய முடியாது என்பது உண்மையாகும். எமது மலையகப் பாடசாலைகளின் வேலைத் திட்டங்களும் இதற்கு விதிவலக்கல்ல. அதிபர்கள், ஆசிரியர்கள் வேலைப்பளு என்று கூறி மேற்பார்வையை விட்டு விடுவதும் ஒரு குறைபாடாகும்.

பாடசாலை போன்ற நிறுவனங்களின் விடயங்கள் சில அதிபர்களினால் பன்முக ரீதியாகப் பார்க்கப்படுவதில்லை. ஒரு சில விடயங்கள் மாத்திரமே கவனத்தில் எடுக்கப்படுகின்றமையால் முழுமையான கற்றல் செயற்பாடுகளுக்கு குந்தகம் ஏற்படுகின்றது. சில மலையக அதிபர்கள் தத்தமது ஆளுமைக்கு இசைவான விடயங்களை மாத்திரமே வலியுறுத்துவதனைக் காணலாம். இதனால் மாணவர்களின் பல்துறை திறன்கள் மழுங்கடிக்கப்பட வாய்ப்பேற்படுகின்றது. உதாரணமாக குறித்த ஒரு பாடசாலையில் இலக்கிய மன்ற செயற்பாடுகள் வருட கணக்கில் முன்னெடுக் கப்படாதிருந்தது. அவ்வாறு எடுக்கப்பட்டாலும் அது ஆரோக்கின மானதாக காணப்படவில்லை. மற்றொரு பாடசாலையில் 'ஐயர்' ஒருவர் அதிபராக இருந்தமையால் சரஸ்வதி பூசை காலங்களில் பத்து நாளும் திருவிழா போல் முழுநாளும் பூசைகள் செய்து மாணவர்கள் தம் கற்றலுக்கு இடையூறாக இருந்தார். இதுபோன்ற தவறுகள் திட்டமிடலிலும் பன்முக பார்வையிலும் உள்ள குறைபாடுகளின் விளைவாகும்.

பாடசாலை வேலைத் திட்டத்தில் தனி நபரான அதிபர் மாத்திரமல்லாது முகாமைத்துவக் குழு போன்ற கூட்டு முயற்சிகளிலான திட்டங்கள் அவசியமாகும். மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் மாத்திரம் மாணவர் தர விருத்தியை மேம்படுத்தி விடாது. மாணவர்கள் முழுமையான அடைவை அடைந்து விட மாட்டார்கள். அவர்களை கணிப்பீடு செய்தல், பரீட்சித்தல், மீள வலியுறுத்தல் என்பன மாணவர்களை நெறிப்படுத்தும். இதற்காக நல்ல தரமான வினாத்தாள் தேவையாகும். முறைமையான, சரியான, பிழையில்லாத மயக்கமில்லாத வினாத்தாளை தயாரிப்பது என்பது ஓர் அனுபவ ரீதியாக வெளிவரும் செயற்பாடாகும். பரீட்சை முறை (Examination Pattern) தெரியாது வினாத்தாளை தயாரிக்க இயலாது. தொடர்ந்து பரீட்சை விடைத்தாள்களை புள்ளியிடச் செல்லும் ஆசிரியர்களின் உதவி இதற்குத் தேவையாகும்.

பாடசாலை கட்டமைப்பில் மனித வள முகாமைத்துவம் மிக முக்கியமானதாகும். மனித வள ஆளணி வள கட்டமைப்பு பற்றி இங்கு விசேட கவனம் செலுத்தப்படல் மிக முக்கியமாகும். இதிலும் அதிபர் மிகப் பிரதானமான இடத்திலுள்ளார். மலையகப் பாடசாலைகளில் இது தொடர்பாகப் பார்க்கலாம். ஒரு சில பாடசாலைகளே குறிப்பிடக் கூடியதாக உள்ளமை கவலைக்குரிய விடயமாக உள்ளது. பதில் கூறும் வகிபாகம் அல்லது வகை கூறும் வகிபாகம் (Accountability) பெருமளவில் குறைந்து வருகின்றதை காணலாம். இந்நிலை மாற்றப்பட (Attitude Change) அவர்களது மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட செயற்றிட்டங்கள் தேவை.

அடுத்து தொடர்ந்து கற்கும் திறன் அதிபரினால் தன்னுள் வளர்த்தெடுக்கப்பட சுய தேடல் அவசியமாகும். ஆசிரியர்கள் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். தொடர்ந்து இந்நிகழ்வு நிகழ வேண்டும். பாட ரீதியாக கற்பித்தல் வித்தியாசப்படலாம். மொழியை கற்பிப்பதற்கும் விஞ்ஞான, கணித பாடத்தை கற்பிப்பதற்கும் வேறுபாடு இருக்கலாம்.

கற்பித்தல் முறைமைகள் நாளுக்கு நாள் மாறி வருகின்றன. அதிபர்கள் புதிய முறைகளை அறிமுகப்படுத்தவும் ஆசிரியர்கள் புத்தம் புதிய முறைகளை கண்டறியவும் விழைதல் வேண்டும்.

பாடக்குறிப்புகளை தயாரிக்கும் பொழுதே பாடம் நடத்துவது தொடர்பாக சிந்தித்தல் வேண்டும். ஆரம்பக் கல்விக்கு (தரம் 1-5) மாத்திரமல்ல எல்லா வகுப்புகளுக்குமே குறித்த கற்பிக்கச் செல்லும் 'அலகு' தொடர்பான ஒரு முன்னோட்டமான சிந்தனை கொஞ்சமேனும் தேவை. வழிகாட்டல்கள், பயிற்சிகள், ஊக்கு விப்புக்கள் மேலும் கற்பித்தலைத் தூண்ட வழி செய்யும். மலையகப் பாடசாலைகளில் மேற்கண்ட விடயங்கள் அமுலாக வேண்டுமெனில் பாடசாலை ஒரு மகிழ்ச்சிகரமான உற்சாகமான இடமாக மாற்றம் பெறல் வேண்டும்.

தொடர்ந்து கல்விப் பணிப்பாளர்கள் அதிபர்களை குறை கூறுவதனாலும், அதிபர்கள் ஆசிரியர்களை 'வதைப்பதனாலும்' ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எரிச்சலூட்டுவதனாலும் எதுவும் நடந்து விடாது. இந்தக் கல்வி பணியில் நேர்மை தேவை. அர்ப்பணிப்பு தேவை, தியாக உணர்வு தேவை, தொழிலின் மீது பற்றும், சேவை உணர்வும், பொறுமையும், சகிப்புத் தன்மையும், உளவியல் அறிவும், ஆத்மார்த்த ரீதியான உணர்வும் தேவை.

முதலில் பெற்றோர் முதல் அனைவரும் குறை காண்பதை விடுத்து பொதுவான ஒரு சிந்தனைத் தெளிவுக்கு வரல் வேண்டும். அரசியலாளர்கள், பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து செயற்படும் ஒரு 'நோக்கு' எமது மலையகத்தில் தேவை. மாணவர்கள் எமது அடிப்படை வளம் என்பதனை ஏற்று செயற்படல் வேண்டும்.

பாடசாலைகள் கோவைகளால் நிரம்பிய ஒரு அலுவலகம் அல்ல. பாடசாலைகள் உயிர்த்துடிப்புடன் ஜீவன்கள் உலாவும் கலைக்கூடங்களாகும். மலையகப் பாடசாலைகளில் வேகமானதும் விவேகமானதுமான உடனடி செயற்றிட்டங்கள் தேவையாகும். அரசியலாளர்கள் விழாக்களில் பங்கெடுப்பதனாலும், பேசுவதினாலும் சிந்தனை மாற்றம் கல்வியியலாளர்கள் மத்தியில் ஏற்பட்டு விடாது என்பதனை உணர்வது நல்லது. நேர்மையான கல்விய லாளர்களை இனங்கண்டு அவர்களை வளர்த்தெடுப்ப துடன் (Voucher) உறுதிச் சீட்டுக்காக அலையும் கூட்டத்தினரை ஒரு நிலையில் வைத்தல் வேண்டும்.

மலையகப் பாடசாலைகளில் இன்று பெருமளவில் 99% கடமை புரிவது மலையகத்தவர்களே எனின் இது எமது சமூகப் பிரச்சினையாகும். எனவே 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்றுதான் கேட்கத் தோன்றுகின்றது.

# மலையகத்தில் பிரபல பாடசாலைகள் உருவாக்கப்படல் வேண்டும்.

சிறந்த பாடசாலைகள் அல்லது பிரபல பாடசாலைகள் பற்றி சிந்திக்கும் பொழுது மலையகப் பாடசாலைகளில் அது தொடர்பாக எண்ணுவது இயல்பே. ஒரு பாடசாலை பிரபல பாடசாலையாக கணிக்கப்படுவது எவ்வாறு...? வினைத்திறனும் விளைதிறனும் உள்ள பாடசாலை எவ்வாறு அளவிடப்படுகிறது என்ற வினாக்கள் எம்முள் அவ்வப்பபோது எழும்.

உறங்கும் பாடசாலைகள், உயிர்ப்புடன் இயங்கும் பாடசாலைகள், உயிரோட்டமுள்ள பாடசாலைகள் என பலவாறாக பாடசாலைகளை கல்வியியலாளர்கள் கூறுவதுண்டு. சிலரின் கைகளில் சென்ற பாடசாலை 'செத்து விடுவதுண்டு. அதாவது செத்தவன் கையில் வெற்றிலை பாக்கை கொடுத்தது போல, செயலாற்றல் மிக்க தலைமைத்துவமே சிறந்த தலைமைத்துவமாக முடியும்.

அவர்களினாலே நல்ல பாடசாலைகளை உருவாக்க முடியும். தூர நோக்கும் (Vision) பணிக்கூற்றும் (Mission) இணைந்த பாடசாலை வேலைத்திட்டம் அவசியம். இதனை அனைத்து ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும் அறிந்து உணர்வுபூர்வமாக ஏற்று தத்தமது செயற்றிட்டங்களை அதனை செயற்படுத்துவதற்கான முன்னெடுப்புகளாக கொண்டு செல்ல வேண்டும்.

கலைத்திட்ட முகாமைத்துவ கட்டமைப்பு மேற்பார்வை பின்னூட்டல் (Feed Back) பரிகாரக் கற்பித்தல், மேலதிக கற்பித்தல் செயற்பாடுகள், விசேட தேவையுடையோருக்கான செயற்றிட்டம் பாடசாலையின் அடைவு மட்டம் உயர வழிவகுக்கும். பாடசாலைகளின் வெளியீடுகள் (Out Put) பாடசாலை பற்றிய ஒரு கணிப்பை, ஈர்ப்பை ஏற்படுத்த காரணங்கள் ஆகின்றன. பாடசாலையின் கலைத்திட்டச் செயற்பாடுகள் பாடசாலையின் வெற்றிக்கு மையமாக உள்ளன.

கனிஷ்ட பாடசாலைகளில் (தரம் 1-5) புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு க.பொ.த சாதாரண தர பாடசாலைகளில் புலமைப் பரிசில் பரீட்சையும் க.பொ.த சாதாரண தரப் பெறுபேறும்

க.பொ.த உயர்தர பெறுபேறும் (உயர் தரப் பாடசாலைகளில்) சமூகத்தில் அப் பாடசாலை பற்றிய ஒரு கணிப்பைப் பெறுகின்றன.

அத்துடன் அப்பாடசாலைகளின் இணைப்பாட விதான செயற்பாடுகள் மற்றொரு வகையில் குறித்த பாடசாலை சமூக மதிப்பீட்டைப் பெறுவதில் முன் நிற்கின்றன. (தமிழ், ஆங்கில மொழித்தினப் போட்டிகள்) விளையாட்டுப் போட்டிகள், மாகாண தேசிய ரீதியிலான பெறுபேறுகள் குறிப்பிடப்பட வேண்டியவை. சாரணியம், பெண் சாரணியம், சுற்றாடல் செயற்பாட்டு பெறுபேறுகள் பாட ரீதியான அமைப்புகளின் செயற்பாடுகள் சமூக , விஞ்ஞான, சமய, கணித, இலக்கிய மன்ற நிகழ்வுகள்) பாடசாலைக்கு வலு சேர்க்கின்றன.

அண்மைக்காலமாக புதியன கண்டு பிடிப்பாளர் அமைப்புகளின் (New inventors Club) கண்காட்சிகள், கண்டுபிடிப்புகள் புதிய ஆக்க முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதாக உள்ளன. இவைகள் மாணவர்களிடையே உறங்கிக் கிடக்கும் புதிய சிந்தனைகளை வெளிக் கொணர தூண்டியாக உள்ளன.

மேலும் மாணவர்கள்தம் எழுத்து, இலக்கிய ஆக்க முயற்சிகளான கை ஏடுகள், வெளியீடுகள், சுவர்ப் பத்திரிகைகள், சிறு பிரசுரங்கள், பத்திரிகைகள், ஓவிய கண்காட்சிகள் கைப்பணி முயற்சிகள் போன்ற இன்னோரன்ன விடயங்கள், பாடசாலை சமூக மதிப்பீட்டைப் பெறும், சமூக கணிப்பைப் பெறும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

எனவே மலையகப் பாடசாலைகளில் பயன்தரும் பாடசாலைகள் உருவாக பன்முக ஆளுமை கொண்ட அதிபர்கள் உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும். கலைத்திட்டம், இணைப்பாடவிதானம், புதிய கல்வி, சீர்திருத்தங்கள், மாற்றங்கள் பற்றிய அறிவும் நவீன கல்வியியல் தொடர்பாக தன்னை மாற்றத்திற்கு இயைபாக்கிக் கொள்ளும் தலைமைத்துவமும் அவசியமானதாகும்.

## ஒரு பாய்ச்சலைப் போன்ற விரைவு கல்வி அபிவிருத்தியே நுவரெலியாவுக்குத் தேவை

*தேசிய ரீதியாக இலங்கையின் கல்வி நிலையை பார்க்கும் போது நுவரெலியா மாவட்டம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு அண்மிய நிலையிலேயே உள்ளதாக கல்வியியலாளர்கள் கூறி வருகின்றனர்.*

*அண்மைக்கால க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் இதற்கு சான்றாதாரங்களாக உள்ளன. மத்திய மாகாண ரீதியான பகுப்பாய்வும் நுவரெலியா மாவட்டம் தொடர்பாக இவ்வாறான சான்றாதாரங்களையே தந்துள்ளது. இந்நிலையில் நுவரெலியா கல்வி வலயம் தொடர்பாக சில விபரங்களை பார்ப்பதன் மூலம் இந்நிலைக்கான காரணங்களையும் கண்டறியலாம்.*

*நுவரெலியா கல்வி வலயத்தில் நான்கு கோட்டங்கள் உள்ளன. அவை :-*

1. **நுவரெலியா கோட்டம் I (நுவரெலியா)**
2. **நுவரெலியா கோட்டம் II (தலவாக்கலை)**
3. **நுவரெலியா கோட்டம் III (ஹோல்புறூக்)**
4. **நுவரெலியா கோட்டம் IV (சிங்கள கோட்டத்தில்)**

*சிங்கள அனைத்துப் பாடசாலைகளும் உள்ளடங்கும்.*

*நுவரெலியா கல்வி வலயத்தில் தமிழ் மாணவர்களே மிக அதிகமாக உள்ளனர். தமிழ் பாடசாலைகளே அதிகமாக உள்ளன. விபரம் கீழே*

**கோட்டம் I** — **தமிழ் பாடசாலைகள் தொகை - 37**
**(இருமொழி பாடசாலைகள் இரண்டு)**

**கோட்டம் II** — **தமிழ் பாடசாலைகள் தொகை - 42**
**(இருமொழி பாடசாலைகள் இல்லை)**

**கோட்டம் III** — **தமிழ் பாடசாலைகள் தொகை -38**
**(இருமொழி பாடசாலைகள் இல்லை)**

**கோட்டம் IV** — **சிங்கள பாடசாலைகள் தொகை - 33**
**(சிங்கள மொழி பாடசாலைகள், நுஃஸாகிறா வித் 1 முஸ்லிம் பாடசாலை)**

பாடசாலைகளின் வகுப்புகள், தரங்களின் அடிப்படையில் கோட்ட மட்ட ரீதியாக பின்வருமாறு தமிழ் பாடசாலைகளை வகைப் படுத்தலாம்.

| **பாடசாலை வகை** | | **தொகை** |
|---|---|---|
| **கோட்டம்** I **(நு/எலியா)** | 1AB | **03** |
| | 1C | **05** |
| | **தரம் 2** | **09** |
| | **தரம் 3** | **21** |
| **கோட்டம்** II **(தலவாக்கலை)** | 1AB | **03** |
| | 1C | **05** |
| | **தரம் 2** | **08** |
| | **தரம் 3** | **26** |
| **கோட்டம்** III **(ஹோல்புறூக்)** | 1AB | **இல்லை** |
| | 1C | **04** |
| | **தரம் 2** | **09** |
| | **தரம் 3** | **25** |

**தமிழ் மாணவர்களின் தொகை**

| | |
|---|---|
| **கோட்டம்** I | **11888** |
| **கோட்டம்** II | **12930** |
| **கோட்டம்** III | **8590** |

மேற்கண்ட விபரங்களைப் பார்க்கும் பொழுது சில விடயங்கள் புலனாகின்றன.

ஆரம்பப் பாடசாலைகளே (I-5) மிக அதிகமாக உள்ளதை அவதானிக்கலாம். தரம் மூன்று பாடசாலைகள் மூன்று கோட்டங்களிலும் 72 தும், இரண்டு பாடசாலைகள் 26ம் 1 சீ பாடசாலைகள் 1யும் உள்ளன.

1AB பாடசாலைகள் அறவே இல்லாத ஹோல்புறூக் கோட்டத்திற்கு ஒரு பாடசாலை (விஞ்/கணிதம் உயர் தர பிரிவு) உடன் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியம். மேலும் இது மூன்று கோட்டங்களிலும் எல்லா வகையிலும் மிக பின்தங்கிய இப் பிரதேசத்தில் தேவையாகவும் உள்ளது.

72 ஆக உள்ள தரம் மூன்று பாடசாலைகள் தரம் இரண்டுக்கு உயர அத்தொகை குறைக்கப்படல் வேண்டும். கல்வி அதிகாரிகளினாலும் மாகாண பணிப்பாளர்களினாலும் பல பாடசாலைகள் அவ்வப்போது தரம் உயர்த்தப்பட்டு வருகின்ற போதிலும் மேலும் இது கவனத்தில் கொள்ளப்படல் அவசியமாகும். தரம் ஒன்பதுக்கு (1-9) பாடசாலை தரத்தை உயர்த்துவதன் மூலும் எமது சமூகத்தில் நிலவுகின்ற மாணவர் இடைவிலகலைக்குறைத்து மாணவர்களின் பொதுவான வகுப்புத் தரத்தை விகித ரீதியாக உயர்த்தலாம். எனினும், மறுபுறத்தில் இப் பாடசாலைகள் ஆசிரிய ஆளணி, பௌதிகவளத் தேவைகள் என்பனவற்றை எதிர் நோக்குகின்றன. தரம் உயர்த்தப்பட்ட பல பாடசாலைகள் இன்றும் இக்குறைபாடுகளுடனேயே இயங்கி வருகின்றன.

ஆசிரிய ஆளணி, பௌதிக வளத் தேவைகள் இரண்டையும் வழங்க வேண்டிய மாகாண கல்வி அமைச்சு, அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், இப்பாடசாலை தரம் உயர்த்தல் தொடர்பாக ஒருங்கிணைந்து செயற்படாததன் விளைவாகவே முறையாக இப்பணியை முன்னெடுப்பதில் பல தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

மாகாண கல்வி அமைச்சின் நிதி, 'RIERP" எனப்படும் சீடா நிறுவன நிதி, லீட் அல்லது நிட் நிறுவன நிதி ஆகியவற்றின் நிதி வளங்களும் வேறு பல தொண்டு நிறுவனங்களின் நிதி வளங்களுமே மலையகப் பாடசாலைகளின் அபிவிருத்தியில் கரிசனை காட்டி வருகின்றன எனினும் இவற்றுக்கு இடையே ஒருங்கிணைந்த செயற்றிட்டங்கள் இல்லை என்று கூறுவதற்கில்லை. எனினும் இத் தொடர்புகள் மென்மேலும் ஒருங்கிணைக்கப்படல் அவசியமாகிறது.

நுவரெலியா வலயப் பாடசாலைகளின் தரத்தை உயர்த் துவதில் எதிர்நோக்கும் மற்றொரு சவால் ஆசிரியர் பற்றாக் குறை யாகும். பாடசாலைகளை தரம் உயர்த்தும் போது விசேட பாடத்திற்கு உரிய ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்ப பாடங்கள் என்பன உதாரணங்கள்.

தரம் உயர்த்தப்பட்ட பாடசாலைகள் பல இந்த விசேட பாட ஆசிரியர்கள் இன்றியே நடத்தப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்த உண்மையாகும். நுவரஎலிய வலயத்தைப் பொறுத்தவரையில் தொண்டர் ஆசிரியர்கள் இந்த இடத்தை இட்டு நிரப்புவதைக் காணலாம்.

தொண்டர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை தொழிலாளர் சம்பளத்தில் இருந்த பிடித்து கொடுப்பதன் மூலம் பாடசாலை அதிபர்கள் வகுப்புகளை நடத்துகின்றனர. அந்தத் தொண்டர்களுக்கான பணத்தையே சூறையாடுகின்ற சில அதிபர்களும் இல்லாமல் இல்லை! ஆனால், அது வேறு விடயம். பொதுவில் தொண்டர் ஆசிரியர்களின் பணியால் பல பாடசாலைகள் மூடப்படாதுள்ளன. மேலும் பல பாடசாலைகளில் க.பொ.த உயர்தர பிரிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன இந்த நிலையில் புதிய ஆசிரிய நியமனங்கள் ஆவலோடு எதிர்பார்க்கப்படுகின்றன.

புதிய நியமனங்கள் ஊடாக பல பாடசாலைகள் பல்வேறு தர உயர்வுகளுக்கு உள்ளாக முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரிய ஆளணி இன்றி வெறுமனே தரம் உயர்த்தலும் பல பதிய பிரிவுகளை உயர்தரத்தில் ஆரம்பிப்பதும் மாணவர்களை இருட்டில் அழைத்து செல்வதைப் போன்றது.

1977 க்குப் பின்னர் அல்லது கடந்த பத்து வருடங்களில் நுவரஎலிய வலயப் பாடசாலைகள் குறிப்பாக தமிழ்ப் பாடசாலைகள் வளர்ச்சி கண்டுள்ளன என்பதை மறுத்தல் இயலாது. பௌதிக வளங்களையும், கற்றல், கற்பித்தல் உபகரணங்களையும் அவை பெற்று வருகின்றன. பல கட்டிடங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன, கட்டப்பட்டும் வருகின்றன. இந்த மாற்றங் களுக்கும் வளர்ச்சி களுக்கும் பல அரசியல் தலைவர்களும் காரணமாக இருந்துள்ளனர்.

இந்த நோக்கில் இந்தப்ப பணியில் தம்மை அர்ப்பணித்த அதிபர், ஆசிரியர்கள், அதிகாரிகள், கணக்கில் எடுக்கப்படாதது வருந்தத் தக்கது. பின் தங்கிய நு.எலிய வலயப் பிரதேச கல்வி அபிவிருத்தியில் இவர்களின் பங்களிப்புகள் ஆய்வு செய்யப்பட வேண்டியவை. இருநூறு ஆண்டு வரலாறு எம்முடையதாகிலும் எமது மலையக மக்களின் கல்வி வரலாறு மிகவும் குறுகியது. இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னரான காலத்தை நோக்கும்போது மலையகப் பாடசாலைகளின் அபிவிருத்தி, எமது மலைய மக்களுக்கான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை ஒட்டியதாகவே இருந்து வந்திருக்கிறது.

1977ன் பின்னர் மலையகக் கல்வி அபிவிருத்தி பற்றி சிந்தித்தவர்களில் அமரர் எஸ். தொண்டமான் குறிப்பிடத்தக்கவர். ஆனால் அப்பணி இன்று தொடர்ந்தும் அதே நோக்கில் முன்னெடுக்கப்படுகிறதா என்பது கேள்விக்குரியது. 1977க்குப் பின்னர் தோட்டப் பாடசாலைகளின் தேசிய மயமாக்கலோடு தேசிய கல்வித்திட்டமும் எமக்கு கிடைத்தது என்றாலும் நு.எலிய வலயப்பாடசாலைகளை பொறுத்தவரையில் ZTZ, SIDA போன்ற வெளிநாட்டு நிறுவனங்களினாலேயே ஓரளவு கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டத்தை ஏற்படுத்த முடிந்தது.

மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், மாகாண பிரதேச சபை உறுப்பினர்களும் கூட நுவரெலியா வலயப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் பங்கெடுத்துள்ளனர். எவ்வாறெனினும் ஒரு பாய்ச்சலைப் போன்ற விரைவுப்படுத்தப்பட்ட கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டமே இப்பொழுது இங்கு உடனடியாக தேவைப்படுகிறது. இதனை யார் செய்வது? கல்வி அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிபர் ஆசிரியர், கல்விப் பணிப்பாளர்களின் மொத்தமான ஓட்டு முயற்சியே இன்றைய தேவையாகும்.

# மலையகத்தின் எதிர்கால கல்வி எவ்வாறு அமைய வேண்டும்?

"பாடசாலைகளின் தரம் உயர்த்தல் தொடர்பாக ஒரு தொடர்ச்சியான செயல்திட்டம் தேவை. ஆசிரிய வளத்தை வழங்குவது இதில் முக்கியம். பல்கலைக்கழக பிரவேச வீதத்தை அதிகரிக்க இது உதவும். எனினும் மலையகக் கல்வி வளர்ச்சியின் அளவீடாக இது அமையாது"

அறிவுக்கண்களையே அவர்கள் சொன்னார்கள். அறிவு என்பது ஞானம்: அது அஞ்ஞானத்தினை அகற்றுகின்றது. மலையகம் போன்ற ஓர் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகத்தின் எழுச்சிக்கு கல்வியே உந்து சக்தி எனில் மறுப்பதற்கில்லை. இந்நிலையில் இக்கல்வி எவ்வாறு அமைதல் வேண்டும் என சிந்திப்பது பொருத்தமான ஒன்றே. மலையக கல்வி வரலாறு, இன்றைய கல்வி, எதிர்கால கல்வி என மூன்று நிலைகள் மலையகத்தின் எதிர்கால கல்வி எவ்வாறு அமைய வேண்டும் என சிந்திக்கும்போது எம் கண் முன் தோன்றுகின்றன.

எமக்கு கல்வியில் நீண்ட வரலாறு கிடையாது. பெருந் தோட்டப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பின்னர் பிள்ளைகள் தேயிலைக் கன்றுகளை சேதப்படுத்திவிடக் கூடாது என்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளே ஆரம்பப் பள்ளிகளாக இருந்தன. ஓர் ஆசிரியருடன் கணிதமும், எழுத்தும் தரம் ஐந்து வரை கற்பிக்கப்பட்டன. இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னரும் கூட மலையக கல்வி தேசிய கல்வியோடு இணையாத ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. பெருந்தோட்டத்துறை எவ்வாறு ஒரு தனியான கைத்தொழிற் துறையாகவும், அப் பிரதேசம், பிரதேச பொது அபிவிருத்தியில் உள்வாங்கப்படாததுமாக இருக்கின்றதோ, அவ்வாறே மலையக கல்வியும் தோட்டப் பள்ளிகளாக காணப்பட்டன.

தெளிவான மலையகக் கல்வி அபிவிருத்தி என்பது 1977க்குப் பின்னரே ஆரம்பமாகின்றது. 1977 இன் பின்னரான பெருந்தோட்டப் பாடசாலைகளின் தேசியமயம்: அரசியல் துறையில் ஏற்பட்ட சில மாற்றங்கள் மலையக மக்கள் பிரதிநிதிகளின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் போன்றன தேசிய கல்விக் கொள்கையில் மலையக பாடசாலைகளும் உள்வாங்கப்பட காரணமாகின. இக்கால கட்டங்களில் அறிமுகம் செய்யப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களான சுவீடன் நாட்டின் Sida செயற்றிட்டம் ஜெர்மனிய நாட்டின் GTZ செயற்றிட்டம் என்பன மலையக பாடசாலைகளின் வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பினை செய்தன.

இப் பின்னணியில் இலங்கை அரசின் முதலீடு என்பது குறைவானதே. எனவே, அடுத்து என்ன செய்வது மலையகத்தின் எதிர்கால கல்வியை எவ்வாறு வளர்ச்சியடையச் செய்வது என்பது எம்முன் உள்ள கேள்வியாகும். முதலில் எதிர்கால கல்வி எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பாக ஒரு திட்டம் தேவை. அத்திட்டம் ஐந்தாண்டு திட்டமாகவோ அமையலாம். இது எப்படி அமைய வேண்டும் என்பதை அபிவிருத்தி ஆலோசனை வடிவில் பார்க்கலாம்.

தர ரீதியான விருத்தி பற்றியே சிந்தித்தல் வேண்டும் எமது மலையக பாடசாலைகளின் கட்டமைப்பில் மாற்றம் தேவை. தற்போது 819 மலையக பாடசாலைகள் உள்ளன அவை பின்வருமாறு உள்ளன.

| | | |
|---|---|---|
| **1AB** | **-** | **17** |
| **1C** | **-** | **71** |
| **தரம் 2** | **-** | **219** |
| **தரம் 3** | **-** | **512** |

இவை மத்திய, ஊவா, சப்ரகமுவ, மேல் வடமேல் மாகாணங் களிலுள்ளவை.

தரம் 1-5 வரையிலான வகுப்புகளை கொண்ட ஆரம்ப பாடசாலைகள் தரம் ஒன்பது வரை தரம் உயர்த்தப்படல் வேண்டும். காலனித்துவ கால இப்பகுப்பு முறை நீக்கப்படல் வேண்டும். இதன் மூலம் பிரதிபலனாக பின்வருவனவற்றை எதிர்பார்க்கலாம்.

தரம் ஐந்து வரையுள்ள பாடசாலைகள் மிக உயரமான மலைகளில் பிரதான நகரத்திற்கு தூர இருக்கும் வேளையில் மாணவர் இடை விலகல் அதிகமாகவே இருக்கும். இதனை தவிர்க்கலாம். தரம் ஒன்பது வரை உயர்த்தும் போது ஓரளவு அறிவைப் பெறும் மாணவன் அடுத்த கட்டத்திற்கு கற்கச்செல்வான்.

தரம் 2 பாடசாலைகள் 1C பாடசாலைகளாக்க ஆவன செய்யப்படல் வேண்டும். அதாவது க.பொ.த உயர்தரத்தில் கலை/வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். அதுபோல் 1C பாடசாலைகள் 1 AB ஆக ஆக்கப்பட ஆவன செய்யப்படல் வேண்டும்.

பொதுவாக மலையகத்தின் 819 பாடசாலைகளில் இம்மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். இந்த இலக்கை நோக்கியதாக எமது செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.

நுவரெலியா வலயத்தை உதாரணமாக எடுத்துக் கொண்டால் பின்வருமாறு உள்ளது.

| **பாடசாலை வகை** **கோட்டம் I (நுவரெலியா)** | **தொகை** |
|---|---|
| 1AB | **03** |
| 1C | **05** |
| **தரம் 2** | **09** |
| **தரம் 3** | **21** |

**தரம் 3 (1-5) பாடசாலைகளே பாடசாலை வகையில் மிக அதிகமாக உள்ளன.**

| **பாடசாலை வகை** **கோட்டம் II (தலவாக்கலை)** | **தொகை** |
|---|---|
| 1AB | **03** |
| 1C | **05** |
| **தரம் 2** | **08** |
| **தரம் 3** | **26** |

**இங்கும் இதே நிலையே உள்ளதை அவதானிக்கலாம்**

| **பாடசாலை வகை** **கோட்டம் III (ஹோல்புறூக்)** | **தொகை** |
|---|---|
| 1AB | **இல்லை** |
| 1C | **04** |
| **தரம் 2** | **09** |
| **தரம் 3** | **25** |

**கோட்டம் (III) இல் 1AB பாடசாலை இல்லை.**
**தரம் 3 பாடசாலைகளே மிக அதிகமாக உள்ளன.**

தரம் உயர்த்தல் தொடர்பாக ஒரு தொடர்ச்சியான செயற்றிட்டம் தேவை. ஆசிரியர் வளத்தை வழங்குவதற்கு இது அவசியமாகும். பல்கலைக்கழக நுழைவு விகிதத்தினை அதிகரிக்க இது உதவும் தெரியப்பட்ட பாடசாலைகளை விருத்தி செய்தலும் அதேவேளை, ஏனைய பாடசாலைகளின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தலும் வேண்டும். குறித்த பிரதான பாடசாலை சகல வளங்களுடன் கூடியதாகவும் அதனை சூழ பல போஷிக்கும் பாடசாலைகள் உள்ளதாகவும் இம்முயற்சி மேற்கொள்ளல் வேண்டும்.

ஆசிரியர், ஆளணி தேவைகள் பாடசாலைகளின் தரம் உயர்த்தலுடன் இணைந்து செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். 2015 இல் உலகில் அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் எனும் கோஷம் ஒலித்தாலும் இலங்கையில் பாகுபாடான நிலையே காணப்படுகின்றது. வடக்கு, கிழக்கிற்கு 6000 க்கு மேல் ஆசிரியரகள் தேவைப்படுகின்றனர்.

மலையகத்திற்கு நான்காயிரத்திற்கும் மேற்பட்டோர் தேவைப்படுகின்ற அதே சமயம் சிங்கள மொழியில் 10000 மேல் மேலதிகமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. மலையகத்தின் எதிர்கால கல்வி பற்றி சிந்திக்கும் வேளையில் ஆசிரியர் ஆளணி பற்றி மத்திய அரசிலுள்ள எமது பாராளுமன்ற உறுப்பினர்களும், மாகாண அமைச்சர்களும் இணைந்து அரசிடமிருந்து அதனை பெற்றுக் கொள்ள செயற்றிட்டம் ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும்.

மேலும் பாடசாலைகளுக்கான வளத் தேவைகள் வழங்கப்பட நிதி ஒதுக்கப்படல் வேண்டும். மஹிந்த சிந்தனையின் கல்வி அபிவிருத்தி திட்டங்கள் மலையக பாடசாலைகளுக்கு சென்றடைய வேண்டும். தேசிய பாடசாலைகள் என்பது தேசிய ரீதியான அங்கீகாரத்தின் ஒரு வெளிப்பாடாகும். மலையகத்திலும் தேசிய பாடசாலைகள் செயற்படுத்தப்பட ஆவன செய்யப்படல் வேண்டும். புதிய உலகிற்கான பாடநெறிகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். மலையக மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். தொழில்நுட்ப பாட நெறிகளுக்கு அவர்கள் திசைமுகப்படுத்தப்படல் வேண்டும். ஆலோசனையும் வழிகாட்டலும் அவசியம்.

முறைசார்ந்த முறைசாரா கல்வி அவர்களுக்கு விளக்கப் படல் வேண்டும். பல்கலைக்கழகம் செல்லுதல் என்பது மலையகத்தின் எதிர்காலத் தேவைகளுள் ஒன்றாக மட்டுமே இருக்க முடியும் தவிர பல்கலைக்கழக பிரவேசமே மலையக கல்வி வளர்ச்சியின் அளவீடாக அமைய இயலாது. அதனைவிட எமது கல்வி பல்துறைசார் கல்வியாதல் வேண்டும்.

தொழில்நுட்பக் கல்லூரிகளில் எமது மாணவர்கள் தம் நுழைவு பூஜ்யமாகவே உள்ளது. நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரி, ஹட்டன் தொண்டமான தொழிற்பயிற்சிக் கல்லூரி இம் மாணவர் களை உள்வாங்கி அதன் பின்னர் அதன் பலனாக தொழில்சார் நடவடிக்கைகளில் ஈடுபட வழிகாட்ட பயிற்றுவிப்பாளர் போதிய அளவில் இல்லாததால் பல பாடநெறிகளை தொடங்க முடியாது ள்ளது. இந்திய தூதுவராலயத்தோடு கலந்து உரையாடி தொழில்நுட்ப பரிமாற்றத்திட்டத்திற்கு அமைய பலரை இந்தியாவில் இருந்து பெற முயலல் வேண்டும்.

மலையகத்தின் எதிர்கால கல்வி பற்றி சிந்திக்கும்போது அது ஊவா, சப்ரகமுவ, மேல், வடமேல் மாகாணங்களை உள்ளடக்கிய பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது கவனிக்கப்படல் வேண்டும். எனவே, இது பற்றிய ஒரு பொதுத் திட்டம் தேவை. பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரசன்னத்துடன் தயாரிக்கப்பட்டதான இத்திட்டம் தத்தமது அரசியல் வாக்கு வங்கிகளுக்காக அன்றி மலையகத்தில் பொதுக் கல்வி விருத்திக்காக தயாரிக்கப்படல் வேண்டும்.

ஒரு பொது வேலைத்திட்டத்துடனும் தூர நோக்குடனுமான இலக்குடனும் தத்தமது நிதிகளை இதற்கு உதவ அவர்கள் அரசியல், தொழிற்சங்க பிரதேச வேறுபாடின்றி முன்வரல் வேண்டும். ஒரு சில அரசியல், தொழிற்சங்க வேறுபாடுகள் இருந்தாலும் எங்களது தூரதரிசனம் ஒன்றாதல் வேண்டும்.

பின்வரும் அமைச்சுகள் கல்வி, உயர்கல்வி அமைச்சிலே உள்ளன. பல செயற்றிட்டங்கள் அங்கே நடைமுறையிலுள்ளன. இவைகளின் பயன்களை செயற்றிட்டங்களை மலையக கல்வி அபிவிருத்திக்கு பயன்படுத்திட எமது பாராளுமன்ற பிரதிநிதிகள் அழுத்தம் கொடுத்தல் வேண்டும்.

கல்வி அமைச்சிலே உள்ள பெருந்தோட்டப் பாடசாலை களின் பிரிவு பல வேலைகளை தற்போது செய்து வருகிறது. அது பின்வருமாறு (2006) இல் நிதியை மாகாண ரீதியாக ஒதுக்கி இருந்தது.

| | |
|---|---|
| **மத்திய மாகாணம்** | **140 மில்லியன்** |
| **ஊவா மாகாணம்** | **126 மில்லியன்** |
| **சப்ரகமுவ மாகாணம்** | **125 மில்லியன்** |
| **மேல் மாகாணம்** | **053 மில்லியன்** |
| **தென் மாகாணம்** | **32.5 மில்லியன்** |
| **வடமேல் மாகாணம்** | **16.5 மில்லியன்** |

2007 இல் இதன் நிதி ஒதுக்கீடுகள் மேலும் பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்க உதவும்.

தற்போது SEMP எனப்படும் (Secondary Education Modernization Project) இரண்டாம் நிலைக் கல்வி அபிவிருத்தி தொடர்பாக 2300 பாடசாலைகளை உள்வாங்கி உள்ளது. இதன் கீழ் கணனி, கணனி பிரிவு வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 10000 பாடசாலைகளுக்கு கணனி வழங்கப்பட்டுள்ளது. Internet வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தை மேலும் எமது பாடசாலைகளுக்கு விரிவுப் படுத்த முயலல் வேண்டும். GTZ எனும், ஜேர்மனிய நிறுவனத்தின் ஊடாக பின்வரும் வேலைத்திட்டங்கள் செய்யப் படுகின்றன. இதனுள் பொருத்தமான திட்டங்கள் எமது மலையகப் பாடசாலை களுக்கு செயற்படுத்தப்பட அரசியல் அழுத்தம் தேவை.

- சமாதான விழுமியக் கல்வி (Peace and value Education)
- இரண்டாம் தேசிய மொழி (Second National Language)
- பரிகார கற்பித்தல் (Remedical Education)
- உள சமூக பாதுகாப்பு (Psycho Social Care)
- அனர்த்த முற்காப்பு முகாமைத்துவம் (Disaster Risk Management)

இதில் சில எமது மலையகத்திற்கு அவசியமானவை. உதாரணமாக பரிகாரக் கற்பித்தல் மலையகத்திற்கு மிக அவசிய மானது. அது போல் போரினால் மாத்திரம் அல்லகுடும்ப நிலை, பிரிவு வறுமை காரணங்களினால் உள சமூக பாதுகாப்பு மலையகத்திற்குத் தேவையாக உள்ளது. அனர்த்த முற்காப்பு முகாமைத்துவம் மலைச்சரிவுகளில் ஏற்படும் மண்ணரிப்பு, மண் சரிவுகள் விளைவாக மலையகத்திற்குத் தேவையாக உள்ளது.

ICT எனும் தகவல் தொழில்நுட்பம் தற்போது க.பொ.த சாதாரண தரத்திற்கு ஒரு பாடமாக அறிமுகம் செய்யப்படுகிறது. 2007 இல் க.பொ.தகவல் தொழில்நுட்பம் பரீட்சிக்கப்படவுள்ளது. அதே போன்று க.பொ.த உயர்தரம் தரம் 12 இல் GIT எனப்படும் (General Information Technology) அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. இது மேலும் பல பாடசாலைகளில் குறிப்பாக அனைத்து IC பாடசாலைகளுக்கும் மலையகத்தில் வழங்கப்பட ஆவன செய்யப்படல் வேண்டும்.

முன்மாதிரி பாடசாலைகள் அமைத்தல் (Primary model Project) எமது தமிழ் பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெறாத ஒன்றாக உள்ளது. தேசிய ரீதியாக அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளுள் தமிழ் மொழி பாடசாலைகள் புறக்கணிக்கப் பட்டுள்ளன. எனவே எதிர்காலத்தில் மலையகப் பாடசாலைகளும் உள்வாங்கப்பட வழிவகை செய்யப்படல் வேண்டும். சூரியக்கதிர் மூலம் மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒரு சில தமிழ் பாடசாலைகளே உள்வாங்கப்பட்டுள்ளன. இது மாத்திரமல்லாது ஜப்பானிய "Jaica" செயற்றிட்டம் மலையகத்திற்கு மேலும் விரிவுப்படுத்தப்படல் வேண்டும். ஒரு சில பாடசாலைகளை இது உள்வாங்கிய போதிலும் எமது தேவைக்கு அதன் பங்களிப்பு போதாது என்றே தோன்றுகின்றது.

மேற்குறித்தவைகள் மாத்திரமல்லாது பின் தங்கிய மலையக த்தின் எதிர்கால கல்விக்கு அரசின் விசேட செயற்றிட்டங்கள் செய்யப்பட வலியுறுத்தப்படல் வேண்டும். விசேட நிதி ஒதுக்கீடுகள் மிக பின்தங்கியுள்ள சப்ரகமுவ, ஊவா, மத்திய பிரதேச பாடசாலை களுக்குத் தேவையாகும்.

இதற்கு மத்திய மாகாண அமைச்சுகளிடையே பரஸ்பர புரிந்துணர்வும், தொடர்பும், மிக அவசியமாகும். ஒரு பொது வேலைத் திட்டத்தை செயற்படுத்தும்போது மத்திய மாகாண அரசுகளின் தொடர்பாடல் பல விடயங்களை இலகுபடுத்தி விரைவுப்படுத்திட நிச்சயம் உதவும். இதற்கு இவ்விரு பகுதியினருக்கும் மனப்பாங்கு மாற்றம் தேவை.

மலையக பேராசிரியர்கள், புத்தி ஜீவிகள், அதிகாரிகள், அதிபர்கள், கல்விமான்களின் ஒட்டு மொத்த சிந்தனையின் தொகுப்பாக மலையகத்தின் எதிர்கால கல்வி தொடர்பான வேலைத்திட்டம் உருவாக்கப்படின் அதுவே ஓர் அடித்தளமாகக் கொள்ள வழி செய்யப்படும். மலையகத்தில் இயங்கும் பல்வேறு தொண்டர் நிறுவனங்களும் N.G.O ஏனைய சமூக நிறுவனங்களும் மலையக எதிர்கால கல்வி தொடர்பாக உதிரிகளாக சிந்தியாது, செயற்றிட்டங்களைச் செய்யாது ஒரு பொது இணக்கப்பாட்டுடனான கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டத்தை முன் வைப்பது ஒரு நல்ல சமிக்ஞையாக அமையும்.

மலையக அரசியல், தொழிற்சங்க பிரமுகர்கள் ஒன்றிணைந்து கல்வி பற்றி பொதுத் திட்டம் ஒன்று தீட்டுவதன் மூலமே மலையகத்தின் எதிர்கால கல்வியின் தலைவிதி தாங்கியுள்ளது. இன்றைய தேவை அதுவே. அவர்கள் உணர்வார்களா?

## மலையக இளம் சமுதாயத்தினருக்கு சிறந்த தொழிற்றுறை வழிகாட்டல் தேவை

மலையக மக்களின் வாழ்வியலில் புதிய மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன "வெறும் கொழுந்து கிள்ளும் கூட்டமாக மாத்திரமே பலர் இம்மக்கள் கூட்டத்தை எண்ணி இன்னும் எழுதி வருகின்றனர். ஆனால், அது தவறு என்பது அம்மக்கள் கூட்டத்தினரிடையே இன்றும் தம் வாழ்வை அமைத்துக் கொண்டோர் அறிவர். மலையக மக்களின் வாழ்வியலில் தொழில் முறையில் ஏற்பட்டு வரும் இம்மாற்றம் அவர்களுக்கு சாதகமானதாகவோ அல்லது பாதகமானதாகவோ காணப்படலாம். ஆனால் மாற்றம் நிகழ்கின்றது என்பதே இங்கே கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

பெருந்தோட்டத்துறையில் அதிகரித்து வரும் வேலை இன்மை, சம்பளக்குறைவு, வேலைநாள் குறைப்பு, அதிகரித்துவரும் விலைவாசி உயர்வு, புதிய இளைஞர் யுவதிகளுக்கு 'கொழுந்து வேலை' கவர்ச்சிகரமாக இல்லாமை, பாரம்பரியமான தோட்ட வேலை முறைமையில் ஏற்பட்டு வரும் வெறுப்பு, பெருந்தோட்டத் துறையின் சுரண்டல், தொழிற்சங்க நடவடிக்கையின் மீது ஏற்பட்டு வரும் நம்பிக்கை இன்மை தோட்ட லயன் வீட்டு முறைமையின் அவலம், தோட்டத்துறையினை தேசிய ரீதியில் சரியாக 'கணிக்காமை' போன்ற இன்னோரன்ன காரணங்கள் இம்மக்கள் இத்தொழிலில் இருந்து விலகிச் செல்ல காரணங்களாகும்.

இந்நிலையில் 1977 இல் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட திறந்த பொருளாதாரம் Open Economy அல்லது தாராள பொருளாதாரக் கொள்கையின் தாக்கங்கள் மலையகத் தினையும் பாதிக்காமல் இல்லை.

பெருந்தோட்ட மக்களின் சமூக கலாசார வாழ்வியலிலும், இக்கொள்கை தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளன. மக்களை ஆடம்பர அல்லது சுகபோக வாழ்வுக்குத் தூண்டும் அம்சங்கள் மலையகத்தையும் பாதித்தன. குற்றச் செயல்கள் அதிகரித்துள்ள அதே வேளையில் தொலைக்காட்சிச் சேவை ஆடம்பர பொருட் களின் பாவனை உ.ம் விலையுயர்ந்த அழகு சாதனப் பொருட்கள் ஆடை, அணிகலன்கள் உணவுப் பொருட்களின் பாவனை போன்றன அதிகரித்து உள்ளன. இத்தேவைகளும் இச்சமூகம் புதிய

தொழில் வாய்ப்பை நோக்கி நகர காரணமாகும். இதன் ஒரு விளைவே குறிப்பாக தாய்மாரின் வெளிநாட்டு நோக்கிய பயணங்களாகும். ஆண்களை விட பெண்களே குறிப்பாக மத்திய கிழக்கிற்கு வேலைவாய்ப்புக்காக செல்கின்றனர். வீட்டுப் பணிப்பெண்ணாக செல்லும் இவர்களினாலும் சாரதிபோன்ற தொழில்களுக்கு செல்லும் அப்பா, அண்ணாமார்களினாலும், மலையக மக்களின் குடும்ப உறவில், வாழ்வில் வாழ்க்கை முறையில் பல பிரச்சினைகள் தோன்றி உள்ளன. கணவன் வெளிநாடு சென்றதால் மனைவி வேறொரு ஆடவனை சேர்த்துக்கொண்டு வாழ்வதும் அல்லது மனைவி வெளிநாடு சென்றதால் கணவன் முறை கேடாக பெண்களுடன் தொடர்பு கொள்வதும் சாதாரணமாகி வருகின்றது.

மலையகத்திலிருந்து வெளிநாடு செல்வது ஒருபுறமிருக்க வெளி மாவட்டத்தில் வேலை செய்வதும் சாதாரணமாகி வருகின்றது. குறிப்பிட்ட வீடுகளில் தாய் இல்லாமையினாலும் அல்லது தந்தை இல்லாமையினாலும் குடும்பத்திற்கு சரியான வழிகாட்டல்கள், இல்லாது போய் உள்ளன. வெளி மாவட்டத்தில் வேலை செய்வோர். பெருமளவில் கடைகளில் அல்லது வீடுகளில் கடமை புரிவோராகவும் 'தீபாவளிக்கு' வீடு வருவோராகவுமே பொதுவாக பெருமளவில் உள்ளனர். என்பதை 'லயத்து வாழ்க்கை' முறையை அறிந்தோர்கள் நன்கு புரிந்து கொள்வர்.

அண்மையில் குறித்த ஒரு பாடசாலையில் தரம் 9அ, 9ஆ,10அ, 10ஆ, 11அ, 11ஆ போன்ற வகுப்புக்களில் வெளிநாட்டில் தொழில்புரிவோர், வெளி மாவட்டத்தில் தொழில்புரிவோர் பற்றி ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதனைப் பார்க்கும் பொழுது பலர் வெளிநாட்டிலும், வெளிமாவட்டத்திலும் பணி புரிவது தெரிந்தது. பெண்களில் பலர் வீட்டு பணிப் பெண்களாக மத்திய கிழக்கிலேயே கடமை புரிவதும் வெளிமாவட்டத்திலே கடமை புரிவோரில் பலர் கொழும்பு மாவட்டத்தில் கடமைபுரிவதும் அவர்களுள் பெரும்பாலா னோர் வீட்டுப் பணிப்பெண்களாகவும் ஆண்கள் கடைகளில் தொழில் புரிவோர்களாகவும் காணப்படுகின்றனர். எனலாம். ஆடைத் தொழிற்சாலைகளிலும் பலர் பணிபுரிகின்றனர். இவர்கள் இளம் யுவதிகள் ஆவார். இதிலும் சிற்றூழியர் நிலையிலிருந்து சற்று உயர்ந்த நிலையிலுள்ளோர் குறைவாகவே உள்ளனர். உத்தியோகத்தர் தரத்திலுள்ளோர் மிகக்குறைவு. (Staff Level) எனலாம். தொழில்நுட்ப வேலைகள் செய்வோரும் ஒரு சிலரே எனலாம்.

மற்றொரு பக்கத்தில் நோக்கும் போது ஒரு குறிப்பிட்ட வீதத்தினரே மத்திய தர வர்க்கமாக எழுச்சி பெற்றுள்ளனர். அவர்கள் தோட்ட உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகஸ்தர் களான ஆசிரியர்கள், அதிபர்கள், கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவனங்களில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் போன்றோர்களைகுறிப்பிடலாம்.

புதிதாக வெளிநாட்டிலும், உள்நாட்டிலுள்ள வெளி மாவட்டத்தில் தொழில் புரிவோர் சிற்றூழியர்களுக்கான தரத்தின ராகவே உருவாகி உள்ளனர். பெருந்தோட்டத் தொழிலாளர்கள் என்ற வேலைப்பாட்டுக்கு அடுத்து இன்று இப்புதிய கூட்டத்தினரே தோற்றம் பெற்று வருகின்றனர.


சிறு நில உடைமையாளர்கள், வர்த்தக குழுவினர் பெரிய அளவில் தோற்றம் பெறவில்லை. சிறு வர்த்தக குழுவினர் தோற்றம் பெற்றுள்ளனர். எனினும் பெரிய தாக்கத்தினை அவர்கள் ஏற்படுத்தவில்லை எனலாம். இவை யாவற்றையும் விட பல்வேறு தொழில்களில் இந்திய வம்சாவளியினரான மலையக மக்கள் பணியாற்றி வரலாம். குறிப்பிட்ட அளவு தொகையினர் மத்திய கிழக்கிலும், மற்றொரு தொகையினர் வெளி மாவட்டங்களிலும் தொழில் புரிவதும் அத்தொகை அதிகரித்துச் செல்வதும் ஓர் உண்மையாகும்.

வெளி மாவட்டங்களிலும் ஏன் மத்திய கிழக்கிற்கும் கூட முறைகேடான தொழிலுக்காக எமது யுவதிகள், பெண்கள் பயன்படுத்தப்படுகின்றார்கள் என்றொரு வினாவும் அண்மைக் காலங்களில் 'கொழும்பு' போன்ற நகரங்களில் நிகழ்ந்த நிகழ்வுகளின் விளைவாக எழுந்துள்ளது. கொழும்பு போன்ற நகரங்களில் வீட்டுப் பணிப்பெண்களுக்கு நிகழ்ந்த சம்பவங்களும் இதற்கு காரணங்களாகும். மலேசியா, சிங்கப்பூர், மத்திய கிழக்கு போன்றவற்றிற்கு சில புரோக்கர்களான தரகர்கள் பணத்திற்காக பிழையாக அவர்களைப் பயன்படுத்தலாம் என்றொரு பயமுள்ளது. பொதுவாக எல்லா சமூகங்களிலும் 'இந்த வகையான' பிரச்சினைகள் மிக நீண்ட காலத்திற்கு முன்னரே ஆரம்பித்து விட்டன என்பது ஓர் உண்மையாகும்.

இந்நிலையில் எமது மலையக சமூகத்திற்கு புதிய சந்ததியினருக்கு சரியான தொழில்முறை வழிகாட்டல் தேவைப்படுகிறது. ஆலோசனை வழிகாட்டல் தேவைப்படுகின்றது.

மலையக மண்ணிலிருந்து வெளிக்கிளம்பி மாற்றுத் தொழில்களுக்காக புறப்படும் இக்கூட்டமே எதிர்காலத்தில் சில வேளைகளில் இம்மலையகத்தின் மண்ணை வளப்படுத்தும் சக்தியாகவும் மாறலாம்.

இக்கூட்டத்தைக் தக்க வைத்து எமது பிரதேசத்திலேயே தொழில்களை உருவாக்குவதற்கான வழிவகைகள் என்ன? கடந்த காலங்களில் (CLF) Congree Labour Foundation ஹட்டன் தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம், கௌரவ பெ.இராதாகிருஷ்ணனின் அமைச்சு போன்றனவும் கொட்டக்கலை தொழிற்பேட்டை, புடைவைத் தொழிற்சாலைகள் போன்றன இச்சிந்தனைகளின் விளைவுகளாகும். எதிர்கால மலையகம் புதிய தொழில் முறைகளை நாடியே நிற்கின்றது. என்பது மட்டும் உண்மையும் யதார்த்தமுமாகும். அதனை நோக்கிய எமது சிந்தனை காலத்தின் தேவையாகும்.



# 'மொழிவரதன்'

என இலக்கிய உலகில் அறியப்பட்ட கருப்பையா மகாலிங்கம் இரண்டு முகங்களைக் கொண்டவர்.

ஒன்று அவரது தொழில்சார்ந்த உலகம். இவ்வுலகம் இவரை 'மகாலிங்கம் சேர்' என விளிக்கின்றது.

இலங்கை அதிபர் சேவையில் தரம் ஒன்றினை சேர்ந்த இவர் ஒரு பட்டதாரி, கல்வி டிப்ளோமா பெற்ற ஆசிரியர், அதிபர், வளவாளர், கோட்டக்கல்விப்பணிப்பாளர் எனப் பன்முக ஆளுமைகள் மூலம் தனது கல்விப்புல அனுபவ முத்திரைகளைப் பெற்றுக் கொண்டவர்.

அவரது கல்வி தொடர்பான அனுபவங்களின் வெளிப்பாடே கல்வியியல் கட்டுரைகள், வீரகேசரி ஞாயிறு இதழ், தினகரன் ஞாயிறு இதழ் என்பனவற்றில் இவைகள் வெளியாகி பலரது பாராட்டைப் பெற்றன.

இவரது மற்றொரு முகம் இலக்கிய உலகமாகும். பல படைப்புக்கள் மூலம் எழுத்துலகில் இவர் மிளிர்கின்றார்.

எனவே இவரது கல்வியியல் கட்டுரைகளை World Vision வெளியிடுவது பொருத்தமானதே. இவரது நூலை வெளியிடுவதன் மூலம் மலையக கல்விச் சிந்தனைக்கு மேலும் உரமூட்டுகின்றது எனலாம்.

மொழிவரதனின் பணி தொடரட்டும்.

அனுசரனை

World Vision

நுவரெலியா பிராந்திய அபிவிருத்தி திட்டம்

ISBN:978-955-0936-00-7

978-955-0936-00-7